T. 905.

LONGMANS' VERNACULAR SERIES FOR MADRAS

# SELECTIONS FROM TAMIL POETRY & PROSE

## Part II

FOR USE IN HIGH SCHOOL CLASSES

COMPILED BY

M. V. RAMANUJACHARIAR

Tamil Pandit, Government College, Kumbakonam

---

# செய்யுட்டிரட்டும் உரைநடைத்திரட்டும்

## இரண்டாம் பாகம்

கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

ம. வீ. இராமாநுஜாசார்யர்

தொகுத்தது

1918

LONGMANS, GREEN & Co.

167, MOUNT ROAD, MADRAS

BOMBAY AND CALCUTTA

# நற்சாக்ஷிப் பத்திரம்.

கும்பகோணம், நேட்டிவ்ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதராகிய மணலூர் ம-ா-ா-ஸ்ரீ இராமானுஜாசாரியர் ஆராய்ந்து தொகுத்து வெளிப்படுத்திய புத்தகத்துள்ள செய்யுட்டிரட்டையும் உரைநடைத்திரட்டையும் பார்த்தேன். இப்புத்தகத்துள்ள செய்யுட்கள் சிறந்த பலநூல்களிற் சுவையுள்ள பாகங்களிலிருந்து தொகுக்கப்பட்டு எளியநடையாகவுமிருத்தலால், பாடசாலைகளிற் படிக்குமாணாக்கர்களுக்கு மேன்மேலும் அறிவை வளர்ப்பதோடு, தமிழ்ப்பாஷைஞானத்தையும் அவர்களுக்குப் பெருகச்செய்யுமென்பதில் ஐயமில்லை; இதிலுள்ள உரைநடைகளுமிப்படியே. படிப்பவர்களுக்கு இளம்பருவத்தில் இதுபோன்ற புத்தகங்களையே பாடமாக வைக்கவேண்டுமென்பது பல விவேகிகளின் கருத்து; பற்பலவேலைகளால் அயர்ச்சியடைந்த பெரியோர்களுக்குங்கூட இஃது அவ்வயர்ச்சியைப்போக்கி மிக்க ஆறுதலையுண்டுபண்ணுமென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயமே. ஆதலால், பாடசாலைத்தலைவர்கள் இப்புத்தகத்தை அங்கீகரித்துத் தத்தம் பாடசாலைகளிற் பாடமாகவைத்துப் படிப்பிப்பார்களாயின், அது பிள்ளைகளுக்கு மேற்கூறியநன்மையைச் செய்வதன்றி, நல்லகுணமும் சிறந்தநடையும் பழைய தமிழ் நூல்களில் ஒழுங்கான பாண்டித்தியமும் விடாமுயற்சியுமுள்ள இந்த இராமானுஜாசாரியர்க்கு இன்னும் இதுபோன்ற பலகாரியங்களைச் செய்தற்குரிய ஊக்கத்தையும் அளிக்குமென்று நம்புகிறேன்.

இங்ஙனம்:
கும்பகோணம் காலேஜ்
**வே. சாமிநாதையன்**

ஸ்ரீ

# முகவுரை

நான் பல வருஷங்களுக்குமுன், 'செய்யுட்டிரட்டு' என்னும் ஒரு நூலும், 'உரைநடைத்திரட்டு' என்னும் ஒரு நூலும் தொகுத்து ஒருபுத்தகமாக வெளியிட்டிருந்தேனென்பதும் அங்ஙனம் வெளியிட்டதற்குரிய காரணங்களும் பிறவும் இதன்பின்னுள்ள அவற்றின் முகவுரைகளினால் நன்கு விளங்கும். அதன் மூன்றும்பதிப்பு 1906-ஆலத்தில் வெளிவந்தது. அந்த வருஷத்திலும் அடுத்தவருஷத் தொடக்கத்திலும் அதன் பிரதிகளெல்லாம் செலவாயின. பிறகு பற்பல பாடசாலைகளிலிருந்தும் அந்தப்புத்தகத்துக்காக லிகிதங்கள் வந்துகொண்டேயிருந்தும், நான் மஹாபாரதத்தைத் தமிழில் வசனநடையாக மொழிபெயர்த்து வெளியிடத்தொடங்கிவிட்டமையால், இந்தப்புஸ்தகத்தைப்பதிப்பிக்கவும்பிரசுரம் செய்விக்கவும் எனக்கு அவகாசம் கிடைக்காமற்போயிற்று.

இந்தப்புஸ்தகத்தைப் பலரும் விரும்புவதாகத் தெரிந்தமையாலும், மெஸ்ஸர்ஸ் லாங்மன்ஸ் க்ரீன் அண்ட் கம்பெனியார் இதனைப் பதிப்பித்து வெளியிடுவதாக ஒப்புக்கொண்டமையாலும் இதன் உரிமையை அவர்களுக்கே கொடுத்து விட்டேன். அவர்களுடைய விருப்பத்திற்கிணங்க இந்தப்பதிப்பில் சிற்சில மாறுபாடுகள் செய்திருக்கிறேன்.

முன்பு, 'செய்யுட்டிரட்டு' 500 செய்யுட்களையுடையதும் 'உரைநடைத்திரட்டு' 78-பக்கங்களையுடையதுமாயிருந்தன. செய்யுட்டிரட்டு இரண்டு பாகமாகவும் உரைநடைத்திரட்டு இன்னும் சில பக்கங்கள் சேர்க்கப்பெற்று இரண்டு பாகமாகவும் இருக்கவேண்டுமென்றும், செய்யுட்டிரட்டின் ஒருபகுதியும் உரைநடைத்திரட்டின் ஒருபகுதியும் ஒரு புஸ்தகமும் அவற்றின் மற்றப்பகுதிகள் மற்றொரு புஸ்தகமுமாக இருக்கவேண்டுமென்றும் அவர்கள் கருதியவண்ணம் சிலசில பகுதிகளைப் பிரிக்கக்கூடிய இடங்களினின்று பிரித்து அமைக்கவேண்டிய இடங்களில் அமைத்தும், புதியன

வாகச் சேர்க்கவேண்டியவற்றைச் சேர்த்தும் இரண்டாகச் செய்திருக்கிறேன். அவற்றுள், இது இரண்டாம்பாகமாகும்.

இதிலுள்ள வசனபாகம் முழுதும் புதிதாகத் தொகுக்கப்பெற்றது. தங்களால் பதிப்பிக்கப்பட்ட அரிய நூல்களிலிருந்து இதற்கு வேண்டும் பாகங்களை உபயோகித்துக் கொள்ளும்படி அனுமதி செய்த பரமோபகாரிகளுடைய உதவியை நான் என்றும் மறவேன்.

பற்பல பாடசாலைத் தலைவர்களும் தமிழ் உபாத்யாயர்களும் இதனைத் தங்கள் தங்கள் பாடசாலைகளிற் பாடமாக வைத்து ஆதரித்து இம்மாதிரிக் காரியங்களை மேற்கொள்பவர்களுக்கு மனத்தளர்ச்சியுண்டாகாவண்ணம் ஊக்கமளிக்க வேண்டுகிறேன்.

இது பலர்க்கும் உபயோகமாகும்படி இதனைப்பதிப்பித்து வெளியிட மேற்கொண்டதற்காக மேற்படி கம்பெனியாரவர்களிடம் நான், என்றும் நன்றிபாராட்டும் கடப்பாடுடையேன்.

இங்ஙனம்:
ம. வீ. இராமானுஜாசாரியன்.

---

## இரண்டாம் பதிப்பின் முகவுரை

## 1. செய்யுட்டிரட்டு

---

ஆங்கிலேய பாடசாலைகளிற் படிக்கிற மாணாக்கர்கள், படிக்கத்தொடங்கியதுமுதல் நன்னெறி, நல்வழி, நீதிநெறி விளக்கம், நாலடியார் முதலிய நீதிநூல்களையே படிப்பிக்கப் படுகிறார்கள்; ஒரேவிதமான விஷயத்தைக்கூறும் ஒருவகைச்செய்யுட்களேயடங்கிய நூல்களைப்படித்தலால், அவற்றில் விருப்பங்குறைந்து தமிழ்ப் படிப்பிலேயே வெறுப்படைகிறார்களென்பது யாவரும் அறிந்திருப்பதே. அது, அந்தநூல்களின் குற்றமும் அன்று; அம்மாணாக்கர்களின் குற்றமும்

யன்று; அவர்கள்படிப்பிக்கப்படும்வழியே அதற்கு முழுதுங்காரணமாமென்பது விவேகிகள் சற்று ஆலோசித்துப்பார்ப்பாராயின் தெளிவாக விளங்கும். இக்குறையைநீக்கக்கருதிப் பலவாறுஆலோசித்துப் பார்த்ததில், பற்பலவிஷயங்களைக்கூறுவதும், பலவித்வான்களாற்செய்யப்பட்ட பலவகைப்பாடல்கள்அடங்கியதும், கதாரூபமாக நீதிகளை மாணுக்கர்கள் மனத்திற் பதியச்செய்வதும், படிப்பவர்களுக்கு ஊக்கமளித்துத் தமிழ்ப்பாஷையில் பிக்கவிருப்பத்தை உண்டாக்கக்கூடியதுமான ஒருபுத்தகமிருக்கவேண்டுமென்று எனக்குத்தோன்றியது. ஆதலால், பிரசித்தவித்வான்களால் செய்யப்பட்டுச் சொற்சுவை பொருட்சுவைகளில் சிறந்துள்ள செய்யுட்களில் எளிதிற் பொருள்படுவனவாகிய பலசெய்யுட்களைத்திரட்டி, 'செய்யுட்டிரட்டு' என்னும் பெயரால் முதல் முறை பதிப்பித்திருந்தேன்.

இது, நான்கருதியதை ஒருவாறு பூர்த்திசெய்ததால், இரண்டாமுறை பதிப்பிக்கப்படவேண்டுமென்றும், இவ்வாறே உரைநடையிலும் ஒரு புத்தகமிருக்கவேண்டுமென்றும் பாஷாபிமானிகளாகிய சிலபெரியோர்கள் சொல்லியபடி இதனை இரண்டாமுறை பதிப்பித்ததோடு, 'உரை நடைத்திரட்டு' என்னும் பெயரால் வசன நடையில் ஒருபுத்தகமும் பதிப்பிக்கலானேன். அஃது, இப்புத்தகத்திற்கு வேருனதாயினும் மாணுக்கர்களுடைய சௌகரியத்திற்காக இதனோடு சேர்த்துக் கட்டப்பட்டிருக்கின்றது.

சிந்தாமணி, சிலப்பதிகாரம், புறநானூறு, கம்பராமாயணம் முதலிய நூல்கள் கடினமானவையாயினும், எளிதிற் பொருள்படும் செய்யுட்களே அவற்றிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன; ஆனாலும், இதன் இறுதியிற் சிலபாடல்கள் கடினமாகக் காணப்படலாம்; அவை மாணுக்கர்கள் பாடஞ்செய்து இசையோடுசொல்லுதற்காகச் சேர்க்கப்பட்டுள்ளன எனக்கொள்க. இளைஞர் படிக்கத்தகாத சில சொற்களைமாற்றி அவ்வவ்விடங்களுக்கு இயைந்த வேறுசொற்களைத் தடித்த எழுத்தில் பதிப்பித்திருக்கிறேன்.

எனது நண்பர், ஸ்ரீ. உ. மணலூர் ஸந்தானராமஐயங்-கார் இப்புத்தகம் அச்சிடுங்காலத்துச்செய்த உதவி ஒருநா-ளும் மறக்கத் தக்கதன்று.

இப்புத்தகத்தைத் தத்தம் பாடசாலைகளில் பாடமாக வைத்தும், இனிப் பாடமாகவைப்பதாக வாக்களித்தும் எ-னக்கு ஊக்கமுண்டாகும்படிசெய்த பலபாடசாலைத் தலைவர் களுக்கும், தமிழ்ப்பண்டிதர்களுக்கும் எந்நாளும் நன்றிபா-ராட்டக்கடமைப்பட்டிருக்கிறேன்.

மாணாக்கர்களுக்கு நன்மையுண்டாக்கக்கூடியதாக இந் நூலிற் செய்யவேண்டுவதான மாறுதல் எதையேனும் அறி வுடையோர்கள் தெரிவிப்பார்களாயின், அதனை வந்தனஞ் செய்து அங்கீகரித்து அடுத்தபதிப்பில் அவ்வாறுசெய்யச் சித்தனாயிருக்கிறேன்.

## 2. உரைநடைத்திரட்டு

இப்புத்தகத்தின் வரலாற்றைச் செய்யுட்டிரட்டின் மு-கவுரையிலேயே அறிவித்திருத்தலின், இவ்விடத்தில் இதை-ப்பற்றித் தெரிவிக்கவேண்டுவனவாகிய சிலவற்றைமாத்திர-ம் எழுதுகின்றேன். இத்தேசத்து வித்துவான்கள், பெரும் பாலும் செய்யுளாகவே நூல்கள் இயற்றியிருக்கின்றமையா-லும், இக்காலத்தில் எழுதப்படும் வசனங்கள் மிகச்சிலவா-கவே இருத்தலாலும், உரைநடைகளைத்தெரிந்து எடுத்துச் சேர்க்கத்தக்க புஸ்தகங்கள் விசேஷமாய்க் கிடைத்தில; வி-ஷயமாவது, பாஷையாவது கடினமாக இல்லாவிடின், படிப்-பவர்களுடைய புத்திப்பயிற்சிக்கு இடமில்லையாகையால், வி-ஷயம் கடினமாகவுள்ளவை எளிய நடையிலும், அப்படி யில்லாதவை சற்றுக் கடினநடையிலுமாக இருப்பனவே இ-திற் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தாங்களும், தங்கள் முன்-னோர்களும் எழுதிய உரைநடைகளை இதிற் பதிப்பித்துக்-கொள்ளும்படி அனுமதிகொடுத்துஉதவிசெய்த கனவான்-களுக்கு நான் எந்நாளும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டி-ருக்கிறேன்.

இங்ஙனம்:

ம. வீ. இராமானுஜாசாரியன்.

# விஷயசூசிகை

## செய்யுட்டிரட்டு—இரண்டாம்பாகம்


| விஷயம். | பக்கம். |
|---|---|
| கடவுள் துதி ... ... ... ... ... | 1 |
| கலைமகள் துதி ... ... ... ... | 1 |
| தமிழின் சிறப்பு ... ... ... ... | 1 |
| வாசுதேவனைப் படைத்துணையழைத்தல் ... | 2 |
| விசுவாமித்திரர் இராமபிரானை வேள்வித்துணையாகப்பெறுதல் ... ... ... ... | 5 |
| தசரதனுடைய அமைச்சரது அமைதி ... ... | 7 |
| தசரதன் அமைச்சரோடு ஆலோசித்தல் ... ... | 8 |
| மந்தரை கைகேயியைக் கலைத்தல் ... ... | 10 |
| பரதன் குகனைச் சந்தித்தல் ... ... ... | 15 |
| இராமபிரான் சடாயுவைக் காண்டல் ... ... | 19 |
| அங்கதன் தூதுசெல்லுதல் ... ... ... | 22 |
| இராமபிரான் பட்டாபிஷேகம் ... ... ... | 26 |
| காலம் | |
| இளவேனிற்காலம் ... ... ... | 27 |
| முதுவேனிற்காலம் ... ... ... | 28 |
| கார்காலம் ... ... ... ... | 30 |
| கூதிர்காலம் ... ... ... ... | 30 |
| பனிக்காலம் ... ... ... ... | 31 |
| கருப்புக்காலம் ... ... ... ... | 31 |
| வறுமை ... ... ... ... ... | 32 |
| செல்வச்செருக்கு ... ... ... ... | 32 |
| இராசதர்மம் ... ... ... ... ... | 33 |
| பெறுதற்கருமை ... ... ... ... | 34 |

விஷயம். பக்கம்.

பாரியின் வள்ளன்மை ... ... ... ... 35

மக்கட்பேறு ... ... ... ... ... 36

ஆற்றுவரி (காவேரி) ... ... ... ... 36

அம்மானைவரி ... ... ... ... 37

கந்துகவரி ... ... ... ... ... 37

ஊசல்வரி ... ... ... ... ... 38

ஆய்ச்சியர்குரவை ... ... ... ... 38

அறவுரை ... ... ... ... ... 39

## உரைநடைத்திரட்டு—இரண்டாம்பாகம்

தெய்வங்கொள்கை (விநோதரஸமஞ்சரி) அஷ்டாவதானம், வீராசாமி செட்டியாரவர்கள் ... 41

புத்தசரித்திரம் (முற்பகுதி) மஹாமஹோபாத்யாய, வே. சாமிநாதையரவர்கள், பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை. ... ... ... 56

சுகிர்ல்லாபம் அல்லது நட்புப்பேறு (பஞ்சதந்திரம்) வித்வான், தாண்டவராய முதலியாரவர்கள். ... ... ... ... ... 81

கண்ணப்ப நாயனார் சரித்திரம் (பெரியபுராணம்) நல்லூர், ஆறுமுகநாவலரவர்கள் ... ... 97

தெரிந்து வினைசெயல் (மஹாபாரதம்) ... ... 109

பண்டைக்காலத்து உரைநடை.

திருக்குறள் உரைப்பாயிரம் ... ... 130

அதங்கோட்டாசிரியர் தொல்காப்பியங் கேட்டது ... ... ... 132

இறையனாரகப்பொருளுரைவரலாறு ... 133

நூல் இன்னதென்பது ... ... ... 136

ஸ்ரீ

# செய்யுட்டிரட்டு

## இரண்டாம் பாகம்

---

### கடவுள் துதி

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணுங்களே. (கம்பராமாயணம்)

### கலைமகள் துதி

பெருந்திரு வுஞ்சய மங்கையு மாகியென் பேதைநெஞ்சில்
இருந்தரு ளுஞ்செஞ்சொல் வஞ்சியைப் போற்றிலெல் லாவு
யிர்க்கும், பொருந்திய ஞானந் தருமின்ப வேதப் பொருளுந்
தரும், திருந்திய செல்வந் தருமழி யாப்பெருஞ் சீர்தருமே.

---

(சரசுவதியந்தாதி)

## தமிழின் சிறப்பு

மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி,
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்
றே, அறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றாரி
யத்தோ, டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்
தல் செய்வாம். 1

(சீகாளத்திப்புராணம்)

வேறு

கடுக்க வின்பெறு கண்டனுந் தென்றிசை நோக்கி
யடுக்க வந்துவந் தாடுவா னுடலி னிளைப்பு
விடுக்க வாரமென் காறிரு முகத்திடை வீசி
மடுக்க வுந்தமிழ் திருச்செவி மாந்தவு மன்றே. 2

விடையு கைத்தவன் பாணினிக் கிலக்கண மேனாள்
வடமொ ழிக்குரைத் தாங்கியன் மலயமா முனிக்குத்
திடமு றத்தியம் மொழிக்கெதி ராக்கிய தென்சொல்
மடம கட்கரங் கென்பது வழுதிநா டன்றே. 3

கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோ
லெண்ணி டைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ. 4

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
யுண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக்
கண்ட துமறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோசாற்றீர். 5

(திருவிளையாடற்புராணம்)

---

வேறு

வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணை யாத், தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங், குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற், கடல்வரைப்பி னிதன்பெருமை யாவரே கணித் தறிவார். 6

இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பு
மிருமொழியு மான்றவரே தழீஇனா ரென்றாலிவ்
விருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ. 7

(காஞ்சிப்புராணம்)

---

## வாசுதேவனைப் படைத்துணையழைத்தல்

புரோகிதன் றூது வந்து போனபின் புயங்க கேது
விரோசனன் சுதனைக் கங்கா சுதனொடும் வெகுளி மாற்றித்
துரோணனை முதலா மிக்க தொன்மதி யமைச்ச ரோடுஞ்
சரோருக சதன மென்னத் தனித்திருந் தெண்ணி னானே. 8

தேயமெங் கெங்குஞ் செங்கோல் செலுத்துமத் திகிரி வேந்த
ராயவர் தம்மைக் கூட்ட வடைவினிற் றூது போக்கிக்
காயமு முயிரு மாகிப் பெருடொறுங் கலந்து நின்ற
மாயவன் றன்னைக் கூட்ட வளர்மதிற் றுவரை சேர்ந்தான். 9

மாடநீள் விதி மூதூர் வயங்குமா மதிலின் ஞேற்ற
மேடவிழ் துளப மாலங் கிருந்தன னென்று கேட்டுச்
சேடன்வந் தனந்த கோடிச் செங்கதிர் மணியின் பத்திச்
சூடிகா மகுடத் தோடுஞ் சூழ்ந்ததோர் தோற்றம் போலும்.

கார்க்கடல் வண்ணன் றன்பாற் கண்டுயி லொழிந்து போந்து
மேற்கடற் றுவரை மூதூர் மேவரும் விரகு நோக்கிப்
போர்க்கடற் பொறிகள் யாவும் பொறித்தவப் புரிசை தன்னைப்
பாற்கடல் வளைத்த தொக்கும் பன்மல ரகழி யம்மா. 11

ஈண்டுநீ வரினு மெங்க ளெழிலுடை யெழிலி வண்ணன்
பாண்டவர் தங்கட் கல்லாற் படைத்துணை யாக மாட்டான்
மீண்டுபோ கென்றென் றந்த வியன்மதிற் குடுமி தோறுங்
காண்டகு பதாகை யாடை கைகளாற் றடுப்ப போன்ற. 12

அருள்குடி யிருக்குங் கண்ணு னவதரித் தனனென் றெண் [ணித்
தரணியின் மீது வந்து தன்னுடைச் சோதி வைகும்
பரமமா ஞான போகப் பதிகுடி யிருந்த தன்ன
திருநகர் வீதி புக்கான் சித்தசித் துணர்வி லாதான். 13

வந்தமை யறிந்து கொற்ற வாயிலோர் தம்மை நோக்கி
யந்தன்மா மதலை வந்தா லறிவியா தமைமி னென்று
சந்திர னொடுங்கி நிற்பத் தபனனே சரிக்கு மாறு [டான்.
பந்தனை யிலாதான் யோகத் துயில்வரப் பள்ளி கொண் 14

பொற்புடைப் புனிதன் கோயிற் புறத்தினி லனிக நிற்பச்
சற்பவெம் பதாகை வேந்தன் றடையறத் தனிச்சென் றெ
யுற்பல வண்ணன் பள்ளி யுணர்தரு காறு மிட்ட [ப்தி
சிற்பவண் டவிசி னேறித் திருமுடிப் பக்கஞ் சேர்ந்தான். 15

வந்திலன் விசய னென்று வான்றுயில் புரிந்த வண்ணல்
சிந்தனை செய்யும் வேலைச் சிந்தையிற் கடிய தேரோன்
பந்தனை யறுக்கும் பாத பங்கயம் பணிந்து நிற்ப
முந்துற விழித்து நோக்கி முகமலர்ந் தருள் செய்தானே. 16

நின்றவ னிருந்த வேந்தன் வரவினை நிகழ்த்த நேமிப்
பொன்றிகழ் படையோ னந்தப் பொய்த்துயிற் பாய வீங்கி

மன்றலந்தொடையன் மார்பன் வரவெமக் குரைசெ யாதென்
னென்றார நெருங்கப் புல்லி யின்சொலா லுவகை செய்தான்.

இருவிரும் வந்த வாறென் னியம்புதி ரென்று வாச
மருவிரி துளப மாலை மரகத வண்ணன் கேட்பச்
செருவினீ யெமக்கு வெம்போர் செய்துணை யாக வேண்டும்
பொருவிலோ யென்று கொண்டவ் விருவரும் புகன்ற காலை.

உற்றம ருதவி செய்வா னுதிட்டிரன் றனக்கு முன்னே
சொற்றன மாங்க ணிங்குந் துயிலுணர் பொழுதத் தின்று
விற்றிறல் விசயன் முந்த விழிக்கிலக் காணா னென்று
பற்றறத் துணிந்து சொன்னான் பாண்டவர் சகாய னானான். 19

முடைகமழ் முல்லை மாலை முடியவன் றன்னைப் போரிற்
படையெடா தொழிமி னென்று பன்னக துவசன் வேண்ட
நெடியமா முகிலு நேர்ந்து நினக்கினி விசயபோரி [றான்.
லடுபடை யின்றிச் செய்யு மாண்மையென் னறைதி யென்

செருமலி யாழி யங்கைச் செழுஞ்சுடர் நின்றென் றேரிற்
பொருபரி தூண்டி னிந்தப் பூதலத் தரச ரொன்றா
வெருவரு மியக்கர் விண்ணோர் விஞ்சைய ரெனினு மென்கை
வரிசிலை குழைய வாங்கி மணித்தலை துமிப்ப னென்றான்.

அடர்சிலை விசய னிவ்வா றிசைத்தலு மமலன் வஞ்சப்
படவர வுயர்த்த வென்றிப் பார்த்திவன் றன்னை நோக்கி
நடையுடைப் புரவித் திண்டேர் நானிவற் கூர்வ தன்றி
மிடைபடை யேவி நும்மோ டமர்செயேன் வேந்த வென்றான்.

எம்மையே யொழிய வுள்ள யாதவக் குலத்து ளோர்கள்
தம்மையு மெம்மு னான தாலகே துவையுஞ் சேரச்
செம்மையோ டுதவி யாகக் கொண்டுநீ செல்க வென்று
மும்மையு முணர்ந்த நாதன் முன்னுறப் பின்னுஞ் சொன்னான்.

கிருதவன் மாவக் குரோணிக் கிளர்படை யோடு நின்பால்
வருவனென் றுரைத்து வேண்டு மதுரவாய் மைகளுங் கூறி
மருதுபோழ்ந் திட்ட செங்கண் மாயவன் விடுப்ப வேகிக் [ன்.
கருதலான் வினைய மொன்றுங் கண்ணன்முன் னோனைக் கண்டா

கண்ணனங் கருளிச் செய்த கட்டுரைப் படியே சங்க
வண்ணனுக் கிளவல் சொன்ன மாற்றமு மரசன் சாற்றி
யெண்ணருந் தொகைகொள் சேனை யாதவ குமர ரோடே
யண்ணலே வருகென் றோதி யத்தினு புரிபுக் கானே. 25

கூறிய வேக நாகக் கொடியவ னகன்ற பின்னர்த்
தேறிய விசய னோடுஞ் செழும்புனற் றுவரை நீங்கி
யாறிரு நாமத் தோனு மையிரு நாமத் தோனு
மூறிய கருணை நெஞ்சி னுதிட்டிர னிருக்கை புக்கார். 26

(வில்லிபுத்தூராழ்வார் பாரதம்)

---

## விசுவாமித்திரர் இராமபிரானை வேள்வித் துணையாகப் பெறுதல்

வந்துமுனி யெய்துதலு மார்பினணி யாரம்
அந்தரத லத்திரவி யஞ்சவொளி விஞ்சக்
கந்தமல ரிற்கடவு டன்வரவு காணும்
இந்திரனெ னக்கடி தெழுந்தடி பணிந்தான். 27

நிலஞ்செய்தவ மென்றுணரி னன்றுநெடி யோயென்
நலஞ்செய்வினை யுண்டெனினு மன்றுநகர் நீயான்
வலஞ்செய்து வணங்கவெளி வந்தவிது முந்தென்
குலஞ்செய்தவ மென்றினிது கூறமுனி கூறும். 28

என்னனைய முனிவரரு மிமையவரு மிடையூறொன்
றுடைய ராற், பன்னகமு நகுவெள்ளிப் பனிவரையும் பாற்
கடலும் பதும பீடத், தன்னகருங் கற்பகநாட் டணிநகரு
மணிமாட வயோத்தி யென்னும், பொன்னகரு மல்லாது
புகலுண்டோ விகல்கடந்த புலவு வேலோய். 29

உரைசெய்யு மளவினவன் முகநோக்கி யுள்ளத்தி னொ
ருவராலுங், கரைசெய்ய வரியதொரு பேருவகைக் கடல்
பெருகக் கரங்கள் கூப்பி, அரைசெய்தி யிருந்தபய னெய்தி
னன்மற் றினிச்செய்வ தருளு கென்று, முரைசெய்து கடை
த்தலையான் முன்மொழியப் பின்மொழியு முனிவ னங்கே. 30

தருவனத்துள் யானியற்றுந் தவவேள்விக் கிடையூறு த் தவஞ்செய் வோர்கள், வெருவரச்சென் றடைகாம வெ குளியென நிருதரிடை விலக்கா வண்ணம், செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர் நால்வரினுங் கரிய செம்மல், ஒரு வனைத்தந் திடுதியென வுயிரிரக்குங் கொடுங்கூற்றி னுனை யச் சொன்னான். 31

எண்ணிலா வருந்தவத்தோ னியம்பியசொன் மரும த்தி னெறிவேல் பாய்ந்த, புண்ணிலாம் பெரும்புழையிற் க னனுழைந்தா லெனச்செவியிற் புகுத லோடும், உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த வாருயிர்நின் றாச லாடக், கண்ணி லான் பெற்றிழந்தா னெனவுழந்தான் கடுந்துயரங் கால வேலான். 32

தொடையூற்றுந் தேன்றுளிக்கு நறுந்தாரா னொருவண் ணங் துயர நீங்கிப், படையூற்ற மிலன்சிறிய னிவன்பெரி யோய் பணியிதுவேற் பனிநீர்க் கங்கை, புடையூற்றுஞ் சடையானு நான்முகனும் புரந்தரனும் புகுந்து செய்யும், இடையூற்றுக் கிடையூறு யான்காப்பென் பெருவேள்விக் கெழுக வென்றான். 33

என்றனனென் றலுமுனிவோ டெழுந்தனன்மண் படை த்தமுனி யிறுதிக் காலம், அன்றெனவா மெனவிமையோ ரயிர்த்தனர்மேல் வெயில்கரந்த தங்கு மிங்கும், நின்றன வுந் திரிந்தனமீ நிவந்தகொழுங் கடைப்புருவ நெற்றி முற் றச், சென்றனவந் தனநகையுஞ் சிவந்தனகண் ணிருண்ட னபோய்த் திசைக ளெல்லாம். 34

வேறு

கறுத்த மாமுனி கருத்தை யுன்னிநீ
பொறுத்தி யென்றவற் புகன்று நின்மகற்
குறுத்த லாகலா வுறுதி யெய்துநாள்
மறுத்தி யோவென வசிட்டன் கூறினான். 35

பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்

ஐய நின்மகற் களவில் விஞ்சைவந்
தெய்து காலமின் றெதிர்ந்த தென்னவே. 36

குருவின் வாசகங் கொண்டு கொற்றவன்
திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்றென
வருக வென்றன னென்ற லோடும்வந்
தருகு சார்ந்தன னறிவி னும்பரான். 37

வந்த நம்பியைத் தம்பி தன்னொடு
முந்தை நான்மறை முனிக்குக் காட்டிநற்
றந்தை நீதனித் தாயு நீயிவர்க்
கெந்தை தந்தன னியைந்த செய்கென்றான். 38

(கம்பராமாயணம்)

---

## தசரதனுடைய அமைச்சரது அமைதி

உற்றது கொண்டு மேல்வந் துறுபொரு ளுணருங் கோளார்
மற்றது வினையின் வந்த தாயினு மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவ ரரிய நூலுங்
கற்றவர் மான நோக்கிற் கவரிமா வனைய நீரார். 39

காலமு மிடனு மேற்ற கருவியுந் தெரியக் கற்ற
நூலுற நோக்கித் தெய்வ நுனித்தறங் குணித்த மேலோர்
சீலமும் புகழ்க்கு வேண்டுஞ் செய்கையுந் தெரிந்து கொண்டு
பால்வரு முறுதி யாவுந் தலைவற்குப் பயக்கு நீரார். 40

தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும், வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர், செம்மையிற் றிறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியுங் காலம், மும்மையு முணர வல்லா ரொருமையே மொழியு நீரார். 41

வேறு

குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனு மெய்தினோர்
நலமுத னலியினும் நடுவு நோக்குவார்
சலமுத லறுத்தருந் தருமந் தாங்கினோர். 42

நல்லவுந் தீயவு நாடி நாயகற்
கெல்லையின் மருத்துவ னியல்பி னெண்ணுவார்
ஒல்லைவந் துறுவன வுற்ற பெற்றியின்
தொல்லைநல் வினையென வுதவுஞ் சூழ்ச்சியார். 43

அறுபதி னுயிர ரெனினு மாண்டகைக்
குறுதியி லொன்றிவர்க் குணர்வென் றன்னலாம்
பெறலருஞ் சூழ்ச்சியர் திருவின் பெட்பினர்
மறிதிரைக் கடலென வந்து சுற்றினர். 44

(கம்பராமாயணம்)

## தசரதன் அமைச்சரோடு ஆலோசித்தல்

அன்னவ ரருளமைந் திருந்த வாண்டையின்
மன்னனு மவர்முக மரபி னேக்கினன்
உன்னிய தரும்பெற லுறுதி யொன்றுள
தென்னுணர் வினையநீ ரினிது கேட்கென. 45

வெய்யவன் குலமுதல் வேந்தர் மேலவர்
செய்கையி னொருமுறை திறம்ப லின்றியே
வையம்யா னுண்டவாண் டுங்கண் மாட்சியால்
ஐயமி லறுபதி னுயி ரம்மரோ. 46

வெள்ளநீ ருலகினில் விண்ணி னுகரில்
தள்ளரும் பகையெலாந் தவிர்த்து நின்றயான்
கள்ளரிற் கரந்துறை காம மாதியா
உள்ளுறை பகைஞருக் கொதுங்கி வாழ்வனே. 47

ஒட்டிய பகைஞர்வந் துருத்த போரிடைப்
பட்டவ ரல்லரேற் பரம ஞானம்போய்த்
தெட்டவ ரல்லரேற் செல்வ மீண்டென
விட்டவ ரல்லரேல் யாவர் வீடுளார். 48

இறப்பெனு மெய்ம்மையை யிம்மை யாவர்க்கு
மறப்பெனு மதனின்மேற் கேடு மற்றுண்டோ
துறப்பெனுந் தெப்பமே துணைசெ யாவிடிற்
பிறப்பெனும் பெருங்கடல் பிறைக்க லாகுமோ. 49

அருஞ்சிறப் பமைவருந் துறவு மவ்வழி
தெரிஞ்சுற வெனமிகுந் தெளிவு மாய்வரும்
பெருஞ்சிற குளவெனிற் பிறவி யென்னுமிவ்
விருஞ்சிறை கடத்தலி னினிய தியாவதே. 50

உம்மையா னுடைமையி னுலகம் யாவையுஞ்
செம்மையி னோம்பிநல் லறமுஞ் செய்தனன்
இம்மையி னுதவிநல் லிசைந டாயநீர்
அம்மையு முதவுதற் கமைய வேண்டுமால். 51

கச்சையங் கடகரிக் கழுத்தின் கண்ணுறப்
பிச்சமுங் கவிகையும் பெய்யு மின்னிழ
னிச்சய மன்றெனி னெடிது நாளுண்ட
வெச்சிலை நுகருவ தின்ப மாகுமோ. 52

மைந்தரை யின்மையில் வரம்பில் காலமும்
நொந்தன னிராமனென் னோவை நீக்குவான்
வந்தன னினியவன் வருந்த யான்பிழைத்
துய்ந்தனன் போவதோ ருறுதி யெண்ணினேன். 53

இறந்திலன் செருக்களத் திராமன் றாதைதான்
அறந்தலை நிரம்பமூப் படைந்த பின்னருந்
துறந்தில னென்பதோர் சொல்லுண் டானபின்
பிறந்தில னென்பதிற் பிறிதுண் டாகுமோ. 54

பெருமக னென்வயிற் பிறக்கச் சீதையாந்
திருமகண் மணவினை தெரியக் கண்டயான்
அருமக னிறைகுணத் தவனி மாதெனும்
ஒருமகண் மணமுங்கண் டுவப்ப தாயினேன். 55

நிவப்புறு நிலனெனு நிரம்பு நங்கையுஞ்
சிவப்புறு மலர்மிசைச் சிறந்த செல்வியும்
உவப்புறு கணவனை யுயிரி னெய்திய
தவப்பயன் றுய்ப்பது தரும மன்றரோ. 56

ஆதலா லிராமனுக் கரசை நல்கியிப்
பேதைமைத் தாய்வரும் பிறப்பை நீக்குவான்

மாதவந் தொடங்கிய வனத்தை நண்ணுவேற்
கியாதுநுங் கருத்தென வினைய கூறினன். 57

வேறு

திரண்ட தோளின னிப்படிச் செப்பலுஞ் சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய வுவகைய ராங்கே
வெருண்டு மன்னவன் பிரிவெனும் விம்முறு நிலையால்
இரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென விருந்தார். 58

அன்ன ராயினு மரசனுக் கதுவல துறுதி
பின்ன ரில்லெனக் கருதியும் பெருநில வரைப்பின்
மன்னு மன்னுயிர்க் கிராமனின் மன்னவ ரில்லை
என்ன வுன்னியும் விதியது வலியினு மிசைந்தார். 59

இருந்த மந்திரக் கிழவர தெண்ணமுந் தன்பால்
பரிந்த சிந்தையம் மன்னவன் கருதிய பயனும்
பொருந்து மன்னுயிர்க் குறுதியும் பொதுவுற நோக்கித்
தெரிந்து நான்மறைத் திசைமுகன் றிருமகன் செப்பும். 60

நிருப நின்குல மன்னவர் நேமிபண் டுருட்டிப்
பெருமை யெய்தினர் யாவரே யிராமனைப் பெற்றார்
கரும மேயிது கற்றுணர்ந் தோய்க்கினிக் கடவ
தரும மும்மிது தக்கதே நினைத்தனை தகவோய். 61

புண்ணி யந்தொடர் வேள்விகள் யாவையும் புரிந்த
அண்ண லேயினி யருந்தவ மீயற்றவு மடுக்கும்
வண்ண மேகலை நிலமகண் மற்றனைப் பிரிந்து
கண்ணி மூந்தில னெனச்செயு நீதந்த கழலோன். 62

(கம்பராமாயணம்)

---

## மந்தரை கைகேயியைக் கலைத்தல்

தோன்றிய கூனியுந் துடிக்கு நெஞ்சினள்
ஊன்றிய வெகுளியா ளுளைக்கு முள்ளத்தாள்
கான்றெரி நயனத்தாள் கதிக்குஞ் சொல்லினள்
மூன்றுல கினுக்குமோ ரிடுக்கண் மூட்டுவாள். 63

தொண்டைவாய்க் கேகயன் றோகை கோயின்மேன்
மண்டினாள் வெகுளியின் மடித்த வாயினாள்
பண்டைநா ளிராகவன் பாணி வில்லுமிழ்
உண்டையுண் டதனைத்த னுள்ளத் துள்ளுவாள். 64

நாற்கடற் படுமணி நளினம் பூத்ததோர்
பாற்கடற் படுதிரைப் பவள வல்லியே
போற்கடைக் கண்ணளி பொழியப் பொங்கணை
மேற்கிடந் தாடனை விரைவி னெய்தினாள். 65

எய்தியக் கேகயன் மடந்தை யேடவிழ்
நொய்தலர் தாமரை நோற்ற நோன்பினாற்
செய்தபே ருவமைசால் செம்பொற் சீறடி
கைகளிற் றீண்டினாள் காலக் கோளனாள். 66

தீண்டலு முணர்ந்தவத் தெய்வக் கற்பினாள்
நீண்டகண் ணனந்தரு நீங்கு கிற்றிலள்
மூண்டெழு பெரும்பழி முடிக்கும் வெவ்வினை
தூண்டிடக் கட்டுரை சொல்லன் மேயினாள். 67

அணங்குவாள் விடவரா வணுகு மெல்லையும்
குணங்கெடா தொளிவிரி குளிர்வெண் டிங்கள்போல்
பிணங்குவான் பேரிடர் பிணிக்க நண்ணவும்
உணங்குவா யல்லைநீ யுறங்கு வாயென்றாள். 68

வெவ்விட மனையவள் விளம்ப வேற்கணாள்
தெவ்வடு சிலைக்கையென் சிறுவர் செவ்வியர்
அவ்வவர் துறைதொறு மறந்தி றம்பலர்
எவ்விட ரெனக்குவந் தடுப்ப தீண்டென்றாள். 69

பராவரும் புதல்வரைப் பயக்க யாவரும்
உராவருந் துயரைவிட் டுறுதி காண்பரால்
விராவரும் புவிக்கெலாம் வேத மேயன
இராமனைப் பயந்தவெற் கிடருண் டோவென்றாள். 70

ஆழ்ந்தபே ரன்பினா ளனைய கூறலுஞ்
சூழ்ந்ததீ வினைநிகர் கூனி சொல்லுவாள்

வீழ்ந்தது நின்னலந் திருவும் வீந்தது
வாழ்ந்தனள் கோசலை மதியி னாலென்றாள். 71

அன்னவ ளவ்வுரை யுரைப்ப வாயிழை
மன்னவர் மன்னனேற் கணவன் மைந்தனேற்
பன்னரும் பெரும்புகழ்ப் பரதன் பார்தனில்
என்னிதன் மேலவட் கெய்தும் வாழ்வென்றாள். 72

ஆடவர் நகையுற வாண்மை மாசுறத்
தாடகை யெனும்பெயர்த் தைய லாள்படக்
கோடிய வரிசிலை யிராமன் கோமுடி
சூடுவ னாளைவாழ் விதெனச் சொல்லினாள். 73

மாற்றமஃ துரைசெய மங்கை யுள்ளமும்
ஆற்றல்சால் கோசலை யறிவு மொத்தவால்
வேற்றுமை யுற்றிலள் வீரன் றாதைபுக்
கேற்றவ ளிருதயத் திருக்க வேகொலாம். 74

ஆயபே ரன்பெனு மளக்க ரார்த்தெழத்
தேய்விலா முகமதி விளங்கித் தேசுறத்
தாயவ ளுவகைபோய் மிகச்சு டர்க்கெலாம்
நாயக மனையதோர் மாலை நல்கினாள். 75

தெழித்தன ளுரப்பினள் சிறுக்கண் டையுக
விழித்தனள் வைதனள் வெய்து யிர்த்தனள்
அழித்தன ளழுதன ளம்பொன் மாலையாற்
குழித்தன ணிலத்தையக் கொடிய கூனியே. 76

வேதனைக் கூனிபின் வெகுண்டு நோக்கியப்
பேதையைப் பித்திநிற் பிறந்த சேயொடும்
நீதுயர் படுகநா னெடிதுன் மாற்றவள்
தாதியர்க் காட்செயத் தரிக்கி லேனென்றாள். 77

மறந்திலள் கோசலை யுறுதி மைந்தனுஞ்
சிறந்தநற் றிருவினிற் றிருவு மெய்தினான்
இறந்தில னிருந்தன னென்செய் தாற்றுவான்
பிறந்திலன் பரதனீ பெற்ற தாலென்றாள். 78

பாக்கியம் புரிந்திலாப் பரதன் றன்னைப்பண்
டாக்கிய பொலன்கழ லரச னுணையால்
தேக்குயர் கல்லதர்க் கடிது சேணிடைப்
போக்கிய பொருளெனக் கின்று போந்ததால். 79

மந்தரை பின்னரும் வகைந்து கூறுவாள்
அந்தரந் தீர்ந்துல களிக்கு நீரினல்
தந்தையுங் கொடியனற் ருயுந் தீயளால்
எந்தையே பரதனே யென்செய் வாயென்ருள். 80

அரைசரிற் பிறந்துபின் னரைச ரில்வளர்ந்
தரைசரிற் புகுந்துபே ரரைசி யானநீ
கரைசெயற் கருந்துயர்க் கடலில் வீழ்கின்ருய்
உரைசெயக் கேட்கிலை யுணர்தி யோவென்ருள். 81

கல்வியு மிளமையுங் கணக்கி லாற்றலும்
வில்வினை யுரிமையு மழகும் வீரமும்
எல்லையில் குணங்களும் பரதற் கேயது
புல்லிடை யுகுத்தமு தேயும் போலென்ருள். 82

வேறு

வாய்க யப்புற மந்தரை வழங்கிய வெஞ்சொல்
காய்க னற்றலை நெய்சொரிந் தெனக்கதங் கனற்றக்
கேக யர்க்கிறை திருமகள் கிளரிள வரிகள்
தோய்க யற்கண்கள் சிவப்புற நோக்கினள் சொல்லும். 83

எனக்கு நல்லையு மல்லைநீ யென்மகன் பரதன்
தனக்கு நல்லையு மல்லையத் தருமமே நோக்கில்
உனக்கு நல்லையு மல்லைவந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய். 84

பிறந்தி றந்துபோய்ப் பெறுவது மிழப்பதும் புகழேல்
நிறந்தி றம்பினு நியாயமே திறம்பினு நெறியின்
திறந்தி றம்பினுஞ் செய்தவந் திறம்பினுஞ் செயிர்தீர்
மறந்தி றம்பினும் வரன்முறை திறம்புதல் வழக்கோ. 85

போதி யென்னெதிர் நின்றுநின் புன்பொறி நாவைச்
சேதி யாதிது பொறுத்தனன் புறஞ்சில ரறியின்

நீதி யல்லவு நெறிமுறை யல்லவு நினைந்தாய்
ஆதி யாதலி னறிவிலி யடங்குதி யென்றாள். 86

அஞ்சி மந்தரை யகன்றில ளம்மொழி கேட்டும்
நஞ்சு தீர்க்கினுந் தீர்கிலா ததுநலிந் தென்னத்
தஞ்ச மேயுனக் குறுபொரு ளுணர்த்துகை தவிரேன்
வஞ்சி போலியென் றடிமிசை வீழ்ந்துரை வழங்கும். 87

மூத்த வற்குரித் தரசெனு முறைமையி னுலகங்
காத்த மன்னனி லிளையனன் றேகடல் வண்ணன்
ஏத்து நீண்முடி புனைவதற் கிசைந்தன னென்றால்
மீத்த ருஞ்செல்வம் பரதனை விலக்குமா றெவனோ. 88

அறனி ரம்பிய வருளுடை யருந்தவர்க் கேனும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்
மறநி னைந்துமை வலிகில ராயினு மனத்தால்
இறலு றும்படி யியற்றுவ ரிடையறா வின்னல். 89

தூண்டு மின்னலும் வறுமையுந் தொடர்தரத் துயரால்
ஈண்டு வந்துனை யிரந்தவர்க் கிருநிதி யவளை
வேண்டி யீதியோ வெள்குதி யோவிம்ம னேயான்
மாண்டு போதியோ மறுத்தியோ வெங்ஙனம் வாழ்தி. 90

சிந்தை செய்கையிற் றிகைத்தனை யினிச்சில நாளில்
தந்த மின்மையு மெளிமையு நிற்கொண்டு தவிர்க்க
உந்தை யுன்னையுன் கிளைஞர்மற் றுன்குலத் துள்ளோர்
வந்து காண்பதுன் மாற்றவள் செல்வமோ மதியாய். 91

காத லுன்பெருங் கணவனை யஞ்சியக் கனிவாய்ச்
சீதை தந்தையுன் றாதையைத் தெறுகில னிராமன்
மாது லன்னவ னுந்தைக்கு வாழ்வினி யுண்டோ
பேதை யுன்றுணை யாருளர் பழிபடப் பிறந்தார். 92

கெடுத்தொ ழிந்தனை யுனக்கரும் புதல்வனைக் கிளர்நீர்
உடுத்த பாரக முடையவ னொருமகற் கெனவே
கொடுத்த பேரர சவன்குலக் கோமைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்கு மாம்பிறர்க் காகுமோ வென்றாள். 93

தீய மந்தரை யிவ்வுரை செப்பலுந் தேவி
தூய சிந்தையுந் திரிந்தது சூழ்ச்சியி னிமையோர்
மாயை யும்மவர் பெற்றநல் வரமுண்மை யாலும்
ஆய வந்தண ரியற்றிய வருந்தவத் தாலும். 94

அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய வறமுந்
துரக்க நல்லரு டுறந்தன டூமொழி மடமான்
இரக்க மின்மையன் றோவின்றிவ் வுலகங்க ளிராமன்
பரக்குந் தொல்புக ழமுதினைப் பருகுகின் றதுவே. 95

அனைய தன்மைய ளாகிய கைகய னன்னம்
வினைநி ரம்பிய கூனியை விரும்பின ணோக்கி
எனையு வந்தனை யினியையென் மகனுக்கு மனையான்
புனையு நீண்முடி பெறும்படி புகலுதி யென்றாள். 96

மாழை யுண்கணி யுரைசெயக் கேட்டமந் தரையென்
தோழி வல்லளென் றுணைவல்ல ளென்றடி தொழுதாள்
தாழு மங்கிலை யென்னுரை தலைநிற்பி னுலகம்
ஏழு மேழுமுன் னொருமகற் காக்குவ னென்றாள். 97

(கம்பராமாயணம்)

## பரதன் குகனைச் சந்தித்தல்

கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற் குயிர்த்துணைவ னுயர்தோளான்
வெங்கரியி னேறனையான் விற்பிடித்த வேலையினான்
கொங்கலரு நறுந்தண்டார்க் குகனென்னுங் குறியுடையான்.

கற்காணுந் திண்மையான் கரைகாணக் காதலான்
அற்காணிற் கண்டனைய வழகமைந்த மேனியான்
மற்காணுந் திருநெடுந்தோண் மழைகாணு மணிநிறத்தாய்
நிற்காணு முள்ளத்தா னெறியெதிர்நின் றனனென்றான். 99

தன்முன்னே யவன்றன்மை தன்றுணைவன் முந்துரைத்த
சொன்முன்னே யுவக்கின்ற துரிசிலாத் திருமனத்தான்
மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனேல்
என்முன்னே யவற்காண்பன் யானேசென் றெனவெழுந்தான்.

என்றெழுந்த தம்பியொடு மெழுகின்ற காதலொடும்
குன்றெழுந்து சென்றதெனக் குளிர்கங்கைக் கரைகுறுகி
நின்றவனை நோக்கினான் றிருமேனி நிலையுணர்ந்தான்
துன்றுகரு நறுங்குஞ்சி யெயினர்கோன் றுண்ணென்றான்.

வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான். 102

நம்பியுமென் னாயகனை யொக்கின்றா னயனின்றான்
தம்பியையு மொக்கின்றான் றவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தா ரிழைப்பரோ பிழைப்பென்றான்.

உண்டிடுக்க ணொன்றுடையா னுலையாத வன்புடையான்
கொண்டதவ வேடமே கொண்டிருந்தான் குறிப்பெல்லாம்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன் காமின்க ணெறியென்னாத்
தண்டுறையோர் நாவாயி லொருதனியே தான்வந்தான். 104

வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனுந் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினுங் களிகூரத் தழுவினான் றகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்.

வேறு

தழுவின புளிஞர் வேந்தன் றாமரைச் செங்க ணானை
எழுவினு முயர்ந்த தோளா யெய்திய தென்னை யென்ன
முழுதுல களித்த தந்தை முந்தையோர் முறையி னின்றும்
வழுவின னதனை நீக்க மன்னனைக் கொணர்வா னென்றான்.

கேட்டனன் கிராதர் வேந்தன் கிளர்ந்தெழு முயிர னாகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான் விம்மின னுவகைவீங்கத்
தீட்டரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவிற்
பூட்டிய கையன் பொய்யி லுள்ளத்தன் புகல லுற்றான்.

தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கிப்

போயினை யென்ற போழ்து புகழினேன் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே ழாவரோ தெரியி லம்மா. 108

என்புகழ் கின்ற தேழை யெயினனே னிரவி யென்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை யொளிகளைத் தவிர்க்கு மாபோன்
மன்புகழ் பெருமை நுங்கண் மரபினோர் புகழ்க ளெல்லாம்
உன்புக ழாக்கிக் கொண்டா யுயர்குணத் துரவுத் தோளாய்.

எனவிவை யன்ன மாற்ற மியைவன பலவுங் கூறிப்
புனைகழற் புலவு வேற்கைப் புளிஞர்கோன் பொருவில் காதல்
அனையவற் கமைவிற் செய்தா னூரவற் கன்பி லாதார்
நினைவருங் குணங்கொ டன்றோ விராமன்மே னிமிர்ந்த காதல்.

அவ்வழி யவனை நோக்கி யருடரு வாரி யன்ன
செவ்வழி யுள்ளத் தண்ண றென்றிசைச் செங்கை கூப்பி
எவ்வழி யுறைந்தா னம்மு னென்றலு மெயினர் வேந்தன்
இவ்வழி வீர யானே காட்டுவ லெழுக வென்றான். 111

காரெனக் கடிது சென்றான் கல்லிடைப் படுத்த புல்லின்
வார்சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்
பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான் பருவரற் பரவை புக்கான்
வார்மணிப் புனலான் மண்ணை மண்ணுநீ ராட்டுங் கண்ணான்.

இயன்றதென் பொருட்டி னாலிவ் விடருனக் கென்ற போழ்து, மயின்றனை கிழங்குங் காயு மமிர்தென வரிய புல்லிற், றுயின்றனை யெனவு மாவி துறந்திலன் சுடருங் காசு, குயின்றுயர் மகுடஞ் சூடிஞ் செல்வமுங் கொள்வன் யானே. 113

தூண்டர நிவந்த தோளான் பின்னருஞ் சொல்லு வானந், நீண்டவன் றுயின்ற சூழ லிதுவெனி னிமிர்ந்த நேயம், பூண்டவன் றொடர்ந்து பின்னே போந்தவன் பொழுது நீத்த, தியாண்டென வினிது கேட்டா னெயினர்கோ னிதனைச் சொன்னான். 114

அல்லையாண் டமைந்த மேனி யழகனு மவ்ளுநந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும் வெய்துயிர்ப் போடும் வீரன்

கல்லையாண் டுயர்ந்த தோளாய் கண்கணீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவு நின்று னிமைப்பில நயன மென்றான்.

என்பத்தைக் கேட்ட மைந்த னிராமனுக் கிளையா ரென்று
முன்பொத்த தோற்றத் தேமில் யானென்று முடிவி லாத
துன்பத்துக் கேது வானே னவனது துடைக்க நின்றான் [ன்.
அன்பத்துக் கெல்லை யுண்டே யழகிதென் னடிமை யென்று

அவ்விடை யண்ண ருனு மன்றரும் பொடியின் வை
கித், தெவ்விடை தரநின் றார்க்குஞ் செறிகழற் புளிஞர் கோ
மா அன், இவ்விடைக் கங்கை யாற்றி னேற்றினே யாயி னெ
ம்மை, வெவ்விடர்க் கடனின் றேற்றி வேந்தன்பால் விடுத்த
தென்றான். 117

வேறு

சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற கோசலையைத்
தொழுது நோக்கி, வெற்றித்தார்க் குரிசிலிவ ராரென்று
குகன்வினவ வேந்தர் வைகு, முற்றத்தான் முதற்றேவி
மூன்றுலகு மீன்றானை முன்னீன் றானைப், பெற்றத்தாற்
பெறுஞ்செல்வம் யான்பிறத்த லாற்றுறந்த பெரியா ளென்
றான். 118

என்றலுமே யடியின்மிசை நெடிதுவிழ்ந் தழுவானை
யிவன்யா ரென்று, கன்றுபிரி காராவின் றுயருடைய கொடி
வினவக் கழற்கான் மைந்தன், இன்றுணைவ னிராகவனுக்
கிலக்குவற்கு மிளையவற்கு மெனக்கு மூத்தான், குன்ற
னைய திருநெடுந்தோட் குகனென்பா னிந்நின்ற குரிசி லென்
றான். 119

நைவிர லீர்மைந்தீ ரினித்துயரா னுடிறந்து காடு நோ
க்கி, மெய்விரர் பெயர்ந்ததுவு நலமாயிற் றுமன்றே விலங்கற்
றிண்டோள், கைவிரக் களிறனைய காளையிவன் றன்னோடுங்
கலந்து நீங்கள், ஐவீரு மொருவீரா யகலிடத்தை நெடுங்
கால மளித்தி ரென்றாள். 120

அறந்தானே யென்கின்ற வயனின்று டனைநோக்கி
யைய வன்பி, னிறந்தானை யுரையென்ன நெறிதிறம்பாத்

தன்மெய்யை நிற்ப தாக்கி, இறந்தான்ற னிளந்தேவி யா
வர்க்குந் தொழுகுலமா மிராமன் பின்பு, பிறந்தானு முள
னென்னப் பிரியாதான் றனைப்பயந்த பெரியா ளென்றான்.

சுடுமையா னத்திடைதன் றுணையேகத் தோன்றறுய
ர்க் கடலி னேகக், கடுமையார் கானகத்துக் கருணையார் கலி
யேகக் கழற்கான் மாய, னெடுமையா லன்றளந்த வுலகெல்
லாம் தன்மனத்தே நினைந்து செய்யுங், கொடுமையா லளந்
தாளே யாரிவரென் றுரையென்னக் குரிசில் கூறும். 122

படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்குஞ் செவிலி
யைத்தன் பாழ்த்த பாவிக், குடரிலே நெடுங்காலங் கிடந்
தேற்கு முயிர்ப்பாரங் குறைந்து தேய, உடரெலாங் முயி
ரிலா வெனத்தோன்று முலகத்தே யொருத்தி யன்றே, இட
ரிலா முகத்தாளை யறிந்திலையே லிந்நின்றா ளென்னை யீன்
றாள். 123

வேறு

என்னக் கேட்டவ் விரக்க மிலாளையும்
தன்னற் கையின் வணங்கினன் றாயென
அன்னப் பேடை சிறையில தாய்க்கரை
துன்னிற் றென்னவும் வந்தது தோணியே. 124

(கம்பராமாயணம்)

## இராமபிரான் சடாயுவைக் காண்டல்

உலகொரு மூன்றுந்த முடைமை யாக்குறும்
அலகறு மிலக்கண மமைந்த மெய்யினர்
மலர்மகட் குவமையா ளோடும் வந்தவிச்
சிலைவலி வீரரைத் தெரிகி லேனென்று. 125

கருமலை செம்மலை யனைய காட்சியர்
திருமகிழ் மார்பினர் செங்கண் வீரர்தாம்
அருமைசெய் குணத்தினென் றுணைவ னூழியான்
ஒருவனை யிருவரு மொத்து ளாரரோ. 126

எனப்பல நினைப்பின மனத்து ளெண்ணுவான்
சினப்படை வீரர்மேற் செல்லு மன்பினன்

கனப்படை வரிசிலைக் காளை நீங்கள்யார்
மனப்பட வெனக்குரை வழங்கு விரென்றான். 127

வினவிய காலையின் மெய்ம்மை யல்லது
புனைமலர்த் தாரவர் புகல்கி லாமையாற்
கனைகட னெடுநிலங் காவ லாழியான்
வனைகழற் றயரதன் மைந்தர் யாமென்றார். 128

உரைத்தலும் பொங்கிய வுவகை வேலையன்
தரைத்தலை யிழிந்தவர்த் தழுவுங் காதலன்
விரைத்தடந் தாரினிர் வேந்தர் வேந்தன்றன்
வரைத்தடந் தோளிணை வலிய வோவென்றான். 129

மறக்கமுற் றுதன வாய்மை காத்தவன்
துறக்கமுற் றானென முன்னஞ் சொல்லலும்
இறக்கமுற் றானென வேக்க மெய்தினான்
உறக்கமுற் றானென வுணர்வு நீங்கினான். 130

தழுவின ரெடுத்தனர் தடக்கை யான்முகங்
கழுவின ரிருவருங் கண்ணி னீரினால்
வழுவிய தென்னுயிர் வந்த மன்னனும்
அழிவுறு நெஞ்சின னரற்றி னானரோ. 131

**வேறு**

பரவலருங் கொடைக்குநின்றன் பனிக்குடைக்கும் பொறைக்குநெடும் பண்பு தோற்ற, கரவலருங் கற்பகமு முடிபதியுங் கடலிடமுங் களித்து வாழப், புரவலர்தம் புரவலனே பொய்ப்பகையே மெய்க்கணியே புகழின் வாழ்வே, இரவலரு நல்லறமும் யானுமினி யென்படநீத் தேகி னாயோ. 132

அலங்கார மெனவுலகுக் கமுதளிக்குந் தனிக்குடையா யாழி சூழ்ந்த, நிலங்காவ லதுகிடக்க நிலையாத நிலையுடையே னைய நெஞ்சின், நலங்காண நடந்தனையோ நாயகனே தீவினையே னண்பி னின்றாய், விலங்கானே னதலினால் விலங்கினே னின்னுமுயிர் விட்டி லேனால். 133

தயிருடைக்கு மத்தென்ன வுலகைகலி சம்பரனைத் தடிந்த வந்நாள், அயிர்கிடக்குங் கடல்வலயத் தயலறிய நீயு டனு ளுவி யென்று, செயிர்கிடத்தல் செய்யாத திருமனத் தாய் செப்பினுய் திறம்பா நின்சொல், உயிர்கிடக்க வுடலை விசும் பேற்றினு ருணர்விறந்த கூற்றி னுரே. 134

அருணன்றன் புதல்வனியா னவன்படரு முலகெல்லாம் படர்வே ளுழி, இருண்மொய்ம்பு கெடத்துரந்த தயரதற்கி னுயிர்த்துணைவ னிமையோ ரோடும், வருணங்கள் வகுத் திட்ட காலத்தே வந்துதித்தேன் கழுகின் மன்னன், தருணங்கொள் பேரொளியீர் சம்பாதி பின்வருச டாயு வென்ருன். 135

ஆண்டவனீ துரைசெய்ய வஞ்சலித்த மலர்க்கையா ரன்பி ஞேடு, மூண்டபெருந் துன்பத்தான் முறைமுறையி னிறைமலர்க்கண் மொய்த்த நீரார், பூண்டபெரும் புகழ் நிறுவித் தம்பொருட்டான் மேலுலகம் புக்க தாதை, மீண் டனன்வந் தானவனைக் கண்டனரே யொத்தனரவ் விலங்கற் ருேளார். 136

மருவினிய குணத்தவரை யிருசிறகா லுறத்தழுவி மக் கா ணீரே, உரியகடன் வினையேற்கு முதவுவீ ருடலிரண் டுக் குயிரொன் ருனுன், பிரியவுந்தான் பிரியாதே யினிதி ருக்கு முடற்பொறையாம் பீழை பாரா, தெரியதனி லின் றேபுக் கிறவேனே லித்துயர மறவே னென்ருன். 137

வேறு

என்று ரைத்த வெருவை யரசனைத்
துன்று தாரவர் நோக்கித் தொழுதுகண்
ஒன்று முத்த முறையுறை யாயுக
நின்று மற்றின்ன நீர்மை நிகழ்த்தினுர். 138

உய்வி டத்துத வற்குரி யானுந்தன்
மெய்வி டக்கரு தாதுவிண் ணேறினுன்
இவ்வி டத்தினி லெம்பெரு மாதினைக்
கய்வி டிற்பினை யார்களை கண்ணுளார். 139

தாயி னீங்கருந் தந்தையிற் றண்ணகர்
வாயி னீங்கி வனம்புகுந் தெய்திய
நோயி னீங்கினெ முன்னிலெ னெங்களை
நீயு நீங்குதி யோநெறி நீங்கலாய். 140

என்ற சொல்ல ரிரந்தழி நெஞ்சினர்
நின்ற வீரரை நோக்கி நினைந்தவன்
அன்ற தென்னில் லயோத்தியி லையன்மீர்
சென்ற பின்னவர்ச் சேர்குவன் யானென்றான். 141

(கம்பராமாயணம்)

---

## அங்கதன் தூதுசெல்லுதல்

நன்றென வவன்ற னைக்கூய் நம்பிநீ நண்ண லார்பால் [ன்
சென்றிரண் டுரையி னொன்றைச் செப்பினை தெரிதி யென்று
அன்றவ னருளப் பெற்ற வாண்டகை யலங்கற் றோள்
குன்றினு முயர்ந்த தென்றான் மனநிலை கூற லாமோ. 142

என்னவற் குரைப்ப தென்ன வேந்திழை யாளை விட்டுத், தன்னுயிர் பெறுத னன்றே வன்றெனிற் றலைகள் பத்துஞ், சின்னபின் னங்கள் செய்யச் செருக்களஞ் சேர்த னன்றே, சொன்னவை யிரண்டி னொன்றைத் துணியெனச் சொல்லி டென்றான். 143

அறத்துறை யன்று வீரர்க் கழகுமன் றாண்மை யன்று
மறத்துறை யன்று சேம மலைந்துறைந் தொதுங்கி வாழ்
நிறத்துற வாளி கோத்து நேர்வந்து நிற்கு மாகின் [தல்
புறத்துற வெதிரே வந்து போர்தரப் புகறி யென்றான். 144

பார்மிசை வணங்கிச் சீயம் விண்மிசைப் படர்வ தேபோல்
வீரன்வெஞ் சிலையிற் கோத்த வம்பென விரைவிற் போனான்
மாருதி யல்ல னாகி னீயெனு மாற்றம் பெற்றேன்
ஆரினி யென்னோ டொப்பா ரென்பதோ ரின்ப முற்றான்.

அழுகின்ற கண்ண னாகி யனுமன்கொ லென்ன வஞ்சித், தொழுகின்ற சுற்றஞ் சுற்றச் சொல்லிய துறைக

டோறும், மொழிகின்ற வீரர் வார்த்தை முகந்தொறுஞ் செவியின் மூழ்க, எழுகின்ற சேனை நோக்கி வியந்திருந் தானைக் கண்டான். 146

இன்றிவன் றன்னை யெய்த நோக்கினேற் கெதிர்ந்த போரில், வென்றவென் றுதை மார்பின் வில்லின்மேற் கணை யொன் றேவிக், கொன்றவன் றானே வந்தா னென்றுடன் குறுகி னல்லால், ஒன்றிவன் றன்னைச் செய்ய வல்லரோ வுயி ர்க்கு நல்லார். 147

நெடுந்தகை விடுத்த தூத னிவையிவை நிரம்ப வெண்ணிக்
கடுங்கனல் விடமுங் கூற்றுங் கலந்துகால் கரமுங் காட்டி
விடுஞ்சுடர் மகுட மின்ன விரிகட லிருந்த தன்ன [றுன்.
கொடுந்தொழின் மடங்க லன்ன னெதிர்சென்று குறுகினின்

நின்றவன் றன்னை யன்ன னெருப்பெழ நிமிரப் பார்த்திங்
கின்றிவண் வந்த நீயா ரெய்திய கரும மென்னை
கொன்றிவர் தின்ன முன்னங் கூறுதி தெரிய வென்றுன்
வன்றிறல் வாலி சேயும் வாளெயி றிலங்க நக்கான். 149

பூதநா யகனீர் சூழ்ந்த புவிக்குநா யகனப் பூமேல்
சீதைநா யகன்வே றுள்ள தெய்வநா யகனீ செப்பும்
வேதநா யகன்மே னின்ற விதிக்குநா யகன்றுன் விட்ட
தூதன்யான் பணித்தமாற்றஞ் சொல்லிய வந்தேனென்றுன்.

அரன்கொலா மரிகொ லாமற்றயன்கொலா மென்பா ரன்றிக்
குரங்கெலாங் கூட்டி வேலைக் குட்டத்தைச் சேது கட்டி
இரங்குவா ளுகி னின்னு மறிதியென் றுன்னை யேவும்
நரன்கொலா முலக நாத னென்றுகொண் டரக்க னக்கான்.

கங்கையும் பிறையுஞ் சூடுங் கண்ணுதல் கரத்து நேமி
சங்கமுந் தரித்தானுற்ற தறிந்துவந் தூரைச் சாரார்
அங்கவர் தன்மை நிற்க வாரேனு மாக வஞ்சா
திங்குவந் திதனைச் சொற்ற தூதனீ யாவ னென்றுன். 152

இந்திரன் செம்மல் பண்டோ ரிராவண னென்பான் றன்னைச்
சுந்தர புயங்க ளோடும் வாலிடைத் தூங்கச் சுற்றிச்

சிந்துர கிரிக டாவித் திரிந்தனன் றேவர்க் குண்ணா
மந்தர கிரியால் வேலை கலக்கினான் மைந்த னென்றான். 153

உந்தையென் றுணைவ னன்றே யோங்கறஞ்சான் றுமுண்டால்
சிந்தனை யிதன்மே லுண்டே நீயவன் றாத னானால்
தந்தன னினக்கி யானே வானரத் தலைமை தாழா
வந்தனை நன்று செய்தா யென்னுடை மைந்த வென்றான்.

தாதையைக் கொன்றான் பின்னை தலைசுமந் திருகை நாற்றிப், பேதைய னென்ன வாழ்ந்தா யென்பதோர் பிழையுந் தீர்ந்தாய், சீதையைப் பெற்றே னுன்னைச் சிறுவனு மாகப் பெற்றேன், ஏதெனக் கரிய தென்றா னிறுதிநூற் கெல்லை கண்டான். 155

அந்நர ரின்று நாளை யழிவதற் கைய மில்லை
உன்னர சுனக்கே தந்தே னாளுதி யூழி காலம்
பொன்னரி சுமந்த பீடத் திமையவர் போற்றி செய்ய
மன்னவ னாக யானே சூட்டுவென் மகுட மென்றான். 156

அங்கத னதனைக் கேளா வங்கையோ டங்கை தாக்கித்
துங்கவன் றோளு மார்பு மிலங்கையுந் துளங்க நக்கான்
இங்குநின் றார்கட் கெல்லா மிறுதியே யென்ப துன்னி
நுங்கள்பா னின்று மெம்பாற் போந்தன னும்பி யென்றான்.

வாய்தரத் தக்க சொல்லி யென்னையுன் வயஞ்செய் வாயேல்
ஆய்தரத் தக்க தன்றோ தூதுவந் தரச தாள்கை
நீதரக் கொள்வேன் யானே யிதற்கினி நிகர்வே றுண்டோ
நாய்தரக் கொள்ளுஞ் சீய நல்லர சென்று நக்கான். 158

அடுவனே யென்னப் பொங்கி யோங்கிய வரக்க னந்தோ
தொடுவனே குரங்கைச் சீறிச் சுடர்ப்படை யென்று தோன்றா
நடுவனே செய்யத் தக்க நாளுலந் தாற்குத் தூத
படுவதே துணிந்தா யாயின் வந்தது பகர்தி யென்றான். 159

கூவியின் றென்னை நீபோய்த் தன்குல முழுதுங் கொல்லும்
பாவியை யெய்தி யஞ்சி யரண்புக்குப் பதுங்கி னானென்
தேவியை விடுக வன்றேற் செருக்களத் தெதிர்ந்து தன்கண்
ஆவியை விடுக வென்றா னருளினம் விடுகி லாதான். 160

ப்ருந்துணைப் பாட்டி யாக்கை படுத்தநாள் படைஞ ரோடு
மருந்தினு மினிய மாமன் மடிந்தநாள் வனத்துள் வைகி
இருந்துழி வந்த நங்கை யிருசெவி நகிலு மூக்கும்
அரிந்தநாள் வந்தி லாதா னினிச்செயு மாண்மை யுண்டோ.

கிளையொடும் படைஞ ரோடுங் கேடிலா வுயிர்கட் கெல்லாம்
களையன தம்பி மாரை வேரொடுங் களையக் கண்டும்
இளையவன் பிரிய மாய மியற்றியா யிழையை வவ்வும்[டோ.
வளையெயிற் றரக்கன் வெம்போர்க் கினியிவண் வருவதுண்

ஏந்திழை தன்னைக் கண்ணுற் றெதிர்ந்தவர் தம்மை யெற்றிச்
சாந்தெனப் புதல்வன் றன்னைத் தரையிடைத் தேய்த்துத் தன்
காந்தெரி மடுத்துத் தானுங் காணவே கடலைத் தாவிப் [னூர்
போந்தபின் வந்தி லாதா னினிப்பொரும் போரு முண்டோ.

உடைக்குலத் தொற்றர் தம்பா லுயிர்கொடுத் துள்ளக் கள்ளந், துடைத்துழி வருணன் வந்து தொழுதுழித் தொழாத கொற்றக், குடைத்தொழி றம்பி கொள்ளக் கொடுத்துழி வேலை கோலி, அடைத்துழி வந்தி லாதா னினிவர வையமுண்டோ. 164

மறிப்புண்ட தேவர் காண மணிவரைத் தோளின் வைகும், நெறிப்புண்ட ரீக மன்ன முகத்தியர் முன்னே நெண்ணல், பொறிப்புண்ட ரீகம் போலு மொருவனுற் புனைந்த மோலி, பறிப்புண்டும் வந்தி லாதா னினிப்பொரும் பான்மை யுண்டோ. 165

என்றிவை யியம்பி வாவென் றேவின னென்னை யெண்ணி
ஒன்றுனக் குறுவ துன்னித் துணிந்துரை யுறுதி பார்க்கின்
துன்றிருங் குழலை விட்டுத் தொழுதுவாழ் சுற்றத் தோடும்
பொன்றுதி யாயி னென்பின் வாயிலிற் புறப்ப டென்றான்.

நீரிலே பட்ட சூழ்ந்த நெருப்பிலே பட்ட நீண்ட
பாரிலே பட்ட வானப் பரப்பிலே பட்ட வெல்லாம்
போரிலே பட்டு வீழப் பொருதநீ யொளித்துப் புக்குன்
ஊரிலே பட்டா யென்றாற் பழியென வுளையச் சொன்னான்.

---

(கம்பராமாயணம்)

# இராமபிரான் பட்டாபிஷேகம்

தாயருக் கன்று சார்ந்த கன்றெனுந் தகைய னானான்
மாயையிற் பிரிந்தோர்க் கெல்லா மனோலயம் வந்த தொத்தான்
ஆய்வளை யவர்க்குக் கண்ணு ளாடிரும் பாவை யானான்
ஒப்பறுத் துலர்ந்த யாக்கைக் குயிர்புகுந் தாலு மொத்தான்.

எளிவரு முயிர்கட் கெல்லா மீன்றதா யெதிர்ந்த தொத்தான்
அளிவரு மனத்தோர்க் கெல்லா மரும்பத வமுத மானான்
ஒளிவரப் பிறந்த தொத்தா னுலகினுக் கொண்க ணார்க்குத்
தெளிவரு களிப்புச் செய்யுந் தேம்பிழித் தேற லொத்தான்.

ஆவியங் கவன லான்மற் றின்மையா லனைய னீங்கக்
காவியங் கழனி நாடு நகரமுங் கவன்று வாழும்
மாவிய லொண்க ணாரு மைந்தரும் வள்ள லெய்த
ஓவிய முயிர்பெற் றாலே யொத்தன ருணர்வு பெற்றார். 170

சுண்ணமுஞ் சாந்து நெய்யுஞ் சுரிவளை முத்தும் பூவும்
எண்ணெயுங் கலின மாவி லாழியு மெண்ணில் யானை
வண்ணவார் மதமுந் நீரு மான்மதந் தழுவு மாதர்
கண்ணவாம் புனலு மோடிக் கடலையுங் கடந்த வன்றே. 171

மாணிக்கப் பலகை தைத்து வயிரத்திண் கால்கள் சேர்த்தி
ஆணிப்பொன் சுற்று முச்சி யழகுறச் சமைத்த பீடம்
ஏணுற்ற பளிக்கு மாடத் திட்டன ரதனின் மீது [னே.
சேணுற்ற திரடோள் வீரன் றிருவொடு பொலிந்தான்மன்

மங்கல கீதம் பாட மறையொலி முழங்க வல்வாய்ச்
சங்கினங் குமுறப் பாண்டி றண்ணுமை யொலிப்பத் தாவில்
பொங்குபல் லியங்க ளார்ப்பப் பூமழை பொழிய விண்ணோர்
எங்கணா யகனை வெவ்வே றெதிரபி டேகஞ் செய்தார். 173

மாதவர் மறைவ லாளர் மந்திரக் கிழவர் மற்றும்
மூதறி வாள ருள்ளஞ் சான்றவர் முதனீ ராட்டச்
சோதியான் மகனு மற்றைத் துணைவரு மனுமன் றானும்
தீதிலா விலங்கை வேந்தும் பின்னபி டேகஞ் செய்தார். 174

அரியணை யனுமன் றாங்க வங்கத னுடைவா ளேந்தப்
பரதன்வெண் கவிகை பற்ற விருவரும் கவரி வீச
விரைசெறி மாலை மார்பன் வெண்ணெய்நல் லூரான் றன்ன
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.

வெள்ளியும் பொன்னு மென்பார் விதிமுறை மெய்யிற் கொ
ஒள்ளிய நாளி னல்ல வோரையி னுலக மூன்றும் [ண்ட
துள்ளின குனிப்ப மௌலி சூடினன் சுருதி நான்கும்
தெள்ளிய திருவுந் தெய்வப் பூமியுஞ் சேருந் தோளான். 176

சித்தமொத் தனனென் றேதுந் திருநகர்த் தெய்வ நன்னூல்
வித்தக னொருவன் சென்னி மிலைச்சிய தேனு மெய்ம்மை
ஒத்தமூ வுலகத் தோர்க்கு முவகையி னுறுதி யுன்னின்
தத்தமுச் சியின்மேல் வைத்த தொத்ததத் தாம மோலி. 177

(கம்பராமாயணம்)

---

## காலம்

---

### இளவேனிற்காலம்

நமதுசெங் கரங்க ேடாயி னகைமுக விருந்து செய்யுங், கமலநாண் மலரை வாட்டும் பனியினைக் காய்து மென்றே, இமயமால் வரையின் வெம்போர்க் கெழுந்தென வுலகம்போர்த்த, திமிரமேய்ந் துலவும் வெய்யோன் சென்றனன் வடபான் மன்னோ. 178

கள்ளுயிர்த் தலரு முல்லைக் கடிமுகை முறுவ றேன்ற, வள்ளிதழ்க் குவளை யுண்கண் மலர்ந்துமாந் தளிர்மென் கையாக், கிள்ளைமென் குதலை சாற்றிக் கிளரொளி வண்டு பாணுத், தெள்விளி பாட வேனிற் றிருமகள் சிறந்தாளன்றே. 179

குன்றிடைப் பிறந்த தென்றற் கொழுந்துமேற் படர்ந்த தன்மை, துன்றிருட் பிழம்பு சீக்குங் கனைகதிர்ச் சுடரோ னுய, தன்றுணைக் கேள்வ னீங்கி வடபுலஞ் சார்த

லோடுங், தென்றிசை யணங்கு மாழாங் துயிர்த்தது சிவணு மாதோ. 180

(நைடதம்)

### வேறு

முள்ளரை முருக்கு மந்தி முளையிளந் திங்கள் காட்டுங்
கள்ளக முகிழ்ப்ப லாசுங் கடிமல ரவிழ்ந்த தோற்றந்
தள்ளலில் சிறப்பின் வேனி றண்பனிப் பகையி ருந்த
வொள்ளெழி னகர மெல்லா மொருங்கெரி யூட்டிற் றற்றே.

இந்நில வரைப்பி னுள்ளோர் யாவர்க்குங் கேள்வி யின்பந், தன்னொடு பிறந்த வந்தீந் தமிழ்கொடுத் தாங்கு, விண்ணோர், பொன்னக ரணவு கோட்டுப் பொதியமீன் குழ வித் தென்றன், மன்னிய வுயிர்கட் கூற்றின் வருமின்பம் விளைத்த தன்றே. 182

(சீகாளத்திப்புராணம்)

## முதுவேனிற்காலம்

இன்னிள வேனில் செல்ல விருங்கடல் சுவற விண் டோய், சென்னியங் குன்ற மெல்லாந் திசைமுக மழற்றச் செங்கேழ்ப், பன்னிரு சுடரு மொன்றாய்ப் பகற்கதிர் பர ப்பி யாங்கு, மன்னுயிர்த் தொகைவெ தும்ப வந்தது முதிய வேனில். 183

வெந்தழ னிலத்து வெண்டேர் மென்புன லெனம யங்க
விந்திர சாலஞ் செய்த தெறிவளி மரமுந் தீய
நந்தலில் பெருஞ்சி றப்பு நல்குகண் ணோட்ட மில்லாச்
சிந்தையர் கடுஞ்சொ லென்னத் தீமுகந் திறைத்த தன்றே. 184

நீடழல் வெஞ்சு ரத்து நீரின்றி நாவு லர்ந்து
வாடுபு நிழல்பெ றாது வருந்துபு திரியு மாக்கள்
கோடிய கோல னாகிக் குடிகெட வலைக்குங் கல்லார்க்
கூடிய வறனில் வேந்தன் குடைபெறாக் குடிக ளொத்த. 185

நெடுநெறி மரங்க ளெல்லா நீணிதி யோடு சுற்றத் [ட்ட
தொடர்புடை யவர்போன் மக்கட் டொகுதியாற் சூழப் ப

தொடுகழல் கிழிக்குங் கூர்ங்கற் சுடுபர லொடுவி ராய
வடுதழற் சுரங்க ளெல்லா மான்வழுக் கற்ற வன்றே. 186

**(சீகாளத்திப்புராணம்)**

---

வேறு

மண்கொதிப்ப வறல்கொதிப்ப வளிகொதிப்ப வெண்ணுவா
ரெண்கொதிப்ப நறுநீழ லியைமனைவிட் டகலார்க்குங் [சார்
கண்கொதிப்பக் கரங்கொதிப்பக் கால்கொதிப்பக் கற்பகஞ்
விண்கொதிப்ப வவ்வேனில் வெம்பருவ மேவியதால். 187

குலவுதனை விழுங்குவகை கொண்டகோட் கினமாகி
யிலகரவ நாடனைத்து மிதுசமய மெனப்பரிதி
பலகதிரும் புகுந்துடற்றப் பண்ணியசெவ் வழிபோலு
நிலமகட னுடல்வெடிப்ப நேர்தோன்றும் பெருங்கமர்கள்.

நலக்கதிர்செய் நம்பகையை நான்மறையோ ரிதுகொ
ண்டே, விலக்குவர்நாங் கொண்டிருப்பின் மேவாதெப்
பகையுமெனப், புலத்தமைத்துக் கவர்ந்தான்போற் பொ
ய்கைகுளங் கானதிமுன், னிலத்தமைத்த நீரெல்லா நெடும்
பரிதி கவர்ந்தனனால். 189

தெள்ளுபுன னசைமிக்குத் திரிமருப்பி னிரலையெலா,
நள்ளரிய பேய்த்தேரின் பின்றொடர்ந்து நலிந்திடுமால்,
வள்ளலென வெளிக்காட்டி வஞ்சிக்கு முலோபர்கள்பி, னெ
ள்ளுவறு மைப்பிணியோர் தொடர்ந்துதொடர்ந் திளைப்
பதுபோல். 190

காலோடை வாவிகுள முதலாய கணக்கிலவன்
மேலோடும் புனல்வறப்ப வவற்றுறைமென் பறவைகணற்
பாலான வொருவனிடம் பற்றியினி துண்டகிளை
யேலாத்துன் பவனுறுங்கா லிரிவதென விரிந்தனவால். 191

வாவிகாள் குளங்காணீர் வற்றினீர் முன்னளித்த
மேவியவின் சுவைப்புனலால் வீங்கினே மிதுபொழுது
பாவியவப் புனலளிப்பேம் பற்றுமெனக் கால்வதுபோற்
பூவியன்மக் கள்ளுடம்பு பொங்குவெயர் நீர்காலும். 192

வாங்குகட லகம்புகுந்து வடவைவதி வதையறிந்தா
மோங்குகடல் சுவற்றவென வுலகுரைத்த லதுபொய்யே
தேங்கியவிப் பருவத்தாற் செறிவெப்பிற் காற்றுமை
யாங்குகுளி ரிடந்தேடி யஞ்சியொளித் ததுபோலும். 193

இத்தகைய வேனிலிடை யிரும்பசியா லறமெலிந்தும்
பைத்ததரு நிழலிருந்தும் பள்ளமெலா மாராய்ந்துந்
தத்துபுனல் கிடையாமைத் தாகத்தால் வாய்புலர்ந்துஞ்
சுத்தவிர தத்தவநற் றுறைநின்றோன் செல்லுமால். 194

(குசேலோபாக்கியானம்)

---

## கார்காலம்

குயினெலா மன்ன மென்னக் குரைகட லுடிச் சென்று
வயினிரு புடையும் விம்ம வாய்மடுத் துண்டு தோகை
மயில்கள்போற் குன்ற நாடி வந்துநீள் சிமய முற்றி
வியனிரு விசும்பெ ழுந்து விரிகட லுமிழ்ந்த மன்னோ. 195

தடங்கடல் குறைய வுண்ட தழங்குரற் கொண்டல் வான, மடங்கலுங் கவிந்து விண்டோ யடுக்கல்கள் புதைய நின்று, குடங்கொடு சொரிவ தென்னக் குளங்கள்கோ டுடைய வெய்யோன், சுடுங்கதி ருலகம் வேட்பச் சோவெ னச் சொரிந்த தன்றே. 196

(சீகாளத்திப்புராணம்)

---

## கூதிர்காலம்

உடலலை குளிரினுக் குடைந்த வில்லவர்
தடவினு ணெருப்பினைத் தணத்த லஞ்சினர்
கடவுளர் பசிப்பிணி களையும் வேள்வியிற்
சுடரழல் பிரிகலாத் தொழுகு லத்தர்போல். 197

தண்டையஞ் சீறடித் தருண மைந்தரும்
வெண்டயிர் வெண்ணெய்மோர் வெறுத்து வேட்டன
ருண்டொறும் வெய்யன வுணவு நீரிடங்
கொண்டன வுயிர்களுங் குளிர்க்கு டைந்தவே. 198

எரிசுடர் நெருப்பைநீ ரென்ன வேட்டனர்
தருகுளிர் நீரினைத் தழலி னஞ்சினு
ரிருசெவி களுந்துகி லிறுகச் சுற்றுபு
விரனிரை மறைபட மெய்ப்பை புக்கனர். 199

(சீகாளத்திப்புராணம்)

## பனிக்காலம்

திருமலர் முதலிய திகைப்பப் புன்புலம்
வருவன பயிர்சில மகிழ வந்தன
விருபனி யிருதுவும் யாவர் யாவர்க்கு
மொருநிகர் நடையின ருலகிற் றேரினே. 200

கண்ணக னுலகெலாங் கவைஇய தண்பனி
விண்ணுயர் வரைகளும் வேலை ஞாலமு
மண்ணணி டிமயமு மதனைச் சூழ்தரு
மண்ணுமா யினவென மருளச் செய்ததே. 201

வளர்பசும் புற்செறி வயின்றெ றும்பனித்
துளிசுட ரிளங்கதிர் தொடவி ளங்குவ
வொளிர்மர கதத்தக டுறவ ழுத்திய
நளிகொள்செம் மணிகளை நகுதல் செய்யுமே. 202

(சீகாளத்திப்புராணம்)

## கருப்புக்காலம்

காலை தண்பனி சொரிதலு நண்பகற் கால
நீல வான்புதை முகிலினம் பெய்வபோ னின்று
மாலை தோன்றுமுன் மலர்தலை வான்கழு வியது
போல நீங்கலு நிகழ்ந்தன மழைவளம் பொன்ற. 203

பெயல்வ றந்தபைங் கூழெலாம் பீளொடு கரிந்த
பயம்வ றந்தன மரங்களு மலைகளும் பனிநீர்க்
கயம்வ றந்தன கள்ளியும் பெண்ணையும் கதிரின்
வெயிலின் வெந்துதம் பசுமைபோ யுலர்ந்தன் மிகவும். 204

உண்ப தின்பன நனிமிகக் குறைந்தன வொருங்கு
வெண்க லங்களும் வெள்ளியுஞ் செம்பொனும் விளங்கு

மண்கொ ளொன்பது வகையநன் மணிகளு மலிந்த
வெண்ப தம்பெற லரியதா யிற்றுமன் யார்க்கும். 205

நீடுந் தீப்பசி யாற்குடர் கொளுந்திய நிலத்தோ
ராடுந் தின்கலா வடகுதின் றனர்நில னகழ்ந்து
வாடும் பல்வகைக் கந்தமுந் தின்றனர் மக்கள்
காடுங் குன்றமு நிரம்பினர் தின்பன கருதி. 206

சிறுவர் கையன் தாயர்தாம் பறித்தனர் தின்றூர்
முறுகு தீப்பசி பொறுக்கலார் மக்களுன் முதலா
வுறுப சுந்தசை யாவையுந் தின்றன ருலகத்
தறைப முஞ்சொலைப் புதுக்கினர் மானமாண் பற்றூர். 207

(சீகாளத்திப்புராணம்)

## வறுமை

தரித்திர மிக்க வனப்பினை யொடுக்கிச் சரீரத்தை யுல ர்தர வாட்டுந், தரித்திர மளவாச் சோம்பலை யெழுப்புஞ்சா ற்றரு முலோபத்தை மிகுக்குந், தரித்திரந் தலைவன் தலை வியர்க் கிடையே தடுப்பருங் கலாம்பல விளைக்குந், தரித்திர மவமா னம்பொய்பே ராசை தருமிதிற் கொடியதொன்றிலை யே. 208

தரித்திரங் களிப்பாங் கடலுக்கோர் வடவை சாற்று மெண் ணங்கள்வா ழிடமாந், தரித்திரம் பற்ப றுக்கமுந் தோன்றத் தக்கபே ராகர மென்ப, தரித்திர நன்மை சாலொ ழுங் கென்னுந் தழைவனந் தனக்கழ றழலாந், தரித்திரங் கொடிய வெவற்றினுங் கொடிதத் தகையதை யொழித்த னன் றூமே. 209

(குசேலோபாக்கியானம்)

## செல்வச்செருக்கு

தெற்றுங்கி ரப்புளோர் வாழ்ந்திடு செல்வர்பாற் செல்வ ரேன் மதியார்கண், மறுவு றுத்தவ மானமு மியற்றுவர் மா னமுள் ளவராயிற், குறுகு மவ்வவ மானத்தா லுயிர்விடுங் கொள்கையிற் றலைநிற்பார், நறும லர்க்குழா லாதலா லவ ரிடை நண்ணனன் றெனவெண்ணல். 210

ஒன்றும் வேண்டல ராயினுஞ் செல்வர்பா லுறுமிடி ய
வர்சார்ந்தா, லின்று வந்தமை யாதினைக் கருதிமற் றிவரென
வுளத்தெண்ணிக், கன்று மாறுபல் குறிப்புரை நவிற்று
வர் காதலி னவர்பாற்போய், மன்ற வந்தது சிறுமையே
யிவர்க்கன்றி மற்றிலை யறிபாவாய். 211

(குசேலோபாக்கியானம்)

---

## இராசதருமம

பால்வளை பரந்து மேயும் படுகடல் வளாக மெல்லாங்
கோல்வளை யாமற் காத்துன் குடைநிழற் றுஞ்ச நோக்கி
நூல்விளைந் தனைய நுண்சொற் புலவரோ டறத்தை யோம்
மேல்விளை யாத வின்பம் வேந்தமற் றில்லை கண்டாய். [பின்

வாய்ப்படுங் கேடு மின்றாம் வரிசையி னறிந்து நாளுங்
காய்த்தநெற் கவளந் தீற்றிற் களிறுதான் கழனி மேயின்
வாய்ப்பட லின்றிப்பொன்றும் வல்லனாய் மன்னன் கொள்ளி
னீத்தநீர் ஞால மெல்லா நிதிநின்று சுரக்கு மன்றே. 213

நெல்லுயிர் மாந்தர்க் கெல்லா நீருயி ரிரண்டுஞ் செப்பிற்
புல்லுயிர் புகைந்து பொங்கு முழங்கழ லிலங்கு வாட்கை
மல்லலங் களிற்று மாலை வெண்குடை மன்னர் கண்டாய்
நல்லுயிர் ஞாலந் தன்னு ளுமவே நம்பி யென்றான். 214

ஆர்வலஞ் சூழ்ந்த வாழி யலைமணித் தேரை வல்லா
னேர்நிலத் தூரு மாயி னீடுபல் காலஞ் செல்லு
மூர்வல மறித றேற்றா தூருமேன் முறிந்து வீழுந்
தார்நில மார்ப வேந்தர் தன்மையு மன்ன தாமே. 215

காய்ந்தெறி கடுங்கற் றன்னைக் கவுட்கொண்ட களிறு போல
வாய்ந்தறி வுடைய ராகி யருளொடு வெகுளி மாற்றி
வேந்தர்தாம் விழைப வெல்லாம் வெளிப்படார் மறைத்தல்
நாந்தக வுழவ ரேறே நன்பொரு ளாவ தென்றான். [கண்டாய்

குடிபழி யாமை யோம்பிற் கொற்றவேன் மன்னர் மற்றுன், அடிவழிப் படுவர் கண்டா யரும்புகழ் கெடுத லஞ்சி, நொடியலோ ரெழுத்தும் பொய்யை நுண்கலை நீத்த

நீந்திக், கொடியெடுத் தவர்க்கு நல்கு கொழித்துணர் குமர
வென்றான். 217

(சீவகசிந்தாமணி)

காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கு
மறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்து
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணா னுலகமுங் கெடுமே. 218

கால்பார் கோத்து ஞாலத் தியக்குங்
காவற் சாகா டுகைப்போன் மாணின்
ஊறின் றாகி யாறினிது படுமே
யுய்த்த றேற்றா னாயின் வைகலும்
பகைக்கூ ழள்ளற் பட்டு
மிகப்பஃ றீநோய் தலைத்தலைத் தருமே. 219

நெல்லுமுயி ரன்றே நீருமுயி ரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே. 220

(புறநானூறு)

---

## பெறுதற்கருமை

பரவை வெண்டிரை வடகடற் படுநுகத் துளையுட்
டிரைசெய் தென்கட லிட்டதோர் நோன்கழி சிவணி
யரச வத்துளை யகவயிற் செறிந்தென வரிதாற்
பெரிய **சன்மங்கள்** பிழைத்திவண் மானிடம் பெறலே.

விண்டு வேய்நர லூன்விளை கானவ ரிடனுங்
கொண்டு கூர்ம்பனி குலைத்திடு நிலைக்களக் குறும்பும்
உண்டு நீரென வுரையினு மரியன வொருவி
மண்டு தீம்புனல் வளங்கெழு நாடெய்த லரிதே. 222

வில்லின் மாக்கொன்று வெண்ணிணத் தடிவிளிம் படுத்த
பல்லி னூர்களும் படுகடற் பரதவர் முதலா
வெல்லை நீங்கிய விழிதொழி லிழிகுல மொருவி
நல்ல தொல்குலம் பெறுதலு நரபதி யரிதே. 223

கருவி மாமழை கனைபெயல் பொழிந்தென வழிநாள்
அருவி போற்றொடர்ந் தழுதன வரும்பிணி யழலுட்
கருவிற் காய்த்திய கட்டளைப் படிமையிற் பிழையா
துருவின் மிக்கதோ ருடம்பது பெறுதலு மரிதே. 224

காம னன்னதோர் கழிவனப் பறிவொடு பெறினு
நாம நாற்கதி நவைதரு நெறிபல வொருவி
வாம னூனெறி வழுவறத் தழுவின ரொழுகல்
ஏம வெண்குடை யிறைவமற் றியாவது மரிதே. 225

(சீவகசிந்தாமணி)

---

## பாரியின் வள்ளன்மை

நல்லவுந் தீயவு மல்ல குவியிணர்ப்
புல்லிலை யெருக்க மாயினு முடையவை
கடவுள் பேணே மென்னா வாங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரி கைவண் மையே. 226

பாரி பாரி யென்றுபல வேத்தி
யொருவற் புகழ்வர் செந்நாப்புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே. 227

கடந்தடு தானை மூவிருங் கூடி
யுடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே

முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே. 228

அளிதோ தானே பாரியது குன்றே
வேலின் வேறல் வேந்தர்க்கோ வரிதே
நீலத் திணைமலர் புரையு முண்கட்
கிணைமகட் கெளிதாற் பாடினள் வரினே. 229

(புறநானூறு)

## மக்கட்பேறு

படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணு
முடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
யிட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்து
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே. 230

(புறநானூறு)

## ஆற்றுவரி (காவேரி)

உழவ ரோதை மதகோதை யுடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி
விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்த தெல்லாம் வாய்காவா
மழவ ரோதை வளவன்றன் வளனே வாழி காவேரி. 231

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை யதுபோர்த்துக், கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி, கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்த தெல்லா நின் கணவன், திருந்து செங்கோல் வளையாமை யறிந்தேன் வாழி காவேரி. 232

பூவார் சோலை மயிலாடப் புரிந்து குயில்க ளிசைபாடக்
காமர் மாலை யருகசைய நடந்தாய் வாழி காவேரி

காமர் மாலை யருகசைய நடந்த தெல்லா நின்கணவன்
நாம வேலின் றிறங்கண்டே யறிந்தேன் வாழி காவேரி. 233

வாழி யவன்றன் வளநாடு மகவாய் வளர்க்குந் தாயாகி
யூழி யுய்க்கும் பேருதவி யொழியாய் வாழி காவேரி
யூழி யுய்க்கும் பேருதவி யொழியா தொழுக லுயிரோம்பும்
ஆழி யாள்வான் பகல்வெய்யோ னருளே வாழி காவேரி. 234

(சிலப்பதிகாரம்)

---

## அம்மானைவரி

வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோ
னோங்கரணங் காத்த வுரவோன்யா ரம்மானை
யோங்கரணங் காத்த வுரவோ னுயர்விசும்பிற்
றூங்கெயின் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை
சோழன் புகார்நகரம் பாடேலோ ரம்மானை. 235

புறவுநிறை புக்குப் பொன்னுலக மேத்தக்
குறைவி லுடம்பரிந்த கொற்றவன்யா ரம்மானை
குறைவி லுடம்பரிந்த கொற்றவன் முன்வந்த
கறவை முறைசெய்த காவலன்கா ணம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோ ரம்மானை. 236

கடவரைக ளோரெட்டுங் கண்ணிமையார் காண
வடவரைமேல் வாள்வேங்கை யேற்றினன் யாரம்மானை
வடவரைமேல் வாள்வேங்கை யேற்றினன் றிக்கெட்டுங்
குடைநிழலிற் கொண்டளித்த கொற்றவன்கா ணம்மானை
கொற்றவன்றன் பூம்புகார் பாடேலோ ரம்மானை. 237

(சிலப்பதிகாரம்)

---

## கந்துகவரி

பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய்கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைக ளார்ப்பவார்ப்ப வெங்கணுந்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந்த டித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந்த டித்துமே. 238

பின்னுமுன்னு மெங்கணும்பெ யர்ந்துவந்தெ ழுந்துலாய்
மின்னுமின்னி ளங்கொடி வியனிலத்தி ழிந்தெனத்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந்த டித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந்த டித்துமே. 239

துன்னிவந்து கைத்தலத்தி ருந்ததில்லை நீணிலந்
தன்னினின்று மந்தரத்தெ ழுந்ததில்லை தானெனத்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந்த டித்துமே
தேவரார மார்பன்வாழ்க வென்றுபந்த டித்துமே. 240

(சிலப்பதிகாரம்)

## ஊசல்வரி

வடங்கொண் மணியூசன் மேலிரீஇ யையை
யுடங்கொருவர் கைநிமிர்த்தாங் கொற்றைமே லூக்கக்
கடம்பு முதறடிந்த காவலனைப் பாடிக்
குடங்கைநெடுங் கண்பிறழ வாடாமோ வூசல்
கொடுவிற் பொறிபாடி யாடாமோ வூசல். 241

ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் றிறம்பாடிக்
கார்செய் குழலாட வாடாமோ வூசல்
கடம்பெறிந்த வாபாடி யாடாமோ வூசல். 242

வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கற்
றென்குமரி யாண்ட செருவிற் கயற்புலியான்
மன்பதைகாக் குங்கோமான் மன்னன் றிறம்பாடி
மின்செ யிடைநுடங்க வாடாமோ வூசல்
விறல்விற் பொறிபாடி யாடாமோ வூசல். 243

(சிலப்பதிகாரம்)

## ஆய்ச்சியர்குரவை

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் மாயமோ மருட்கைத்தே. 244

அறுபொரு ளிவனென்றே யமரர்கணந் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே யுலகடைய வுண்டனையே
உண்டவாய் களவினா லுறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே. 245

திரண்டமரர் தொழுதேத்துந் திருமாலின் செங்கமல
விரண்டடியான் மூவுலகு மிருடீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே. 246

வேறு

மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே. 247

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணுந்
திருவடியுங் கையுங் கனிவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே. 248

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பா னாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராய ணாவென்னா நாவென்ன நாவே. 249

(சிலப்பதிகாரம்)

## அறவுரை

*　　　*　　　*

*　　　*　　　*

தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்

தெய்வந் தெளிமின் றெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் டுறமி னுயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்மின் றவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் றீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோ ரவைக்கள மகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை யஞ்சுமின் பிழையுயி ரோம்புமின்
அறமனை காமி னல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்
இளமையுஞ் செல்வமும் யாக்கையு நிலையா
உளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென.

(சிலப்பதிகாரம்)

செய்யுட்டிரட்டு இரண்டாம் பாகம் முற்றிற்று.

ஸ்ரீ

# உரைநடைத்திரட்டு

## இரண்டாம்பாகம்

## தெய்வங்கொள்கை

---

இஃது,

**ஆஸ்திக நாஸ்திக சம்வாதமாகச் செய்யப்பட்டது.**

**ஆஸ்திகன்:**—"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

என்னும் குறள் வெண்பாவினால், "எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன; அதுபோல உலகு ஆதிபகவனாகிய முதலையுடைத்து" என்னும் கருத்தைத் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் வெளியிட்டருளியபடி, இம்மலை நெருப்புடையது புகையினா லென்பதுபோலவும், குடமுதலிய காரியமுண்டாவதற்குக் குயவனாகிய நிமித்தகாரணன் ஒருவன் இருத்தல்போலவும், இந்தப் பிரபஞ்சம் படைத்தல், காத்தல், அழித்தல் என்கிற முத்தொழில் படுதலால் அக்காரியம் உண்டாவதற்கு நிமித்த காரணமாகிய கடவுள் ஒருவர் உண்டென்றும், மண் போல மாயையாகிய முதற்காரணம் உண்டென்றும், தண்ட சக்கரம்போல நல்வினை தீவினைகளாகிய துணைக் காரணம் உண்டென்றும், ஆன்மாக்கள் பந்தமோக்ஷத்தை அடையும்படி இவ்வாறு காரியப்படுமென்றும் அநுமானப் பிரமாணத்தாற் கொள்ளவேண்டும்.

**நாஸ்திகன்:**—அப்படியாயின் மூலப் பிரகிருதியாகிய மாயையினாலும் பரமாணுக்களினாலும் இவ்வுலகம் காரியப் படமாட்டாதா? சற்றே விவரணமாகச் சொல்லவேண்டும்.

**ஆஸ்திகன்:**—மாயையும் பரமாணுக்களும் அறிவில்லாத சடமாகையால் அறிவுடையவனாலேயல்லாமல் அவைகளால் உலகம் காரியப்படமாட்டாதென்பது நிச்சயம்.

**நாஸ்திகன்:**—ஆனால் அறிவுடைய ஜீவர்களால் உலகம் உண்டாகலாமே; அதற் கென்ன தடை?

**ஆஸ்திகன்:**—ஒருதேரைச் செய்வதற்குப் பற்பலவேலைக்காரர் வேண்டியிருப்பினும் ரதாசாரியனாகிய ஒருவனாலேயே அந்தரதம்உண்டாகின்றதனாலும்,உலகத்தை உண்டாக்குகையாகிய காரியம் மிகவும் பெரிய காரியமாகையினாலும், அச்சீவர்களிடத்தில் கிஞ்சிஞ்ஞத்துவம் (அதாவது சிற்றறிவுடைமை) முதலிய தோஷம் உண்டாயிருக்கையாலும் அச்சீவர்களால் உலகம் காரியப்பட மாட்டாது. ஆகையால், பிரபஞ்சத்திற்குச் சர்வஞ்ஞராகிய ஈசுவரர் ஒருவரே கர்த்தாவாகின்றார் என்பது நிச்சயம் என அறியக்கடவீர். மேலும் சாதாரணமாய்ச் சூரியனால் அன்றி மலர்கின்றவை மலரவும், குவிகின்றவை குவியவும், உருகுகின்றவை உருகவும், இறுகுகின்றவை இறுகவுங் கூடுமா? கூடாதே; அதுபோல, அகிலலோகங்களுக்கும் தாமே காரணமாகித் தமக்கொரு காரணமும் இல்லாது விளங்கும் கடவுளாலன்றி, எல்லா உயிர்களும் அபிவிர்த்தியடைவதற்கு உபயுக்தமாக மழை பெய்யும்பருவத்திற் பெய்யவும், வெயில் காயும்பருவத்திற் காயவும், காற்று வீசும்பருவத்தில் வீசவும், பொழுது விடியும் பருவத்தில் விடியவும் அஸ்தமிக்கும்பருவத்தில் அஸ்தமிக்கவும் கூடுமா? ஏரி, குளம்முதலானவைகளை மனிதர்கள் உண்டாக்குகின்றார்களே; அளவிடப்படாத அகலமும் நீளமும் ஆழமும் உடைய கடலை அவர்களுண்டாக்க முடியுமா? அதை யாருண்டாக்கினார்? ஏரிமுதலானவைகளுக்குக் கரையிருக்கின்றதே; கடலுக்குக் கரையுண்டா? அது எப்படித் தடைபட்டிருக்கின்றது? ஏரிமுதலானவைகள் வற்றிப்போகின்றனவே; கடல் ஏன் வற்றவில்லை? சாமானியமாகிய ஓரேரி உடைந்தால் அநேக கிராமங்கள் முழுகிப்போகின்றனவே; பெரிய கடல் பொங்கி வந்தால் உலகம் நிலைநிற்குமா? அதை அப்படி வராமல் தடுக்கின்றவர் யார்? ஒருகாலத்தில் காற்று விசையாக வீசினால் குன்றுகள், கோபுரங்கள், கோட்டைகள், கொத்தளங்களெல்லாம் நிர்த்தூளியாக அண்டபிண்டமுங் கலங்குகின்றனவே; அது பின்னும் கொஞ்சம் உக்கிரமாய் வீசுமானால் எது எப்படியாகாது? சித்திரை வைகாசி மாதங்களில் சூரியனுடைய

கிரணத்தின் வெப்பம் சிறிது அதிகப்படுவதனுல், உலகினர்க்கு மிக்க சங்கடங்கள் உண்டாகின்றனவே; அது அந்தமிதத்திற்குச் சிறிது மேற்படுமானுல் எவராலே சகிக்கக்கூடும்? கடல்முதலியவைகளை அவ்வாறு அதிக்கிரமிக்கவொட்டாமல் அடக்குகின்றவர்யார்? மழையைப்பற்றினவரையில் அதிவிருஷ்டி, அநாவிருஷ்டி என்று இரண்டு தோஷமுண்டு; அவைகளில் அதிவிருஷ்டி அதிக மழை, அநாவிருஷ்டி மழையின்மை; அதிகமழை பெய்தால் உலகம் நாசமாய்ப்போம்; மழையில்லாவிட்டாலும் பயன்படாது; அப்படிப்பட்ட தோஷம் சம்பவியாமல் சமவிருஷ்டியாய் மழை பெய்விக்கின்றவர் யார்?

"மாரி
வறப்பிற் றருவாரு மில்லை யதனைச்
சிறப்பிற் றணிப்பாரு மில்"

என நாலடி நானூற்றில் முனிவரருங் கூறினுர். சூரியனும் சந்திரனும், பகலும் இரவும், வெயிலும் மழையும், உஷ்ணமும் சீதமும், கோபமும் பொறுமையும், ஜனனமும் மரணமும், நரகமும் மோட்சமும், ஒன்றற்கொன்று எதிரிடையாக அமைக்கப்பட்டது யாராலே? பிணிகளை உண்டாக்கி அவைகளைத் தணிக்கும்பொருட்டு ஔஷதங்களைக் கற்பித்தவர் யார்? மனிதர்முகம் ஒன்றுபோல மற்றென்று இருக்கலாகாதா? ஒவ்வொன்றும் வெவ்வேறு சாயலாயிருக்கின்றதே; மேலும் மனிதர்கள் தத்தங் குணம், குரல், செய்கைமுதலியவைகளாலும் பல்வேறு வகைப்பட் டிருக்கின்றுர்களே; அல்லாமலும் ஓர் உதரத்திற் றேன்றிய பல பிள்ளைகளில் ஒருவரேனும் உருவம், குணம், த்வனி, செய்கைமுதலியவைகளால் மற்றெருவரோடு ஒன்றுபட் டிருக்கக் காணேமே; இஃது எப்படிப்பட்ட ஆச்சரியம்? விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வனவாகிய சாதிகளிலும், மரங்கள் செடிகள் கொடிகளிலும், அவைகளிலுள்ள மலர் காய் கனிகளிலும், மண் கல் முதலியவைகளிலும் எத்தனையோ பேதங்களும் குணரூப விசித்திரங்களும் இருக்கின்றனவே; இவை எவ்வாறு தோன்றின? மண்ணனது இறுகவும், நீரானது பரவவும், தீயா

னது சுடவும், காற்றானது சஞ்சரிக்கவும் ஆகாயமானது இவைகளுக்கெல்லாம் இடந்தரவும் செய்தவர் யார்? உய்த்துணருமிடத்தில் மேற்கூறியவை கடவுளின் செயலென்றே தோன்றுகின்றனவல்லவா?

**நாஸ்திகன்:**—விளங்காய் திரண்டிருப்பதும், களம்பழம் கறுத்திருப்பதும், பால் வெளுத்திருப்பதும் இயல்புதானே; மீன்குஞ்சுக்கு நீச்சும் மான்குட்டிக்கு வேகமும் பயிற்றினவர் யார்? ஒருவரும் இல்லையே? அந்தப்படி அனைத்தும் சுபாவமென்றெண்ணக்கூடாதா? இதைவிட்டு, 'மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவது' போல இவையெல்லாம் கடவுள் செயலென்பதென்னை?

**ஆஸ்திகன்:**—காரணத்திலிருந்து காரியம் தோன்றுவதல்லது யாதொன்றும் நிஷ்காரணமாய்த் தோன்றாதாகையால், சுபாவமென்பது சரியன்று; குலாலன் நிமித்தத்தாலன்றிக் குடம் உதிக்கின்றதா? சூத்திரதாரன் இல்லாமற் பிரதிமை ஆடுகின்றதா? மீகாமன் இல்லாமல் மரக்கலம் ஓடுகின்றதா? சாரதி இல்லாமல் தேர் நடக்கின்றதா? எந்தக் காலத்திலானாலும் வித்தில்லாமல் விளைவுண்டாகுமா? 'வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை; கீழுமில்லை' என்று சொல்லக் கேட்டதில்லையோ? மேலும், 'அவனன்றி யோரணுவுமசையாது' என்வு மிருக்கின்றதே; ஆதலால் எல்லாம் தெய்வச் செயலென்பதே சரியென்று ஒப்புக்கொள்ள வேண்டும்.

**நாஸ்திகன்:**—ஆ! ஆ! 'வலியானெடுத்ததே வாய்க்கால், வல்லவனாடியதே பம்பரம்' என்பதுபோல், சூட்சும புத்தியுடையவர்கள் அசுவதாட்டியான தங்கள் வாக்கு வல்லமையால் வேண்டியபடிக்கெல்லாம் பேசுவார்கள்.

"சொலல்வல்லன் சோர்விலனஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கு மரிது"

என்பதுபோலச் சொல்லுகின்றீர்; அஃதிருக்கட்டும். தெய்வமிருப்பது மெய்யானால் கண்ணுக்குப் புலப்படமாட்டாதா? புலப்படாமையால் தெய்வம் உண்டென்பது பொய்யென்று நானே நினைக்கவேண்டியது?

**ஆஸ்திகன்:**—ஒருபோதும் அது பொய்யாக மாட்டாது. கண், அகக்கண் புறக்கண் என இரண்டாகும். அகக்கண் அறிவாகிய கண்; புறக்கண் முகத்திலிருக்குங் கண். புறக் கண்ணினாற் கடவுளை நிஜஸ்வரூபமாய்க் காணவே கூடாது; அகக்கண்ணினால் ஒருவாறு காணலாம். அநேகர் அஞ் ஞான விருள்சூழ்ந்து அகங் குருடாயிருப்பதனால், அவர்க ளுக்கு அகக்கண்ணிலும் புலப்படுகிறதில்லை; ஆயினும் அவர் கள் தத்தமது உள்ளமாகிய தகளியில், அன்பாகிய நெய் யைப்பெய்து, அருளாகிய திரியையிட்டு, அறிவாகிய விளக் கையேற்றினால், அவர்களுக்கும் கடவுள் புலப்படலாம்.

"முகத்துக் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்"

எனவுஞ் சொல்லப்படுகின்றதே. அது மெய்யா யிராவிட் டால், வேத சாஸ்திரங்கள் பயில்வதும், ஆலயங்களுக்குச் செல்வதும், தெய்வத்தை வணங்குவதும், தீவினைக் கஞ்சுவ தும், தாய்தந்தையரைப் பேணுவதும், குருவின் உபதே சத்தை நம்புவதும், செங்கோலாணைக்கடங்குவதும், சத்தி யந்தவறா திருப்பதும், மற்றும் பற்பல நற்கருமங்களைச் செய் வதும் எதற்கு? யாதோ ராடங்கமுமில்லாமல் நிர்ப்பயமாய் அவரவர்கள் நினைத்தவண்ணமெல்லாம் நடக்கலாமே!

**நாஸ்திகன்:**—அப்படியா! இது, 'திண்ணைக்குத் தேள் கொட்ட மிடாவுக்கு நெறி கட்டினது' ஆகவும் 'பாம்புக்கு மருந்துகேட்கத் தேளுக்கு மந்திரித்தது' ஆகவும் இருக்கிறது. தெய்வபயத்தைக் காண்பிக்கிற கருத்து வேறே; அது நீவிர் அறிந்தீரில்லை. அப்படிக்காட்டாவிட்டால், ஒருவன்பொருளை மற்றொருவன் அபகரிப்பான்; மாதா பிதா சொற்படி புத்திரர் நடவார்கள்; கணவனிஷ்டப்படி மனைவி செய்யாள்; அரசர்க்கு அதிகாரஞ் செல்லாது; பகைவர் மேலிடுவார்கள்; சண்டை, வழக்கு, சூது, வாது, கொலை முதலானவைகளை விலை கொடுத்து வாங்குவார்கள்; பெரியோர் சிறியோரென்னும் வரம்பு தவறிப்போம்; அப்பால் உலகம் ஒருவழிப்படாது. தன்னரசு அச்சுக்கெட்டுத் தச்சுமாறிப்போம்; துக்கமன்

றிச் சுகஞ் சனிக்கமாட்டாது; ஆனதுகொண்டு விவேகி கள் உலகம் கட்டுப்படுகிற நிமித்தமே, 'கௌபீன சம்ரட்சணார்த்தம் அயம் படாடோப:' என்பதுபோல, இந்த ஆடம்பரங்களையெல்லாம் உண்டாக்கி வைத்தார்களென்று பட்டப் பகல்போல வெட்டவெளிச்சமாய்க் காண்கின்றதே; இதை விட்டு, 'அப்பமெப்படி சுட்டாளோ அதற்குள் தித்திப்பை எப்படி நுழைத்தாளோ' என்பதுபோல எல்லாம் தெய்வச் செயலென்று பிரமிப்பானேன்? இதைவிட மனிதர் செயலென்று சந்தேகமில்லாமற் சொல்லலாமே?

**ஆஸ்திகன்:**—இவ்வாறு பேசுகின்றவர்களுக்கும், போகமே மோட்சமும் துன்பமே நரகமும் என்கின்ற உலோகாயதனுக்கும் என்னபேதம்? ஆயினும் இஃதென்ன விபரீதம்? 'உள்ளக் கருத்து வள்ளலுக் கல்லவோ தெரியும்' வாய் கூசாமல் மனிதர் செயலென்றால் ஒக்குமா? மனிதர் கிணறு தோண்டுவார்கள்; தண்ணீர் சுரக்கச் செய்வார்களா? பயிர் செய்வார்கள்; மழை பெய்விப்பார்களா? அவை தெய்வச் செயலாற்றானே ஆகின்றன; ஆதலால், தெய்வபலமே பலம்; மனுஷ பலமென்ன துர்ப்பலந்தானே? கல்லுக்குளிருக்கின்ற தேரையையும், முட்டைக்குளிருக்கின்ற பறவைக் குஞ்சையும் ஊட்டி வளர்க்கின்றவர் யாவர்? பாலிற் சுவை போலவும், நீருட் குளிர்ச்சிபோலவும், தீயிற் சூடுபோலவும், பூவில் மணம்போலவும், மணியுள் ஒளிபோலவும், சகல ஆத்துமாக்களுக்குள்ளும் கடவுள் அந்தரியாமியா யிருந்து பரிபாலிக்கின்றதை அறியாதவராய், "தெய்வந் தொழு" என்று ஔவையார் சொன்னதையும் மறந்து வீணே நிரீசுரவாதியாய் வாது செய்வது என்னை?

**நாஸ்திகன்:**—வாது செய்தால் தெய்வம் கண்ணைக் குத்துமோ? நாவெழ வொட்டாதோ? இதெல்லாம் வீண் மனோராச்சியமே.

**ஆஸ்திகன்:**—ஐயோ! கர்த்தாவே! "தெய்வ மிகழேல்" என்பதையும், "தெய்வஞ் சீறிற் கைதவ மாளும்" என்பதையும் ஓராமல், அகங்காரத்தாற் கெடுமதி கண்ணுக்குத் தோற்றாமல், அஞ்சாத நெஞ்சு படைத்து, 'வாய் புளித்த

தோ மாங்காய் புளித்ததோ' என்று எளிதாக வாய்மதம் பேசலாமா ? அபசாரமல்லவா ? 'அரசன் அன்றுகொல் லும்; தெய்வம் நின்றுகொல்லும்' என்று பழமொழியும் இருக்கின்றதே.

**நாஸ்திகன்:**—சும்மா ஏன் பூச்சி காட்டுகிறீர் ? இந்த வீண் பட்டிமிரட்டு ஏதுக்கு ? 'பனங்காட்டுநரி சலசலப் புக் கஞ்சுமா ?' இதெல்லாம் 'ஆயிரம் காலேயரைக்காற் பணந்தானே ?' என்ன செப்பிடுவித்தையும் காரடவித் தையு மாடவருகிறீர் ? 'உள்ளங்கை நெல்லிக்கனிபோல' உண்மையாகக் கண்ணிலே கண்டதை விட்டு, என்றும் காணாததும் யாரோ வேலையற்ற பைத்தியக்காரர் சொல்லக் கேட்டதுமாய், சொப்பனம்போலவும் இந்திரசாலம்போல வும் இருக்கிற உண்மையல்லாத பேய்ச் சமாசாரத்தையா நம்புகிறது ?

**ஆஸ்திகன்:**—அடடா ! இதேது ? தொண்டையும் மண் டையும் போம்படிப் போராட வேண்டிவந்ததே ! கண்ட தைத்தானா மெய்யென்று கொள்ளுகிறது ? கண்டதைக் கொண்டு காணாததையும் உண்டென்று நிச்சயிக்கிறதில் லையா ? அப்படியானால் தர்க்கம் மீமாஞ்சைமுதலாகிய சாஸ்திரங்களில் அநுமானம், அர்த்தாபத்திமுதலிய சில பிரமாணங்களை முக்கியமா யெடுத்துரைப்பதென்ன ? தாய் தந்தையர்களை யறியாத மைந்தனொருவன் தன்னைப் பெற்றவர்களைத் தானறியாததனால், 'நான் அந்தரத்தில் முளைத்து வந்து குதித்தேன்' என்பானோ ? காட்சிப்பொருள், கருத்துப்பொருளென இருவகையாய்ச் சொல்வதுதானெ ன்ன ? மலை இலக்கா யிருக்க இல்லையென்னலாமோ ? கட வுள் அருவாகியும், உருவாகியும், அணுவாகியும், மேருவாகி யும், அணுவுக்கணுவாகியும், மேருவுக்கு மேருவாகியும், ஒரு சிறிய புல் நுனியையும் விட்டொழியாமல் மாதர் புரு ஷர், பாலர் விருத்தர், மூடர் விவேகிகள், பாதகர் புண்ணி யர்களும், மற்றப் பசு, பட்சி, மிருகங்களும், விருட்ச பாஷா ணாதிகளும், ஆகிய ஸ்தாவர சங்கமங்கள் எல்லாவற்றிற்குள்

னும் பரிபூரணமா யிருக்கின்றார்; அவரில்லாத இடம் ஒன்றும் இல்லை.

**நாஸ்திகன்:**—நீர் சொல்லுகிறபடி தெய்வம் எங்கும் பரிபூரணமா யிருக்கிறது மெய்யாகுமானால் அது பாவிகளுக்குள்ளும் இருக்கின்றது என்பது சரியல்லவே.

**ஆஸ்திகன்:**—அவரெங்கு மிருக்கிறாரென்பது சத்தியம்; ஆனால் அவர் நல்லோர் இருதயத்தில் மெல்லிய பூவின்மேல் இருக்கிறதுபோலவும், தீயோர் மனத்திற் கடூரமாகிய முள்ளின்மே லிருக்கிறதுபோலவும் இருக்கின்றா ரென்பதே அதன் கருத்து. இப்படியாகக் கொள்ளாவிடின் அவரைப் பூரணரென்பது பொய்யாய் முடியும். அன்றியும் கடவுளின் அபார சக்தியை யாரறிவார்? அவர் அண்டத்தை அணுவாகவும், அணுவை அண்டமாகவும், பகலை இரவாகவும், இரவைப் பகலாகவும், ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றுவார்; ஒரு சிறிய கடுகுக்குள் பெரிய மலையை அடக்குவார்; புலியையும் பசுப்போலச் சாதுவாக்குவார்; ஆகாயத்தை ஒரு சுண்டு விரலால் மறைப்பார். பூமி முழுதும் அவருக்கொரு சிறுதுகள். கடல்நீரெல்லாம் அவருக்கொரு சிறு துளி. ஊழித்தீயோ அவருக்கொரு சிறு பொறி. சண்டமாருதமோ அவருக்கொரு சிறிய சுவாசம். அவர் ஆணும் பெண்ணும் அலியாய், அவையன்றாய், ஒன்றாய், பலவாய், சத்து சித்து ஆனந்தமாய், நித்திய நிரஞ்சன நிர்த்தொந்த நிஷ்களமா யிருப்பவர். அவருக்குப் பிறப்பு இறப்பு, விருப்பு வெறுப்பு, ஒப்பு உயர்வு, இன்பம் துன்பம், பந்தம் மோட்சம் இல்லை. அவர் மகிமையைச்சொல்ல ஆர் தரம்? அவர் மனத்துக்கும் வாக்குக்கும் காயத்திற்கும் அதீதமானவர். இப்படி எல்லாமிருக்க, இன்னமும் நம்பிக்கையடையாதிருக்கலாமா?

**நாஸ்திகன்:**—'எல்லா மிருக்கிறது பெட்டியிலே, இலைக்கறி கடையச் சட்டியிலே' என்பதுபோல, கடவுளினிடத்திற் சகல அற்புதங்களும் உண்டாயிருந்தும், அவர் காட்சிக் கரியமா யிருப்பதனால், அவரைக் குறித்துச் சந்தேகப்

பட வேண்டியதாய்த் தானே யிருக்கிறது. அதை நிவர்த்தித்துக்கொள்வதற்குத் தகுதியாகிய சாதனமும், சாட்சியும், ஆட்சியும் வேண்டாமா ?

**ஆஸ்திகன்.**—அவசியம் வேண்டியதுதான்.

**நாஸ்திகன்.**—கடவுளைக் குறித்து உண்டான சாதனம் யாது ?

**ஆஸ்திகன்.**—வேதமே; அதாவது தத்துவங்களை அறிவிப்பது என்பதாம்.

**நாஸ்திகன்.**—வேதம் எத்தன்மைத்து ?

**ஆஸ்திகன்.**—வேதம் ஒருவராலும் உண்டாக்கப்படாமல் அநாதியாயிருந்து கடவுளால் பிரமாவுக்கு உபதேசிக்கப்பட்டு வழிவழியாய் உலகத்திற்பரவினது என்பதனுல் அபௌருஷேயம் எனவும், சிலர் கடவுளது திருவாக்கிலிருந்து உண்டானது என்பதனுல் பௌருஷேயம் எனவுஞ் சொல்லப்பட்டு, சகலமான பொருளையும் தனக்குள் மறைத்துவைத்திருப்பதனுல் மறை என்றும், பலதர்மங்களையும் அறிதற்குக் கருவியாயிருப்பதனுல் வேதம் என்றும், ஓதப்படுதலால் ஒத்து என்றும், கேட்கப்படுதலாற் சுருதி என்றும், எல்லா நூல்களுக்கும் ஆதியாதலால் ஆதிநூல் என்றும், மெய்ப்பட்டிருத்தலால் மெய்ந்நூல் என்றும், இன்னும் பற்பலகாரணங்களால் ஆரணம் என்றும், எழுதாக்கிளவி என்றும், நிகமம் என்றும் பெயர் பெற்றதும் அல்லாமல், இராஜ கட்டளைக்கொப்பானதுமாயிருக்கின்றது.

**நாஸ்திகன்.**—வேதத்தை யாதுகாரணத்தால் இராஜ கட்டளைக்கு ஒப்பிடுவது ?

**ஆஸ்திகன்.**—ஓர் இராஜாவின் கட்டளைப்பத்திரம் வரக்கண்டமாத்திரத்தில் அவனது செங்கோலின்கீழ் வாழுங்குடிகள் அந்நிருபத்தை இருகையினுமேந்திச் சிரசிற்றங்கிக் கண்ணிலொற்றிக்கொண்டு, மனம் நடுங்கி அதிற்குறித்தவண்ணம் அக்கணமே ஆய்ந்தறிந்து தாமதியாமல் அம்முறையையே செய்வதுபோல, எப்பொருட்கும் இறைவனுகிய கடவுள் அருளிய கட்டளைப்பத்திரம் என்னும் வேதத்தை அக்க-

டவுளாகவே பாவித்து, அதிற் சொல்லியபடி யாவருந் தடை-யின்றிச் செய்யவேண்டியிருப்பதனுல் அதை இராஜகட்ட-ளேக்கு ஒப்பிடலாயிற்று.

**நாஸ்திகன்.**—வேதம் என்ன சொல்லுகின்றது ?

**ஆஸ்திகன்.**—அது சீவாத்தும பரமாத்தும ஸ்வரூபம் இப்படிப்பட்டதென்றும், அவ்விரண்டிற்கும் அநாதியாயுள்ள சம்பந்தம் இப்படிப்பட்டதென்றும், அச்சம்பந்தத்திற்கு இடையே சம்பவித்த விரோதம் இன்னதென்றும் அந்த விரோதத்தை நிவர்த்திப்பதற்கு உபாயம் இன்னதென்றும், அவ்வுபாயத்தைச் செய்தவழி அடையும் பலன் இதுவென் றும் சொல்வதுமன்றி, சகல புவன சராசரங்களின் உற் பத்தி ஸ்திதி நாசங்களேக்குறித்தும், கர்ம பக்தி ஞான யோகமுதலியவைகளேக்குறித்தும், சாங்கோபாங்கமாகச் சொல்லுகின்றது. அவை விரிக்கிற் பெருகும். மேலும், சகலரும் கடவுளேத் தேடியடைந்து அவருக் கடிமை பூண்டு அவரைத் தொழுது அவராணையை அதிக்கிரமிக்காமல் நம்பிக்கைகொண்டு அவர் சொன்னவண்ணம் அகப்பற்றுப் புறப்பற்றுக்களே ஒழித்துப் பக்தி வைராக்கியத்தோடு நடக்-கவேண்டுமென்றும், அவ்வாறு நடந்தவர்கள், நோயாளியா-னவன் நல்ல மருத்துவனேத் தேடியடைந்து, அவன் சொல்-லினிடத்தில் நம்பிக்கைவைத்து, அவன் கொடுத்தமருந்தை யுண்டு, அவன் வைத்த பத்தியபாகந் தவருதிருந்தால், நோய் நீங்கிச் சரீரம் சொஸ்தமாய் ஆரோக்கியம் பெறுவதுபோலப் பிறவித்துன்பம் அற்றுச் சுகமுற்றுப் பெரும்பேறு பெறுவா-ர்களென்றும், ஆணவத்தால் தெய்வத்தின் கட்டளேயைமீறி அந்தத் தெய்வத்தையே நிந்தித்து, அங்குசமில்லாத யானே-யும் கடிவாளமில்லாத குதிரையும்போல, ஒருவரையு மதி-யாமல் நினேத்தபடியெல்லாம் தம்மிஷ்டப்படி நடப்பவர்கள் யுக்தாயுக்தந் தெரியாமல் பாவச்செய்கையே பயின்று யாவ-ராலும் இகழப்பட்டு இகபரார்த்தங்களே யிழந்து பற்றுக் கோடின்றி எரிவாய்நரகத்தில் வீழ்ந்து காலதத்துவமுள்ள வரைக்கும் மாருத கொடிய வேதனேயையே அநுபவிப்பார் களென்றும் சொல்லுகின்றது.

**நாஸ்திகன்.**—சாட்சி யார்?

**ஆஸ்திகன்.**—சான்றோரே.

**நாஸ்திகன்.**—சான்றோரைச் சாட்சி குறித்தீரே; அவர்களெத்தன்மையோர்?

**ஆஸ்திகன்.**—அவர்கள் காமமாகிய காட்டை அழித்து, வஞ்சனையாகிய வேரை அகழ்ந்து, பொய்யாகிய புதரை யெரித்து, கடினமாகிய கரம்பு திருத்தி, உண்மையாகிய எரு விட்டு, நெஞ்சமாகிய வயலில் தெய்வபத்தியாகிய விதை விதைத்து, பக்குவமாகிய நீர்பாய்ச்சி, விடயமாகிய பட்டி மாடுமுதலியன மேயாமல் சாந்தமாகிய வேலிகோலிக் காத்து, பரமஞானமாகிய பயிர் தழைத்து, கருணையாகிய கதிர் தோன்றி, முத்தியாகிய முழுப்பலன் வாய்க்கப்பெற்றவர்கள்.

**நாஸ்திகன்.**—சான்றோர் கடவுளைப்பற்றி என்ன சொல்லுகின்றார்கள்?

**ஆஸ்திகன்.**—அவர்கள், 'அவர் சர்வஞ்ஞர், சர்வேச்சுரர், சர்வ நியந்தரர், சர்வாந்தரியாமி, சர்வகற்பிதர், சர்வசக்தர்' என்றும், 'கோடைக்காலத்தில் கானலில் வருந்தி இளைத்து வெயர்த்துத் தாகித்துச் சோகித்துவந்தவர்களுக்குக் குளிர்ந்த தாமரையோடையும் அதனருகில் வடநிழலும்போல, தம்மால் பிறரால் தெய்வத்தால் வருவனவாகிய மூவகைத் தாபாக்கினியால் தகிக்கப்பட்டு, சனன விடாய்கொண்டு மூர்ச்சித்து, வேறுகதியின்றித் திருவுளமே தஞ்சமென்று உண்மையாய் நம்பிவந்து ஆசரித்தவர்களுக்குத் தாமே ரட்சகராய், கருணாநிதியாய், ஆபத்பாந்தவராய், தீனசகாயராய், இளங்கன்றுக் கிரங்கும் பசுப்போலவும் அருங்குழந்தைக் குருகும் அன்னைபோலவும் திருவுளமிரங்கி, அவர்கள் பாவித்தவண்ணம் அப்பொழுதே தோன்றி, அவர்களைக் கை நழுவவிடாது அஞ்சேலென்று ஆதரித்து, இம்மையிற் சகல பாக்கியமுந் தந்து, மறுமையில் ஈடுமெடுப்பு மில்லாத மோட்ச சாம்பிராச்சியத்தையும் அருளிச்செய்வார்' என்றும் சொல்லுகிறார்கள்.

நாஸ்திகன்.—ஆட்சி என்ன ?

ஆஸ்திகன்.—தொன்றுதொட்டு நெடுங்காலமாக எவ்வகையோரும் கடவுளின் கட்டளைக் குடன்பட்டு, அவரையாசரித்து ஆராதித்து வருவதே.

நாஸ்திகன்.—'குத்தாத காதுக்கு ஊனமில்லையே' அதுபோலப் பரமாத்மாவானவர் ஜீவாத்மாவுக்கு விதிவிலக்குகளைக் கற்பிக்காமலிருந்தால், அவ்வாத்துமா துக்கமின்றித் தன்னிஷ்டமாயிருக்குமே. 'சும்மாகிடக்கிறசங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி' என்பதுபோல, அதற்கு, அவைகளைக் கற்பித்ததனாலல்லவோ, 'கொப்பத்தில் வீழ்ந்த யானையும், வலையிற் சிக்கிய மானும்' போல வினைவசப்பட்டுச் சங்கடப்படவேண்டிவந்தது.

ஆஸ்திகன்.—ஒரு மண்டலாதிபதி தன் இராச்சியத்தார் தனதாணைக்கமைந்து நடக்க விரும்புவானேயல்லாமல், அவர்களை அவர்களிஷ்டப்படி விடமாட்டானல்லவா? அதுபோலக் கர்த்தாவும் சீவாத்துமாக்கள் தமது கட்டளைக் கமைந்து நடக்கவேண்டுமெனத் திருவுளங்கொண்டு, அவைகளுக்கு விதிவிலக்குகளை ஏற்படுத்தி, மேற்கூறிய அரசனைப்போல விதிப்படி நடந்த ஆத்துமாக்களை இரட்சித்தும் நடவாதவைகளைத் தண்டித்தும் வருகின்றார்.

நாஸ்திகன்.—'சுமப்பவனல்லவோ அறிவான் காவடிப் பாரம்?' எது எப்படியானாலும் கடவுளுக்கென்ன ? அவர் சுகவுல்லாஸமாகத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறார். அது ஆத்துமாக்களுக்கல்லவோ பெரிய தலைச்சுமையாயிருக்கிறது; இதனால் அவருக்குத் தோஷம் சம்பவியாதா ?

ஆஸ்திகன்.—அரசன் தீங்கு செய்வாரைத் தண்டிப்பதனால் அவனுக்குத் தோஷமுண்டா? இல்லையே; அதுபோலக் கடவுளுக்குந் தோஷமில்லை. துஷ்டநிக்கிரகஞ் செய்வது பயிர்க்குக் களையெடுப்பதுபோலல்லவா? நல்லது, ஒருவனுக்குப் பால் பழங்களுடனே அறுசுவையுண்டியும் அமைத்து உண்ணென்றால், அதை உண்டு பசி தணித்துக்கொள்வது தகுதியாயிருக்க, அவனுண்ணமற் பசியால் வயிறெ-

ரிந்து வருந்தவேண்டியதென்னை? புதுக்குடத்திற் பூரித்து வாசனையூட்டிக் குளிரவைத்து இளநீர்போல மதுரமாய்த் தெளிந்த நன்னீரைப் பருகக்கொடுத்தால், அதனைப்பருகித் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளாமல் நாவறந்து நெஞ்சுலர்ந்து உழலவேண்டியதென்னை? பூந்தேனொழுகிப் புது மணங்கமழ, வண்டினமொய்த்து மகிழ்ந்திசை பாட, நாண்மலர் பூப்பப் பால்நிலாக் காய, வெண்மண லார்ந்து தண்ணிழல் வாய்ந்து, தென்றல் வீசுஞ் செழும் பூஞ்சோலை இருக்க, அதன்கட் சேர்ந்து தாபத்தை நீக்கிக்கொள்ள நினையாமல், உள்ளடி சிவக்க வெள்ளிடை வெயிலில் விதிர்விதிர்த் துடலம் வெயர்த்து வெதும்ப, ஓயாது நடந்து நாய்போல் அலையவேண்டியதென்னை ? பரம காருணியராகிய கடவுள், சீவாத்மாவானது மோக்ஷமாகிய பரமலாபத்தைப் பெற்றுச் சுகிக்கும்பொருட்டு அதற்கு உபயுக்தமாக எல்லாப் பிறப்பிலுஞ்சிறந்த மானிடப்பிறப்பையும், தியானிக்க மனதையும், தரிசிக்கக் கண்ணையும், அஞ்சலிக்கக் கையையும், வணங்கத் தலையையும், துதிக்க வாக்கையும் கொடுத்தது மல்லாமல், விதிவிலக்குகளைத் தெரிந்துகொள்வதற்குக் கருவியாக வேதத்தையும், அவ்வேதத்தை ஆராய்ந்துணர்வதற்கு உணர்வையும், உணர்ந்தபடி ஒழுகத்தக்க சத்தியையும் கடாக்ஷித்தும் இருப்பதனால், அந்தப்படிநடந்து அப் புருஷார்த்தத்தைப் பெறுவது யுக்தமாயிருக்க அவ்வாறு நடவாமல், ஆற்றைக்கடக்க ஓடத்தைக் கொடுத்தால் முகத் துவாரத்துக்கு நேரே அந்தவோடத்தை ஓட்டிக்கொண்டு போய், ஆழமாகிய நடுக்கடலிற் பாய்ந்து, அவமேகவிழ்ந்து மாய்வாரைப்போல, கடவுளாணையைமீறிப் பேராசையாகியபேய்பிடித்தாட்ட, துக்கத்துக்கிடமாகிய மண் பெண் பொன்முதலியவைகளைப் பெரும்பொருளாகக்கருதி, தனக்குக் கடவுளருளிய அகக்கரணம் புறக்கரணங்களையெல்லாம் வியர்த்தமாய் அவ்விஷயத்திற்கே அநுகூலமாம்படி உபயோகப்படுத்தி, கடவுள்விஷயத்தில் மிகவும் அபசாரப்பட்டு மகாஅபராதியாகி, 'அடாது செய்தவர் படாது படுவர்' என்றபடி அதோகதியிலாழ்ந்து கெட்-

டொழிந்தால், அது அந்த ஆத்துமாவின் குற்றமேயல்லா-மல் கடவுளுக்கென்னே? குற்றமாமா? அவரோ இயல்பா-கவே தோஷமில்லாதவர்; அவர்மேல் தோஷஞ்சாட்டுவது பெருந்தோஷமே.

**நாஸ்திகன்.**—ஐயோ! நான் இடும்பைக்கீன்றதாய் போன்ற குடும்பச் சேற்றி லாழ்ந்து, பெண்டு பிள்ளை பண்ட பதார்த்தங்களேயே சதமென்றெண்ணி, விழலுக்கிறைப்-பதுபோல, அவற்றிற்கே உள்ளநாளெல்லாம் உழைத்து, லௌகிகலோலனுய்த் தெய்வ நிந்தையேயன்றி தினையள-வாவது தெய்வ சிந்தையில்லாமல் வியர்த்தனுனேனே! பள்ளமிறைத்தவர்களுக் கல்லவோ பங்குண்டு? உழுகிற காலத்தில் ஊர்திரிந்து அறுக்கிறகாலத்தில் அரிவாளை யெடுத்துக்கொண்டு புறப்பட்டால் என்ன கிடைக்கும்? ஆயினும் இனிச்செய்வது என்னே?

**ஆஸ்திகன்.**—உமக்கிதுவரையிலும் இல்லாத அநு-தாபம் இப்பொழுதுதானுண்டாயிற்று; அதனுற் கடவுளுக்-குச் சித்தந் திரும்பிற்றென்று விளங்குகின்றது; உமக்கு அநுகூலகாலம் பிறந்தது; நீர் ஒன்றுசெய்யும்; நீர்க்குமிழி போலவும் மின்னல்போலவும் அநித்தியமாகிய சரீர ஸ்தி-தியை நினைத்து,

> "உழப்பின் வாரா வுறுதிக ளுளவோ
> கழப்பின் வாராக் கையுற வுளவோ"

என்பதையும் உணர்ந்து, வறிதிராமல் இயன்ற அளவு விரைந்துமுயன்று, சற்குருவைக் கண்டடைந்து, அவர் சந்-நிதியில் உமதுகுறைகளேயெல்லாம் விண்ணப்பஞ்செய்து, அவர்அநுக்கிரகம்செய்யும்வண்ணம் நடந்துகொண்டு, நல்-லுபதேசம் பெற்று,

> " சிறவுரையே யாயினுஞ் செய்தான் றல்லால்
> உறுபயனே வில்லை யுயிர்க்கு"

என்பதனேயும் ஓர்ந்து, ஆசாரியர் நியமனப்படி தர்மந்தவ-முது நடப்பதே நன்மையைப்பெறும் வழியாகும்.

இவ்வாறு ஆஸ்திகன் சொல்ல, அது நாஸ்திகனுக்கு பசுமரத்திலறைந்த ஆணிபோல மனத்திற் றைத்துறுத்த, பள்ளமடையில் திருப்பிப் பாய்ச்சிய நீர்போல, அக்கணமே அவன் அதற் குடன்பட்டு, மனந்திரும்பி, அவ்வண்ணமே செவ்வையாயொழுகிக் கிருதார்த்தனாகி, சிலநாட் சென்றபின்பு ஒருநாள் ஆஸ்திகனை வந்து கண்டான். அவன் இவனை, 'உம்முடைய க்ஷேமம் என்ன?' என்று கேட்க, நாஸ்திகன், 'ஐயா! ஆஸ்திகரே! பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெற்றதுபோலவும், பரிசவேதியைச் சேர்ந்த சகலமான பொருளும் பொன்னானாற்போலவும், உமது சேர்க்கையினால் எனது துர்க்குணமெல்லாம் நீங்கிச் சுகப்பட்டேன். நீர் எனக்குச்செய்த உதவியோ மேகம்போலக் கைம்மாறு கருதாது செய்த உதவியாயிருக்கின்றது. இதைக் குறித்து உமக்கு நானென்ன செய்யப்போகிறேன்' என்று சொல்ல, ஆஸ்திகன், 'நீர் எனக்கொன்றும் செய்யவேண்டியதில்லை. மேகமானது கடல்நீரையுண்டு அதன்உவரைமாற்றி அதனை நன்னீராக்கிப்பெய்ய, அந்நீர் மறுபடியும் கடலிற்போய்விழுந்து பழையபடி உவர்நீராய்விடுவதுபோல, ஏதோ தெய்வ கடாக்ஷத்தினால் நீர் இப்பொழுது அனுசரித்திருக்கிற நன் மார்க்கத்தைவிட்டுக் குணபேதப்பட்டுப் பூர்வமிருந்த பாழ்ங் குழிக்கொப்பாகிய துன்மார்க்கத்திற்றானே பின்னும் பிரவேசித்துப் பதிதராய்விடாமல், வைராக்கியசித்தத்தோடிருப்பீரானால் அதுவே எனக்குச் செய்யும் பிரதியுபகாரம்' என்ன, நாஸ்திகன், 'நல்லது' என்று அந்தப்படியே மர்க்கடமுஷ்டியாய்ப் பிடித்தபிடிவிடாதிருந்து நெறிதவறாது வாழ்ந்தான்.

---

# புத்த சரித்திரம்

## (முற்பகுதி)

இந்தப் பரதகண்டத்தில், உத்தரகோசல தேசத்தில், *உரோகிணிநதிக்கரையிலுள்ளகபிலவாஸ்து என்னும் நகரத்தில், இக்ஷ்வாகுபரம்பரையிலுதித்துச் சுத்தோதனனென்று பெயர்பெற்ற ஓரரசன் இருந்தான். அவனுடையகாலம், இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரத்தைந்நூறு வருடங்களுக்கு முந்தியதென்பர். அவனுக்குச் சுக்கிலோதனன், அமிருதோதனன், தௌதோதனன், கனிதோதனனென்னும் நான்குசகோதரர்களும் பிரமிதை, அமிருதையென்னும் இரண்டு சகோதரிகளும் இருந்தார்கள். அவனுடைய முன்னோர், †சாகவிருக்ஷங்கள் அடர்ந்துள்ள இடத்தில் முன்னம் இருந்ததுபற்றிச் சாக்கியரென்றும், கோதமரென்பவரது மரபிலுதித்தமைபற்றிக் கௌதமரென்றுஞ் சொல்லப்படுவர். சுத்தோதனன், கோலியதேசாதிபதியாகிய அஞ்சனனென்னும் அரசனுடைய மகளிரான மாயாதேவியையும் கௌதமியையும் மணஞ்செய்துகொண்டான். மாயாதேவி மூத்தவள்; ‡கௌதமி இளையவள். கௌதமி, பிரஜாவதியென்றும் பிரஜாவதிகௌதமியென்றும் மஹாப்பிரஜாவதிகௌதமியென்றும் கூறப்படுவாள். இவ்விருவருள்ளே குணவதியாகிய மாயாதேவி பேரழகுடையளாயிருந்ததுபற்றி, அரசன் அவளிடத்து மிக்க வேட்கையுடையனாகியிருந்தான். கௌதமி அதுதெரிந்து மாயாதேவிபால் அழுக்காறுற்று மனங்கொதித்துக்கொண்டே காலங்கழித்துவந்தாள். இவ்விருவரும் நெடுங்காலம்வரையிற் புத்திரப்பேறின்றி இருந்தார்கள்.

---

* உரோகிணிநதி, இக்காலத்தில், 'கொகானு' என்று வழங்கப்படுகின்றது; இது கங்கையின் கிளைநதிகளுள் ஒன்று.

† சாகவிருக்ஷம்-தேக்கமரம்.

‡ கௌதமி மூத்தவளென்றும், மாயாதேவி இளையவளென்றும் சில புஸ்தகங்களிற் சொல்லப்படுகிறார்கள்.

இப்படி இருக்கையில், *துஷிதலோகவாசியாகிய பிரபா பாலரென்னும் †போதிசத்துவர், உயிர்களைத் தீயவழியினின் றும் நீக்கி நல்லவழியிற் செலுத்துவதற்கு இவ்வுலகில் அவ தரிக்க விருப்புற்று, ஒருநாள் பொன்மயமான தெய்வ விமான மூர்ந்துவந்து, மாயாதேவி சுத்தோதனன் என்னு மிருவர்கனவிலுந்தோன்றி, தாம் அவர்களுக்குப் புத்திரராக அவதரிக்கப் போதலைத் தனித்தனியே யுணர்த்திப் பின்பு மாயாதேவியினுடைய வயிற்றிற்புகுந்தனர். எங்கும் நிறைந் துள்ளதெய்வம் இங்ஙனஞ் செய்ததென்றும், மாயாதேவி, ஒரு ஷட்கோணநக்ஷத்திரம் தன்வயிற்றிற்புகுந்ததாகக் கனவுகண்டு பின்பு கருவுற்றாளென்றுஞ் சொல்லுவது முண்டு. மாயாதேவி கருவுற்றனளென்பதை அவளுடைய தோள்மெலிவுமுதலியவற்றாலறிந்த அரசன்முதலியோர் அக மகிழ்ந்தனர்.

அப்பொழுது அவளுக்குப் பிராயம் நாற்பத்தைந்து. மாயாதேவிமட்டும் கருப்பிணியாயினளேயென்று நறுமொறு. ப்புற்றகௌதமி அவளுடைய உயிரைப்போக்குதற்குப் பல வாறு முயன்றாள்; முயன்றும் அது சிறிதும் பலிக்கவில்லை. அதன்பின்பு கௌதமி தான்செய்த குற்றத்தை நினைந்து நினைந்து மனம்நொந்து, மாயாதேவிபால் அன்புகூர்ந்து ஒழுகுவாளாயினள். மற்றொருநாள், மாயாதேவியின் கன விற் பிரபாபாலர் ஓராண்குழந்தைவடிவாக வெளிப்பட்டு அவளுக்குச் சிலநல்வழிகளை உபதேசித்து மீட்டும் அவள் வயிற்றிற் புகுந்தனர். அவள் அவர் உபதேசித்தவாறே நியமவழியில் ஒழுகுவாளாயினள். உலகத்திற் கருவுற்ற மங்கையர்களுக்கு உளவாகும் ‡வியாவும் வருத்தமும் அவ ளுக்கு இலவாயின. கருவுயிர்க்குங்காலம் அணுகிற்று; அணுகவே அவள் இனிய பலவகைக் காட்சிகளமைந்த உலும்பினி என்னும் பூஞ்சோலையையடைதற்கு விரும்பித்

---

* துஷிதலோகம்- தெய்வலோகங்களாறினுள் நான்காவது.
† போதிசத்துவர்-புத்தராக வருதற்குரியோர்.
‡ வயா - வேட்கைநோய்.

தன் கருத்தை அரசனுக்குத் தெரிவித்தாள். அவன் அகப்பரிசாரங்களும் புறப்பரிசாரங்களுஞ்சூழ அவளுடன் அச்சோலையையடைந்து, அதிலுள்ள மாளிகையொன்றிற்றங்கி, அவளுள்ளத்தைக்கவரும் நறுமலர்களைக்கொணரும்படி தன் பரிவாரங்களுக்குக் கட்டளையிட்டான். அதைக்கேட்ட பலரும் பலவகைமலருங்கொணர்ந்து காட்டி அவளை மகிழ்வித்தார்கள். பின்பு அரசன் மாயாதேவியுடன் அச்சோலையிடையே மலர்ந்து விளங்கும் அசோகமரமொன்றைச்சார்ந்து, அதனிழலில் மயில் கலாபத்தை விரித்தாடுதலையும் கலவிங்கமென்னும்பறவை அதற்கேற்பப் பாடுதலையும் கண்டும் கேட்டும் விழிகளுக்கும் செவிகளுக்கும் விருந்தூட்டிக் களிக்கும் அவளை நோக்கி, "இம்மரப் பூவொன்றைப் பறித்துத்தா" என்று வேண்டினன். பூப்பறிக்க அவள் அம்மரத்தின் கிளையொன்றைப் பற்றுதற்கு வலக்கையை உயர்த்தினள். முன்னம், ஔர்வரென்னுமுனிவர் தமது தாயினது துடையிலிருந்தும், பிருதுஎன்னும் சக்கரவர்த்தி வேனராஜாவினுடைய கையிலிருந்தும், மாந்தாதா *உபோஷிகனுடைய நெற்றியிலிருந்தும், கக்ஷீவானென்னுமுனிவர் சுதேக்ஷ்ணுதேவியின் கைம்மூலத்திலிருந்தும் வெளிப்பட்டதுபோலப் பிரபாபாலர் அப்பொழுது மாயாதேவியின் கருப்பத்திலிருந்து சிறிதும் அவளுக்கு வருத்தத்தை உண்டுபண்ணுமல் மெல்ல மெல்ல அவளுடைய வலப்பக்கத்தின் வழியே ஆண்குழந்தை வடிவாக வெளியேவந்து அவள் காலருகே அச்சமயத்தில் தேருருளையைப்போல் பெரிதாக முளைத்துத்தோன்றிய நீலத்தாமரைமலரொன்றிற் சென்றிருந்தார். அவர் † பிறந்ததினம், வைசாக சுத்த பூர்ணிமை. அக்

* உபோஷிகன் - யுவனுசுவன்.

† கௌதமபுத்தர் பிறந்ததினம், ஈசானசகாப்தம், ௯௮-ம் ௵ வைகாசி மாதத்திற் பூர்ணிமையும் விசாகநக்ஷத்திரமுங்கூடிய வெள்ளிக்கிழமையென்று சொல்லுவர்; "இருதிள வேனிலி லெரிகதி ரிடபத், தொருபதின் மேலு மொருமூன்று சென்றபின், மீனத் திடை நிலை மீனத் தகவயிற், போதித் தலைவனொடு பொருந்திய போழ்தத்து" என்று மணிமேகலையிலும் கூறப்பட்டிருத்தல் காண்க; ௧௫-ம் காதை, ௨௫-௨௬.

க்கணமே தெய்வஅரசர்கள் நால்வரும் நந்தன் உபநந்த னென்ற நாகஅரசர்கள் இருவரும் அங்கேவந்து, முன்பு அவ தரித்துள்ள புத்தர்களுக்குத் தாம் செய்ததுபோலச் செய்ய வேண்டிய பல உபசாரங்களையும் செய்துவிட்டுத் தத்தம் உறைவிடஞ் சென்றார்கள். அப்பால், அவர், அந்நீலத்தா மரைமலரினின்றும் சிங்கக்குருளைபோல் ஏழடிநடந்து போந்து தாம் புத்தாவதாரமென்பதை ஆங்குள்ளவர்களுக்குக் கூறினர். கூறியவுடன் வெப்பமும் தட்பமுமுள்ள நீரோ டைகளிரண்டு தனித்தனியே ஆகாயவழியே வந்து அவரை மஞ்சனஞ் செய்வித்தன. தேவர்கள் மலர்மழை பொழிந் தார்கள்; ஆகாயம் மேகத்தால் மூடப்படுதலின்றித் தூய்மை யுற்றுவிளங்கிற்று; விலங்குகளும் பறவைகளும் தம்முட் பகைமையின்றி அன்புற்றுப் பயின்றன; இன்னும் பற்பல *நன்னிமித்தங்கள் நிகழ்ந்தன. தீயவழிகளுக்குத் தலைவனை மாரனென்னுந்தேவன் ஒருவனே துன்புற்றான். மாயாதேவி, பொறையுயிர்த்தலாலுண்டாகுந் தளர்ச்சி சிறிதுமின்றி மேற் கூறிய அசோகமரத்தின்கீழேயிருந்தாள். கௌதமி அன்பு கூர்ந்து அக்குழந்தையையெடுத்துச் சீராட்டிப் பாராட்டி வருவாளாயினள். குழந்தையும் அவள்பால் அன்புமிக்கது. அப்படியிருக்கையில், சிறந்த நிமித்திகனாகிய அந்தணனொரு- வன் வந்து, அக்குழந்தையை உற்றுநோக்கி, "ஆசிரியராக வருவோர்க்குரிய இலக்கணங்களெல்லாம் இவன்பால் உள் ளன; ஆதலால், இவன் துறந்து, பலவிடத்துஞ்சென்று தரு மோபதேசம் புரிதலை மேற்கொள்வான்; இவனால் மனிதர்-

*"மைத்திருள் கூர்ந்த மனமாசு தீரப், புத்த ஞாயிறு தோன்றுங் காலைத், திங்களு ஞாயிறுந் தீங்குறா விளங்கத், தங்கா நாண்மீன் றகை மையி னடச்கும், வானம் பொய்யாது மாநிலம் வளம்படு, மூனுடை யுயிர்க ளுறுதுயர் காணா, வளிவலங் கொட்கு மாதிரம் வளம்படு, நளியிரு முந்நீர் நலம்பல தரூஉங், கறவைகன் றார்த்திக் கலநிறை பொழியும், பறவை பயன்றுய்த் துறைபதி நீங்கா, விலங்கு மக்களும் வெரூஉப் பகை நீங்குங், கலங்கஞர் நரகரும் பேயுங் கைவிடுங், கூனுங் குறளு மூமுஞ் செவிடு, மாவு மருளு மன்னுயிர் பெறா" என்ற புத்தாவதாரிக் குங்காலத்தில் உலகத்துண்டாகும் நிமித்தவிசேடங்களை மணிமேகலை யில் விளங்கக் கூறியிருத்தல்காண்க; கஉ-ம் காதை, அ௫-௯அ.

கள் அடையும் ஊதியம் மிகப்பல" என்று அரசனுக்குக் கூறி நன்கொடைபெற்றுச்சென்ருன். மாயாதேவி, கருவுயிர்த்த ஏழாநாளில் ஆனந்தாதிசயத்தால் இறந்தாள்.

" உலும்பினி வனத்து ளொண்குழைத் தேவி
வலம்படு மருங்குல் வடுநோ யுருமலான்ரு ணவ்வழித் தோன்றின ளுதலி
னீன்ரு ளேழாநா ளின்னுயிர் வைத்தாள்."
(விம்பசாரகதை யென்னுங்காப்பியம்.)

அவளுடம்பைத்தகித்து அவளுடைய என்பையும் சாம்பரையும் ஒரு குடத்தில் நிறைத்து, அவளிருந்துவந்த மாளிகையை * அஸ்தமயகிரியிற் பெயர்த்துக்கட்டி அதில் அக்குடத்தை அடக்கஞ் செய்தார்கள். அவளுடைய பெருமையைப் புலப்படுத்தற்பொருட்டு நூற்றறுபது அடி உயரமுள்ள ஆலயமொன்று அம்மாளிகையினருகே எடுப்பிக்கப்பட்டதன்றி மேற்கூறிய அசோகமரமும் அவ்வாலயத்தின் எதிரிலே பெயர்த்து நடப்பட்டது.

கௌதமி குழந்தையை எடுத்து வளர்த்துவந்தாள்.

ஒருநாள், சுத்தோதனன் குழந்தையை எடுத்துக்கொண்டு கோயில்சென்று பண்டனதேவரைத் தரிசித்தபொழுது, அத்தேவர் தமதுபடிமத்திலிருந்து வெளிப்பட்டு, அக்குழந்தையின் பெருமைகளை அவனுக்கு விரித்துக்கூறினர். பின்பு அக்குழந்தைக்கு ஸித்தார்த்தனென்று நாமகரணஞ்செய்தார்கள்; செய்தும் எல்லாரும் கௌதமனென்னும் குடிப்பெயராலேயே அழைத்துவந்தார்கள்.

கௌதமர், உரிய காலத்தில் வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்று மித்திரரென்று பெயருள்ள ஒரு பிராஹ்மணரிடம் பலகலைகளையும் முறையாகக் கற்பாராயினர். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கேற்ப, ஜீவகாருணியமுதலிய நற்குணங்கள் பலவும் அவர்பால் இளம்பருவந்தொடங்கியே நாடோறும் வளர்ச்சியுற்று விளங்கின. கற்க

---

* அஸ்தமயகிரியென்பது அங்கேயுள்ள ஒரு மலையின் பெயர்.

வேண்டிய கலைகள் எல்லாவற்றையும் அவர் யாதொருவருத்தமுமின்றிக் கற்றுவந்தார். அதுதெரிந்த சுத்தோதனன் பெருமகிழ்ச்சியடைந்தான். அவரோடு கற்றுவந்த பார்ப்பனப்பாங்கன், உதாயியென்பவன்.

அவ்வளவில் அஸிதரென்னு முனிவர்வந்து கௌதமரைக்கண்டு பரிபூர்ண புத்தர்களுக்குரிய ஸஹஸ்ரார சக்கரரேகைமுதலிய ஸாமுத்திரிகலக்ஷணங்கள் பலவும் அவர்பால் உளவாதலையறிந்து வியந்து, "மானிடராகிய மரத்தில் பலநூற்றாண்டுகளுக்கு ஒருமுறையே மலருமலர் இக்குழந்தை; உமது குலப்பெருமையை என்னவென்று சொல்லுவேன்; இவன் துறவுபூண்டு உலோக ரக்ஷகனாக இருப்பான்" என்று அரசனுக்குக் கூறினர். அரசன், "துறப்பது எப்பொழுதோ?" என்றான். அவர், "அஃது இப்பொழுது அறிவிக்கற்பாலதன்று" என்று சொல்லித் தம்மிடஞ் சென்றனர். செல்லவே, அரசன் கௌதமர் துறப்பாரென்பதை முன்பு ஒரு நிமித்திகனாலும் அறிந்தோனாதலால், அவருடைய உள்ளத்தை உலகவழியிற் புகுத்தற்பொருட்டுப் பலவாறு முயன்றுவந்ததோடு உலகவாழ்வில் அவருக்கு ஒருபொழுதும் யாதொருவெறுப்பும் தோற்றாமலிருக்கும்வண்ணஞ் செய்வித்தும் வந்தான்.

அந்நாட்களிலே ஒருநாள் தோழர்களுள் ஒருவனாகிய தேவதத்தனென்பவன் தான் ஓரிடத்தில் எய்து வீழ்த்திய அன்னப்பறவையைக் கௌதமர் அளிசுரந்தெடுத்து அதன் மேலே தைத்திருந்த அம்பைப் பிடுங்கியெறிந்து அப்பறவையைத் தைவந்து பாதுகாத்து விடுத்தமைபற்றிக் கோபமுற்றுப் பகைமைகொண்டு அவரை நீங்கித் தனக்கமைந்த நண்பர் சிலருடன் வேற்றிடஞ்சென்றான்.

சிலநாளைக்குப்பின் கௌதமரைச் சுத்தோதனன் தன்னுடைய இளவரசாக நியமித்து அதற்குரிய சிறப்போடிருக்கும்படி செய்வித்தான். அப்பொழுது அவருக்குப்பிராயம் பதினைந்து. அவர் இளவரசாக இருந்தே சிலவருடங்களைப் போக்கினர்.

பின்பு, அரசன், தன் மைத்துனனாகிய சுப்பிரபுத்தனுடைய மகள் யசோதரையை அவருக்கு மணம்புரிவித்தான்; அப்பொழுது அவருக்குப்பிராயம் பத்தொன்பது.

அப்பால் கௌதமர் யசோதரைபாற்காதல்கூர்ந்து வேறொன்றையும் அறியாது அவள்போகத்திலேயே சில காலம் அழுந்திக்கிடந்தார். அதுதெரிந்த உறவினர் கவலையுற்று, "மேன்மேலும் அறிந்துகொள்ளவேண்டிய படைக்கலப்பயிற்சிமுதலியவை கௌதமனுக்கு இல்லையாயினவே. எப்பொழுதேனும் யுத்தம் நேருமாயின் அக்காலத்து இவன் யாதுசெய்வான்?" என்று அரசனுக்குச்சொன்னார்கள். அதைத்தெரிந்துகொண்ட கௌமதர், அவ்வுறவினர் பலரையும் வருவித்து, தாம் அவற்றில்வல்லராதலை அரசன்முன்பு வெளிப்படுத்தி, அவ்வுறவினரால் நன்குமதிக்கப்பட்டார். இச்செய்தி விவாகத்திற்குமுன்னே நடந்தது; இதைக்கண்டு வியந்த சுப்பிரபுத்தன் தன்மகளைக் கௌதமருக்கு மணம் புரிவித்தானென்று கூறுவதுமுண்டு. 'நிமித்திகனும் அஸிதருஷியும் முன்புகூறியவாறு கௌதமன் துறவுபூண்பானோ' என்று கவலையுற்ற அரசன், ஒரு தோட்டத்தில் வேனிற்காலம், மழைக்காலம், பனிக்காலம் ஆகிய இம்மூன்றிலும் முறையேதங்கிப் போகம்நுகர்தற்குத் தகுதியாக மூன்று மாளிகைகள் கட்டுவித்து, அவற்றின் நாற்புறவழிகளிலும் வலிய நிலைகளும் கதவுகளும் அமைப்பித்து, அத்தோட்டத்தைச்சூழ உயர்ந்தமதிலையெழுப்பி, இரவும் பகலும் அம்மதிலைச் சூழ்ந்து போர்வீரர் காக்கவும், அருவருக்கத்தக்க பொருள்களுள் யாதொன்றும் கண்ணுக்குப் புலப்படாமலிருக்கவும் புரிவித்து, கௌதமரை அங்கேதங்கி இன்பநுகரும்வண்ணஞ் செய்வித்தான். அரசன் இவ்வாறு மேன்மேலுஞ் செய்துவந்த பெருமுயற்சிகளாற் பிணி மூப்புச் சாக்காடென்பவைகள் மனிதர்களுக்கு உண்டென்ற ஞாபகம் அக்காலம்வரையிற் கௌதமருக்குச் சிறிதும் உண்டாகவேயில்லை.

அப்படியிருக்கையில், ஒருநாள் உலும்பினிவனத்திலுள்ள அரண்மனையில் வந்து தன்னைக்காணும்படி அரசன்

அவருக்குத் திருமுகமனுப்பினன். அதனைப்பெற்று உடனே தந்தையைக்காணுதற்கு நினைந்து தாமிருக்குந் தோட்டத்தின் கீழைவாயில்வழியே சிவிகையூர்ந்து செல்லுங் கௌதமர், தம்மெதிரேவந்த மிக்க பிணியாளனொருவனைக்கண்டு எல்லாரும் இப்படியே பிணிவாய்ப்பட்டுத் துன்புறுவாரென்பதையும், மற்றொருநாள் அங்ஙனஞ் செல்லுகையில் மிகத் தளர்ந்து வருந்திக்கொண்டேவந்த முதியோன் ஒருவனை வழியிடையே கண்ணுற்று எல்லாரும் இங்ஙனம் மூப்புற்று வருந்துவாரென்பதையும், வேறொருநாள் குதிரையேறி மேலைவாயில் வழியே செல்லுகையில் அங்கே அழுகிக்கிடந்த பிணமொன்றைக்கண்டு எல்லாரும் இறத்தற்குரியாரென்பதையும் உடன்வந்த குதிரைக்காரனாகிய * சந்தகனால் அறிந்தறிந்து, "அநித்தியமாகிய உலகவாழ்வில் அருவருப்புற்று இப்பிணி மூப்புச் சாக்காட்டிற்குக் காரணமாகிய பிறப்பிற்கு இடங்கொடாத நல்வழியையறிந்து நாமுமுய்ந்து உலகத்தையும் உய்வித்தல் எப்பொழுது கூடுமோ" என்று கவலையடைந்து அதைக்குறித்து ஆலோசித்துக்கொண்டே மீண்டுமீண்டு வருவாராயினர்.

† சுத்தாவாஸதேவர்களுளொருவர் கௌதமருக்கு நிலையாமையை அறிவுறுத்தற்பொருட்டுப் பிணியாளன் வடிவ முதலிய மூவர்வடிவங்களாகத் தோன்றினரென்று கூறுவர்.

இக்காட்சிகளால் கௌதமருடைய மனம் வேறுபட்டிருத்தலைக்கேள்வியுற்ற அரசனுடைய கட்டளையால் உதாயியுடன் அழகிய மங்கையர் பலர்வந்து தம்வயமாக்க முயன்றும், ஒத்த தோழர்களாகிய மந்திரிகுமாரர்கள் பலர்வந்து சிற்றின்பத்தைப்பற்றிப் பலவகையாகப் போதித்தும் கௌதமருடைய உள்ளம் சிறிதும் மீளவில்லை; வேறுபடுத்தத் துணிந்துவந்தவர்கள், அவருடைய அழகிய மேனியையும், கம்பீரமான தோற்றத்தையும், சாந்தமான பார்வையையும், மற்றுமுள்ள விசேடங்களையுங் கண்டு அஞ்சிச் சென்றார்கள்.

---

* அறிந்தது, பாங்கனாகிய உதாயியென்பவனாலென்றுங் கூறுவதுண்டு.
† சுத்தாவாஸதேவரென்பார், பிரமகணங்களுள் ஒருவகையார்.

பின்பு ஒருநாள் கௌதமர் தேரேறித் தோட்டம்பார்க்கப் போனபொழுது வழியின் இருபுறத்துமுள்ள நன்செய்களிலும் புன்செய்களிலும் உழவர்முதலியோரும் எருதுமுதலியவைகளும் உழைத்தலையும், அதனால் அவ்வுயிர்களடையும் வருத்தங்களையுங்கண்டு மனம்வருந்தி ஒருநாவன் மரத்தின்கீழே தங்கிக் கண்ணைமூடிக்கொண்டு, துக்கமாகிய பிறப்புப்பிணிமூப்பிறப்புக்களையும், அவற்றிற்குரிய காரணங்களையும், அவற்றைமாற்றும்வழிகளையும் மெல்ல ஆராய்ந்துகொண்டிருந்தார்; அங்ஙனமிருக்கும்பொழுது, முன்பு தாம் பிணியாளன்வடிவங்கொண்டு தோன்றி யாவரும் பிணிவாய்ப்படுதற்குரியரென்பதையும், முதியவன்வடிவங்கொண்டு தோன்றி யாவரும் மூத்தற்குரியரென்பதையும் பிணவடிவங்கொண்டுதோன்றி யாவரும் இறத்தற்குரியரென்பதையும், புலப்படுத்திய சுத்தாவாஸதேவர், துறவறநெறியையும் கௌதமருக்கு அறிவுறுத்த நினைந்து துவராடையணிந்த ஒரு துறவியாகிவந்து, "சித்தார்த்த!" என்று அழைக்க, கௌதமர் விழித்துப்பார்த்து, "நீர் யார்?" என்றார். அவர், "நான் ஒரு *ஶ்ரமணன்; துக்கத்தை நினைந்துநினைந்து என் மனம் இடைவிடாது வருந்தாநின்றது; இத்துக்கத்தினின்றும் நீங்கி என்றுமழியாததும், ஆதியந்தமில்லாததும், நட்புப்பகைமையற்றதும், ஏகாந்தமானதும், ஆநந்தமயமாகவுள்ளதுமான ஒரு நிலையையடைதற்கு அவாவுகின்றது; ஆதலால், ஊர்ப்புறத்தேதங்கி ஐம்புலன்களையுமடக்கிச் சமாதியிலிருந்துகொண்டு உயிரைப்பாதுகாத்தற்கு வேண்டியவளவே உணவை இரந்து உண்டுவாழும் பிக்ஷுக்களினிலைமையை விழைந்தேன்" என்றுகூறி அவர்கள் பெருமையையும் எடுத்துச்சொல்லிவிட்டுச் சென்றனர்; அதுகேட்டவுடனே துறத்தற்குத்துணிந்தகௌதமர் அவ்விடத்திலிருந்தும்எழுந்து அரண்மனைசென்று, தாம் துறவுபூண இச்சித்திருத்தலைத் தந்தைக்குத்தெரிவித்தார்; அதனைக் கேட்டசுத்தோதனன், மனங்கலங்கிக் கண்ணீர்பெருக, "ஐய! அதற்குக்காலம் இஃத

---

* ஶ்ரமணனென்பதற்குத் துன்புற்றுத் தவஞ்செய்பவனென்று பொருள்; இச்சொல் ஸ்ரீவால்மீகிராமாயணத்திலும் வந்துள்ளது.

ன்று; எம்மைப்பாதுகாத்து நெடுங்காலம் அரசாண்டபின்னரே அது விரும்பத்தக்கது" என்ன, கௌதமர், "பிறப்புப் பிணி மூப்புச் சாக்காடாகிய இத்துன்பங்களை ஒழித்தற்குரிய வழியை அறிந்துகொண்டாலன்றி இங்கு நில்லேன்" என்று உறுதியாகக்கூறிவிட்டுத் தமது உறைவிடமடைந்தார்; அரசன் அவருடைய மனத்தை வேறுபடுத்தும்படி ஆடல் பாடல்களில் வல்ல மகளிரைப் பின்னும் அவர்பால் அனுப்பினன்; அவர்கள் வந்து இயன்றவரையில் முயன்றும் அம் முயற்சி சிறிதும் பயன்படவில்லை. அவர்களுடைய அழகிய வுருவங்கள் வைராக்கியமிகுந்த கௌதமருக்கு அருவருக்கத் தக்கனவாகத் தோற்றின; இப்படியிருக்கையில், * ஒருநாள் ஆறுசென்று நீராடிய கௌதமர் அரண்மனைசெல்லுதற்குத் தேரேறுகையில், ஒருவன்வந்து, † "உமக்கு மகன் பிறந்தான்" என்றனன். அதுகேட்ட கௌதமர், "பந்தத்தின் மேற் பந்தமுண்டாயிற்றே; இத்துன்பக்கடலைக்கடப்பது எப்படி?" என்று கவலையுற்றுக்கொண்டே தேரூர்ந்து அரண்மனைக்குச் செல்வாராயினர்; அங்ஙனஞ்செல்லுகையில் அவருடைய தேருக்கு முன்னும்பின்னும் பலவாத்தியங்கள் முழங்கின; நகரத்தார் பலரும், 'நம்மரசனுக்குப் பௌத்திரன் பிறந்தான்' என்றுமகிழ்ந்து புகழ்ந்துகொண்டேவந்தார்கள்; ஆடல்பாடல்கள் நிகழ்ந்தன; அவற்றுள் யாதொன்றும் அவர் மனத்திற்கு இன்பந்தரவில்லை; அவருடைய உறவினளாகிய மங்கையொருத்தி, "இக்குழந்தையின் தந்தை பாக்கியவான்; தாயும் பாக்கியவதி; மனைவியும் பாக்கியவதி" என்றுபாடிய பாட்டொன்றும் துக்கநிவாரணத்திற்குரியவுபாயம் யாதென்று இடைவிடாமல் சிந்தித்துக்கொண்டே செல்லுகிற அவருக்கு அப்பொழுது நன்னிமித்தமாகவிருந்து இன்பந்தந்

* அக்காலம், கௌதமர் நான்காவது தோற்றங்கண்டதினத்தின் பிற்பகலென்று சொல்லுவதுமுண்டு.

† "உமக்குமகன் பிறந்தான்" என்பதைக்கேட்ட கௌதமர், அம் மகன் தமது புத்தியாகிய திங்களை விழுங்கவந்த இராகுவென்று சொன்னாரென்றும், அதனால் அப்புதல்வனுக்கு இராகுலனென்று பின்பு பெயரிடப்பட்டதென்றுஞ் சொல்லுவர்.

ந்து; அவர் அந்த * உபகிருதிக்காக அவள்பால் நன்றிபாராட்டுவாராய்த் தமதுகழுத்திலிருந்த விலையுயர்ந்ததான முத்தமாலையை அவளுக்கு நன்கொடையாகக் கொடுத்தார்; அதைப் பெற்றுக்கொண்டவுடன், அம்மங்கை, கௌதமர் தன்னிடத்திலுள்ள விருப்பத்தாலளித்தாரென்றும் பிற்காலத்தில் தான் அவருடைய முதன்மையுள்ளமனைவியாக ஆதல்கூடுமென்றும் மனோராச்சியஞ்செய்வாளாயினள்.

அப்பால் அவர் அரண்மனைசென்று அங்கேநிகழ்ந்த நாடகமுதலியகாட்சிகளுள் ஒன்றையும் பாராட்டாமலே அன்றிரவின்முற்பாகத்தில் அயர்ந்து நித்திரைசெய்து நள்ளிரவில் திடீரென்று விழித்துக்கொண்டு, தான் உள்ளேயிருக்கும்பொழுது தன்வீடு தீப்பற்றிக்கொண்டதென்றதை அறிந்தவொருவன் அவ்வாபத்தினின்று நீங்குவதற்கு எவ்வளவு பரபரப்புடனெழுவானோ அவ்வாறேயெழுந்து, எல்லாவற்றையுந்துறந்து வேற்றிடஞ்செல்லுதற்குத் துணிந்தார்; துணிந்தபொழுது, மேற்கூறிய சுத்தாவாஸதேவராற் கதவுகள் திறந்துவைக்கப்பட்டன; கௌதமர், தம்மைச்சூழ்ந்து தாறுமாறாகச் சயனித்துக்கொண்டிருந்த மங்கையர்களின் கூட்டத்தினின்றும் நீங்கிப் புறத்தேபோந்து அங்கே விழித்துக்கொண்டிருந்த சந்தகனையழைத்துத் தம்முடைய கண்டகமென்னும்பெயருள்ளகுதிரையை விரைவிற்கொண்டுவரும்படி அவனுக்குக் கட்டளையிட்டார்; சந்தகன், மஹாராஜாவின் அனுமதியின்றி இளவரசன்கட்டளையை இவ்விரவில் நிறைவேற்றலாமோவென்று சிறிதுபொழுது சிந்தித்துக்கொண்டேநின்று பின்பு மேற்கூறிய தேவருடைய அருளால் துணிவுண்டாகப்பெற்றுக் குதிரைகொணரச் சென்றான்; அவன் சென்றவுடன், எல்லாவற்றையும் துறத்தற்குத்துணிந்த கௌதமர், இல்வாழ்க்கையிலுள்ள வலிய பற்றை அப்பொழுதே முற்றுந்துறக்கலாற்றாமல், தமது குழந்தையைக் கையிலெடுத்துப் பார்த்தற்கு நினைந்து சென்று, அந்தப்புரத்திற் குழந்தையுடன் யசோதரை சயனித்திருக்கும் அறையின்கதவை மெல்லத்திறந்து, அங்கே

* உபகிருதி-உதவியானசொல்.

மலரணைமேலே யசோதரையால் அணைப்புண்டு அவளோடு துயிலுங் குழந்தையைத் தீபவொளியாற் கண்டு, "இக்குழந்தையையெடுத்தால் இவள் விழித்துக்கொள்வாள்; விழிப்பின் அது நம்முடைய செலவிற்குப் பெருந்தடையாகுமே" என்று நினைந்து, இன்னது செய்கிறதென்று தெரியாமல் மயங்கி அவ்விருவரையும் காதலோடுபார்த்துக்கொண்டே வாயிற்படியிற் சிறிதுபொழுது நின்றார்; நின்றவர், தடுமாறிக்கொண்டிருந்தமனம் பின்பு தெளியப்பெற்று, "நாம் இவளுக்கும் இவனுக்கும் பிற்காலத்தில் ஞானாசிரியனாகவும் ஆதல் கூடும்" என்று எண்ணித் துணிந்து புறப்பட்டார். அவர் அங்ஙனம் வெளிப்பட்டதினம் பூர்ணிமையென்பர். இங்ஙனம் அவர் வெளிப்பட்டவளவிற் சந்தகன் குதிரையைக் கொணர்ந்து நிறுத்தினான். அவர் அதில் ஏறிச்செலுத்தியபொழுது நான்கு தேவர்கள், அதன் குளம்புகளின் ஓசைகள் ஒருவருடைய செவிக்கும் புலப்படாவண்ணம் அடக்கிக்கொண்டு உடன்சென்றனர். இளவரசராகிய கௌதமர், "உலகத்திற் பிறப்புப் பிணி மூப்புச் சாக்காடாகிய துன்பங்களையெல்லாம் முற்றும் போக்குதற்குரியவழியை அறிந்தாலன்றி மீளேன்" என்று உள்ளத்தில் உறுதிகொண்டு ஊக்கத்துடன் செல்வாராயினர்.

அப்பொழுது அவருக்குப் பிராயம் இருபத்தொன்பது.

கௌதமர், அகத்துறவுபூண்டு எல்லாவற்றிலும் அருவருப்புற்று, தந்தைமுதலியோரையும், அரண்மனையையும், பெருஞ்செல்வத்தையும், மனைவியையும், பிள்ளையையும் *பிரிந்துசென்றதை மஹாபிநிஷ்கிரமணமென்று கூறுவர்.

பாவத்திற்குக்காரணமான இச்சைகளை உண்டாக்குந் தெய்வமாகிய மாரனென்பவன், இப்படி அரண்மனையை விட்டுப் புறப்பட்ட கௌதமரைத் தொடர்ந்துவந்து, "நீர் துறவன்மின்; துறவாதொழியின், இன்றுமுதல் ஏழுநாளைக்குள் நான்குமஹாத்துவீபங்களுக்கும் உம்மை அரசராக்கு

---

*திரிபிடகத்தில் இச்செய்தியைக்கூறும் பாகத்திற்கு மஹாபிநிஷ்கிரமணஸூத்திரமென்று பெயர்; மஹாபிநிஷ்கிரமணம்-பெருந்துறவு.

வேன்" என்று சொல்லித் தடுத்தான். அவர் அத்தடையைமதியாமற் சென்றார்; செல்லவே மாரன் வெல்லுதற்குரிய சமயம் தனக்கு எப்பொழுது வாய்க்குமோவென்று நினைந்து நிழல்போலவே அவரைத்தொடர்ந்து செல்வானாயினன்.

சென்ற கௌதமர், அவ்விரவில் நாகர்களும் தேவர்களும் தமக்கு இயல்பாகவுள்ள ஒளியால் வழிகாட்டிக்கொண்டுசெல்ல, ஒருநிமிஷமேனும் இடையே தங்காமல், நல்லாசிரியர் எங்கே கிடைப்பாரென்ற கவலையோடுஞ் சென்று கோலியதேசத்துக்கு அப்பாலுள்ள அநோமநதிக்கரையைச் சூரியோதயத்திற்குமுன்னமே அடைந்தார். அடைதலும், கண்டகமென்னுங்குதிரை அங்கு நின்றுவிட்டது. அப்போது அங்கேயுள்ள பார்க்கவரென்னும் தாபதருடைய தவப்பள்ளியையும் அதில் வைக்கப்பட்டுள்ள பிக்ஷைப்பாத்திரங்கள் பலவற்றையுங்கண்டு, கபிலவாஸ்துவிலிருந்து சலிப்பின்றி மூன்றுயோசனையளவு விரைந்துவந்த தான குதிரை அத்தவப்பள்ளியை அணுகியவுடன் தானாகவே நின்றுவிட்டதைத் துறவைவிரும்பிவந்த தமக்கு நன்னிமித்தமாகக்கொண்டு களிப்புற்றார். பின்பு அவர் தம்முடன்வந்த சந்தகனைநோக்கி, "அடையவேண்டுமென்று பல நாளாகநினைத்துக்கொண்டேயிருந்தவிடத்தை இப்பொழுது அடைந்தேன்; நம்முறவு இன்றோடு முடிவுபெற்றது" என்றுகூறித் தமதுகழுத்திலிருந்த விலையுயர்ந்த கண்டசரத்தைக்கழற்றி அவனுக்கு நன்கொடையாக இன்சொல்லோடு கொடுத்தார். கொடுத்தவர் பின்பு தமது முடிமணியையெடுத்து அவன்கையில் வைத்து, "இதனை நான் அன்புடன் கொடுத்ததாகச்சொல்லி அரசனுக்குக்கொடு; என்னிடத்திலுள்ள காதலை முற்றும் மறக்கும்படி நான் சொன்னதாகத் தெரிவி; இல்வாழ்க்கையின்வழியாகத் துக்கக்கடலை நீந்துதற்குரிய நெறிபம் எனக்குக் கிடையாமையினாலேயே நான் பிரிந்தேனென்று சொன்னதாகவும் விண்ணப்பஞ்செய்" என்றுகூறினார்; அதனைக்கேட்டு மனம்வருந்திய சந்தகன், "இப்பொழுது துறத்தல் தக்கதன்று" என்று பல

வகையாக மறுத்து, அதற்கு அவரிணங்காததுபற்றிப் பின்பு, "நானும் உடன்வருவேன்" என்றான். கௌதமர் அதற்கு இணங்காமற் குதிரையின் முதுகைத்தடவித் தட்டிக்கொடுத்து அதற்கு இனியவார்த்தைகளைச் சொல்லிவிட்டு அதைக்கொண்டு செல்லும்படி வற்புறுத்திக்கூறி அவனுக்கு விடைகொடுத்தார்.

அது நிகழ்ந்தபின் கௌதமர் அநோமநதியின் மணலிற் றங்கி உடைவாளால் தமது மயிர்முடியை அறுத்தெறிந்துவிட்டு அங்குச் சிறிதுபொழுது உண்மையை ஆராய்ந்து கொண்டேயிருந்தார். இது சந்தகனுக்கு விடையளித்தற்கு முன்பு நிகழ்ந்ததாகக் கூறுவதுமுண்டு.

அங்ஙனம் ஆராய்ந்துகொண்டிருக்கையில், மேற்கூறிய சுத்தாவாஸதேவர் துவராடையுடுத்து வில்லும் அம்பும் தாங்கிய ஒருவேடனாகத்தோன்ற, கௌதமர் தம்முடைய பட்டாடையை அவ்வேடனுக்குக் கொடுத்துவிட்டு அவனுடையதுவராடையைத் தாம் வாங்கியுடுத்துக்கொண்டு உண்மையை அறிவுறுத்தும் பெரியோரைத் தேடிச்சென்றார்.

கௌதமரிடத்தில் விடைபெற்று, அவர் கேசத்தை அறுத்தெறிந்ததைப் பார்த்துக்கொண்டேநின்று, அவர் கட்டளையை மறுத்தற்கஞ்சி வருந்திய சந்தகன் கண்ணீர் பெருகக் காலோய்ந்து மனம்புழுங்கிக் குதிரையுடன் நகர்க்கு மீண்டான்.

பெரியோரைத்தேடிச்சென்ற கௌதமர், காற்று சுத்த நீர் மலர்கள் இளங்குருத்துக்கள் காய்கள் கனிகள் கிழங்குகள் ஆகிய இவற்றுள் ஏதாவதொன்றையேனும் எடுத்த பிச்சையையேனும் உண்டு நீரிலேநின்றும் நெருப்பிலேநின்றும் இன்னும் பலவாறுகவொழுகியும் அருந்தவம்புரிந்துவாழும் முனிவர்கள்பலரை வழியிடையிற்கண்டு அவர்களோடு அளவளாவி, "துக்கநீக்கத்திற்குரிய வழியாது?" என்று அவர்களைக்கேட்டு, அவர்கள்கூறியவைகள் தம்மனத்திற்குப் பொருந்தாமையால் அவற்றை மறுத்துரைத்து, அவ்விடத்தைநீங்கி அவர்களுடைய சொற்படி, சூரியாஸ்தமயத்திற்

குப்பின், மகததேசத்துள்ள பாண்டரமலையைச் சார்ந்து, அம்மலைக்குகையில் தவஞ்செய்துகொண்டிருக்கும் ஆராளராம முனிவரைக்கண்டு வணங்கி, “பிறப்புமுதலிய துக்கங்களையொழித்தற்குரிய உபாயத்தை அடியேனுக்கு உரைத்தருள்க” என்று விண்ணப்பித்தார். ஆராளராமர் யோகமார்க்கத்தை உபதேசிக்க, கௌதமர் அந்நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவாராயினர்.

கபிலவாஸ்துவில் முன்பு தெய்விகமாகத் திறக்கப்பட்டுக் கௌதமருக்கு வழியைக்கொடுத்த அரண்மனைக்கதவுகளெல்லாம் மீட்டும் மூடினபடியேயிருந்தன; அவைகள் அவ்வாறிருக்கவும், எல்லோரும், கௌதமரும் குதிரையும் குதிரைக்காரனுமே இல்லாமையையறிந்து, திகைத்து வருந்தி எங்கும் தேடுவாராயினர்.

அப்பொழுது, குதிரையுடன் அழுதுகொண்டே சென்ற சந்தகன் நிகழ்ந்தவற்றை அவர்களுக்குத் தெரிவித்தான். அவற்றைக்கேட்ட எல்லோரும் துக்கக்கடலில் ஆழ்ந்தார்கள்.

தன்மகன் துறந்தானென்பதை அறிந்த மஹாப்பிரஜாவதிகௌதமி, பெருங்காற்றால் தாக்குண்ட இளவாழைபோலக் கைகால்முதலிய அவயவங்கள்சோர்ந்து மூர்ச்சித்துச் சிறிதுபொழுது கீழே விழுந்துகிடந்து பின்பு ஒருவாறு உணர்ச்சியுற்று எழுந்து மிகவும்பெருமூச்செறிந்துகொண்டு, “அந்தோ! இக்ஷ்வாகுகுலசிகாமணியே! இருண்டு வலப்புறத்தே சுரிந்து தூய்மையுடையதாய் அழகிதாகி விளங்கிக் கட்டுண்ணாதபோது பூமியைத் தொட்டும் முடித்தபொழுது கிரீடம்போன்று திரண்டும் பளபளப்பாகவிருந்த அந்தக் குடுமி குறைக்கப்பட்டுப் புல்லிற்கிடக்கின்றதே! ஆ! அந்தத் திரண்ட தோள்கள், அந்தச் சிங்கநடை, விடையேற்றின் கண்கள்போன்ற அந்தக்கண்கள், பளபளப்பானபொன்போல் ஒளியைவீசிவிளங்கும் அந்தத்தேகம், அந்தச் சதுர மார்புமுதலியவற்றையுடையாய், நீ துன்பத்திற்கிடமாகிய காட்டிற் சென்றனையே! தூய்மையிலும், நிறத்திலும், மென்

மையிலும் அலலிமலர்போன்ற அப்பாதங்கள் கற்களாலும் முட்களாலும் கிழிக்கப்படுகின்றனவே! ஆ! அப்பாதங்கள் அத்துன்பத்தை எவ்வாறு பொறுக்கும்? காவலுள்ள இராச மாளிகையிற்பிறந்து இனிது வளர்க்கப்பெற்று மிகவும்மெல் லிய ஆடையையுடுத்துச் சிறந்தநறுநீரில்நானமாடி இனிய அறுசுவையையுடைய நால்வகையடிசிலுமுண்டு விளங்கிய நீ இப்பொழுது தாக்கிவிறைக்கச்செய்யும் குளிர்காற்றில் அடிபட்டுப் பட்டினியுற்றுப் பனிக்குள்ளாகி வருந்துகின்ற னையே! மிக்க வெப்பக்காலத்திலும் மிக்க தட்பக்காலத்திலும் இளைப்பாறுமிடம் உனக்கு அங்கே எவ்வாறு கிடைக்கும்?" என்று தன்பிள்ளையை நினைந்துநினைந்து பிரலாபித்து விம்மிவிம்மி ஆற்றுருணுதவளாய் மீண்டும் நிலத்திலே விழு ந்துகிடந்தாள். ஏவல்மகளிர் அவளையெடுத்துத்தாங்கிக் கண் ணீர்துடைத்துத் தேற்றுவாராயினர்.

யசோதரை, தனது உயிர்த்துணைவர் துறந்தாரென்பது கேட்டுக் கலங்கி நெஞ்சுருகிக் கல்லும் மரமுமிரங்கும்படி வேய்ங்குழல் அழுமாறுபோலஅழுது அவருடைய அவயவங் களை முன்னிலைப்படுத்திக்கொண்டு, "தாமரைமலர்போலும் திருவடிகளே! உமக்கு யான்செய்தகுற்றம் யாது? முன்பு தவி சாகி என்னைச்சுமந்து ஆளுந்தன்மையையுடைய துடை களே! அளிக்கத்தக்க இப்பெண்ணுயிர் தான் அளியாக்கால் வருந்துமென்று நீங்கள் நினையாமற் பிரிந்தீர்; இது தகு மோ? எனக்கு மாலையும் துகிலுமேந்திக் குங்குமமெழுதிப் பூந்தாதை அளகத்திலே அப்பிச் சிவந்து அன்புற்றிருந்த விரல்களே! என்னைப்பாதுகாக்கத்தக்க நீங்களும் அவரெண் ணியதையேஎண்ணினீர்; இஃது அறமோ? தோள்காள்! அவர் இனி நுகரேமென்று கைவிட்ட என்னை நீங்கள் அணைத்துத் தழுவிக்கொள்ளீர்; நீங்களும் நெஞ்சம் வலியீராகி நிற்பீரோ? எனக்கு அணையாய மார்பே! என்பாற்கொண்ட நட்பைக்கை விட்டு நீங்கினையே; கழுநீர்த்தாரே! அவர்போல நீயும் என் னைப் பாதுகாவாமல் கைவிட்டனையே; செவ்வியநாவே! அவர்போல நீயும் அருளின்றி என்னை இகழ்ந்தனையே; இங் ஙனமிகழ்தற்கு என்னிடத்துக்கண்ட குற்றம் யாது? அத

லைக்கூறு ; கண்களே! முன்பு என்னைப்பார்த்துப் பேரின்ப முற்று எனக்கும் பேரின்பத்தைத்தந்த நீர் இப்பொழுது என்பால் அருளிலிராயினீர்; இதற்குக் காரணம் யாது? எனது வண்ணங்கெட்டபடியைக்காண்மின்'' என்று பலவாறு பிரலாபித்து விம்மிவிம்மிப் பின்னும் வருந்திப் புலம்புவாளாயினள்; அது தெரிந்து அந்நகரின் எப்புறத்துமுள்ள மகளிர்கள் பலரும்வந்து ஒருங்குகூடி அழுதலாலே, அந்தப்புரத்திற் கடலொலிபோலே ஓரொலியுண்டாயிற்று; நகரமுற்றுங் கலங்கிற்று.

சுத்தோதனன் இவ்வாறு நிகழுமென்பதை முன்னமே அறிந்தவனாகவிருந்தும் அவன் அப்போதடைந்த வருத்தத்திற்கு அளவில்லை; மகப்பிரிவினுந் துயர்வலியியாவதே.

அவ்வளவிலே இராஜபுரோகிதர், சுத்தோதனனைத்தேற்றி, "அரசிளஞ்சிங்கத்தை விரைவிற்கொணர்வேன்'' என்று சொல்லிவிட்டு ஒருமந்திரியோடுகூடிப் பலவிடத்தும் தேடிக்கொண்டுபோய் அராளராமமுனிவருடைய தவச்சாலைக்கருகே கௌதமரைக்கண்டு, பிரிவாற்றாமல் அரசன் முதலியோர் படும்பாட்டைச்சொல்லி வருந்திஅழைத்தார். அழைத்தவர்க்குக் கௌதமர், "அழகிய இராசமாளிகை எனக்குக் கனல்நிறைந்த இடம்போலும்; இனிமையுள்ள உணவுகளை ஆக்குதற்குரிய மடைப்பள்ளியோ நஞ்சினை உண்பிக்கும் இடம்போலும்; எல்லாம் துக்ககரமாகவேயுள்ளன; ஆதலால், நிலைத்தஇன்பத்தைப் பெறவேண்டுமென்பதே என்கருத்து; அது முற்றப்பெற்றாலன்றி மீளேன்'' என்று மறுத்துரைத்தார்; அவ்விருவரும் அளவற்ற துயரமுற்று மீண்டுபோனார்கள்.

அவர்கள் போனபின், ஒருநாள், பிக்ஷையெடுத்தற்காக இராஜகிருகநகரத்தையடைந்தகௌதமர் அந்நகரத்தரசனாகிய பிம்பஸாரன் பலபசுக்களைப்படுத்து யாகஞ்செய்கிறானென்பதைக் கேள்வியுற்று மிக்க பரபரப்புடன் அந்தயாகசாலைக்குச்சென்று, கொல்லாமையாகிய நல்லறத்தின் பெருமையை விரித்துக்கூறி அவ்வேள்வியில்நிகழுங்கொலையை மாற்றிவிட்டு, அவ்விடத்திற் சிலபகலிருக்கவேண்டுமென்று வேண்

டிய அவனுக்கு, "நான் உண்மையுணர்ந்தபின்புதான் இவ்விடம் வருவேன்" என்று வாக்களித்துவிட்டுச்சென்றூர்.

பிம்பஸாரன், அதுதொடங்கிக் கொல்லாமையாகிய நல்லறத்தை மேற்கொண்டு ஒழுகிவந்தான்.

அக்காலந்தொடங்கிக் கௌதமருக்குக் கௌதமபிக்ஷு, பிக்ஷுகௌதமரென்னும்பெயர்கள் வழங்கலாயினவென்பர்.

கௌதமர், அராளராமமுனிவர் உபதேசித்தவழியிலேயே பலநாளொழுகிவந்து அதனால் உண்மை விளங்காததுபற்றி அவரைநீங்கி உருத்திரகரென்னும் வேறொருமுனிவரை ஆசிரியராக அடைந்து அவர்உபதேசித்தவழியிலும் பலநாள்முயன்றொழுகி ஆராய்ந்துவந்தார். அதனாலும் கௌதமருக்கு உண்மை புலப்படவில்லை.

அப்பால் அவர் துக்கபரம்பரையைப்போக்கும்வழியை அறிந்துகொள்ளவேண்டி ஞாரணியமெனப்படும் * உருவேலாவனத்தைச்சார்ந்து அங்கே தவஞ்செய்துகொண்டிருந்த கௌண்டிந்யகுலபுத்திரர், தசபலகாசியபர், பாஷ்பர், அசுவஜித், புத்திரரென்னும் ஐந்துமுனிவர்களை அடைந்து அளவளாவி அவர்களோடு அவ்வனத்தில் அருந்தவம்புரிவாராயினர்.

இவ்வாறு பலநாள்சென்றபின், ஒருநாள், கௌதமர், உண்மையைஅறிந்துகொள்ளுதற்குரியவழியை ஆராய்ந்துகொண்டே உலாவுங்காலத்தில், பலகாலம்பட்டினியுற்றுநோற்றுவந்த இளைப்பால் நிற்கலாற்ருது மூர்ச்சித்துக் கீழே விழுந்துவிட்டார்; மேற்கூறிய துறவிகளைவரும், "இவர் இறந்தார்"என்றே நிச்சயித்தார்கள். கௌதமர் சிறிதுபொழுது சென்றபின் தெளிவடைந்து எழுந்து, "இப்படிப் பட்டினியுற்றுச்செய்யுந்தவத்தாலே யாதும்பயனில்லை" என்று நினைந்து கிடைத்தவுணவை உண்ணத்தொடங்கினர்; தொடங்கவே, மேற்கூறிய ஐந்துதாபதர்களும், "இவர் விரதபங்க

* உருவேலாவென்பது நைரஞ்சரையென்னும் நதியின்கரையிலுள்ளதென்று தெரிகிறது; இந்த நதி இக்காலத்துப் பல்குனியென்று வழங்கப்படும்; நைரஞ்சரையென்பது பௌத்தநூல்வழக்கு.

முற்ருர்" என்று வெறுப்புற்று மதியாமல், அவரைவிட்டு நீங்கி வேறிடஞ்சென்ருர்கள்.

மஹாபிநிஷ்கிரமணத்திற்குப்பின் உண்மையை அறிந்து கொள்ளுதற்குச் செய்த முயற்சியில் கௌதமருக்கு இவ்வாறு ஆறுவருடங்கள் சென்றன.

மேற்கூறிய ஐந்துதாபதர்களும் நீங்கியபின் அவர் நைரஞ்சரையென்னும் ஆற்றின்கரையையடைந்து ஆங்குள்ள ஓர் * அரசமரத்தடியிலிருந்துகொண்டு இருபத்தெட்டுநாட்கள் அகோராத்திரம் அயிலுதலும் துயிலுதலுமின்றி உண்மையை ஆராய்ச்சிசெய்துகொண்டேயிருந்தார்; இருபத்தொன்பதாவது தினத்தின்காலையில் அருகேயுள்ள ஊரிலிருப்பவனாகிய பலனென்னுமிடையனுடைய மகள் ஸுஜாதையென்பவள், தன்னுடைய வழிபடுதெய்வத்திற்கு நிவேதனஞ்செய்யச்சமைத்துக் கையில்வைத்துக்கொண்டிருந்த பாலன்னத்தையூட்டினள்; அதையுண்டு கௌதமர் ஒளியால் விளங்கினர்.

அப்பொழுது சீலவிரோதியாகிய மாரனென்பவன் தன்னரசாட்சிக்குக் கேடுவந்துவிட்டதென்று வருத்தமுற்றுக் கௌதமருடைய மனத்தை வேறுபடுத்தநினைத்து, காமம், வெகுளி, மயக்கமென்னுந் தன்புத்திரிகள்மூவருடன் வந்து பலவாறுமுயன்று மிகப்போர்செய்தும் அவருடைய மனம் சிறிதும் வேறுபடவில்லை.

இங்ஙனம் வேறுபடாதுநின்ற கௌதமபுத்தருடைய மனவுறுதியைப்பாராட்டிப் பழையபௌத்தகவிகள்கூறிய பாடல்கள் வருமாறு:—

"வாடாப் போதி மரகதப் பாசடை
மாநிழ லமர்ந்தோ னெஞ்சம் யார்க்கும்
அருளின் றீம்தே னிறைந்து கனிஞெகிழ்ந்து

---

* இதனடியிற் கௌதமருக்கு ஞானோதயமானமையின், இது மஹாபோதியென்று பௌத்தராற்கூறப்படும்; "பிணையைத் தோய்கிய பாசிலைப்போதி" (சிலப்பதிகாரம், நாடுகாண்காதை, கக) என்றதனுல், இவ்வரசமரம் ஐந்துகிளைகளையுடையதென்று தெரிகிறது. இது, பௌத்தர்களால் திசைநோக்கித் தொழப்படுவது.

மலரினு மெல்லி தென்ப வதனைக்
காமர் செவ்வி மாரன் மகளிர்
நெடுமா மழைக்கண் விலங்கி நிமிர்ந்தெடுத்த
வாளும் போழ்ந்தில வாயின
யாதோ மற்றது மெல்லிய வாறே."

"தாமரைறுங் குழன்மழைக்கட் டளிரியலார் தம்முன்னர்க்
காமனையே முனந்தொலைத்தாற் கண்ணோட்டம் யாதாங்கொல்."

கௌதமருடைய உள்ளத்தை வேறுபடுத்தற்குரிய வன்மை தனக்கில்லாமையைத் தெரிந்துகொண்ட * மாரன் தோல்வியுற்றுத் தன் உறைவிடமடைந்தான்; கௌதமருடையவுள்ளம் ஞானவொளியால் விளங்கிற்று.

இங்ஙனம் மாரனைவென்று வீரனாகிச் சலனமற்றுச் சீல சமாதியிலிருந்த கௌதமருக்கு மேற்கூறிய † இருபத்தொன்பதாவதாகிய தினத்தினிரவில்பழம்பிறப்புணர்ச்சியும் தத்துவ ஞானமும் முறையே உண்டாயின; அப்பொழுது முதலில் முற்பிறப்பிற் பாவஞ்செய்தோர் இப்பிறப்பில் வருந்துதலையும் சீவகாருணியம்பூண்டோர் இன்புற்று வாழ்தலையும் அவர் தம்முடைய ஞானக்கண்ணாலறிந்தார்; அறிந்தவர், பின்பு காமம் வெகுளி மயக்கமென்னும் இவற்றையுடையவர்கள் துக்கத்துக்கே உரியவர்களாகிப் பிறந்து பிணிவாய்ப்பட்டு மூத்து இறக்கிறார்களென்றும், அந்த இறப்பு பிறப்பிலிருந்தும், பிறப்பு கருமக்கூட்டத்திலிருந்தும், கருமக்கூட்டம் பற்றிலிருந்தும், பற்று வேட்கையிலிருந்தும், வேட்கை நுகர்விலிருந்தும், நுகர்வு பரிசத்திலிருந்தும், பரிசம் வாயிலிலிருந்தும், வாயில்கள் நாமரூபத்திலிருந்தும், நாமரூபம் விஞ்ஞானத்திலிருந்தும், விஞ்ஞானம் செய்கையிலிருந்தும், செய்கை பேதைமையிலிருந்தும் உண்டாகின்றனவாதலாற் பிறப்பை

* மாரன் தோல்வியுற்றுப் போனபின்பு ஸுஜாதை பாலன்னமளித்ததாகச் சொல்லுவதுமுண்டு.

† புத்தருக்கு ஞானோதயமானதினம் வைசாகசுத்த பூர்ணிமையென்பர்; அதனால், ஒவ்வொருவருடத்தும் அந்தத்தினம் சிறந்த திருநாளாகப் பௌத்தராற் கொண்டாடப்படும்; இதுபற்றியே, "மதிநாண் முற்றிய மங்கலத் திருநாட், பொதுவறு சிறப்பிற் புலமுறு மாதவன்" என்றார் மணிமேகலையிலும்; ௩௦-ம் காதை, அ௬-அச.

நீக்க இறப்பும், கருமக்கூட்டத்தைநீக்கப் பிறப்பும், பற்றை நீக்கக் கருமக்கூட்டமும், வேட்கையைநீக்கப் பற்றும், நுகர்வைநீக்க வேட்கையும், ஸ்பரிசத்தைநீக்க நுகர்வும், வாயிலைநீக்க ஸ்பரிசமும், நாமரூபத்தைநீக்க வாயிலும், விஞ்ஞானத்தைநீக்க நாமரூபமும், செய்கையைநீக்க விஞ்ஞானமும், பேதைமையைநீக்கச் செய்கையும் நீங்குமென்றும் துக்கம், துக்கோத்பத்தி, துக்கநிவாரணமென்னும் மூன்று சத்தியங்களை ஆராய்ந்து தெரிந்துகொண்டதன்றி, நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்து ஓர்தலைப்பாடென்கிற நான்காவதுசத்தியமாகிய துக்கநிவாரணமார்க்கமெனப்படும் நல்வழிகளெட்டையுமாராய்ந்து தெரிந்துகொண்டார்.

'போதிவிருக்ஷத்தினடியேயிருந்தநாட்களுள் ஒருநாளிரவில் புத்தர் தியானஞ்செய்கையில் முதல்யாமத்திற் செய்த தியானத்திற் பழம்பிறப்பின் நிலைமைகளெல்லாம் அவருக்குத் தெரியவந்தன; இரண்டாம் யாமத்திற்செய்த தியானத்தில் அப்பொழுதுள்ளபிறப்பின் நிலைமைகளெல்லாம் அவருக்குத் தெரியவந்தன; மூன்றாம் யாமத்திற்செய்த தியானத்தில் துவாதசநிதானரூபமாகிய ஏதுநிகழ்ச்சி அவருக்குத் தெரியவந்தது. நான்காந்தியானத்திற் சூரியனுதியாநிற்கையில் முழுதும் அவருக்குத் தெரியவந்தது' என்று சொல்லுவதுமுண்டு.

அரசமரத்தினடியிலிருக்குநாட்களுள் ஒருநாள் கௌதமர் நைரஞ்சரையென்னும் ஆற்றையடைந்து நீராடுகையில், அவ்வாற்றில் தூணொன்று மிதந்துவந்ததென்றும், அத்தூணில், "தோன்றுவனவெல்லாம் நிலையற்றன; அவை பிறப்பிறப்பிற்கு உட்பட்டவை; எக்காலத்து இந்தச் சனனமரணநியமம் நீங்குமோ அக்காலத்தேதான் ஆனந்தங் காணப்படும்" என்னும் பொருளடங்கிய வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்தனவென்றும் அவற்றைக் கண்ணுற்றறிந்தபின்பு அவருக்குஞானோதயமாயிற்றென்றும் ஜப்பான்தேசத்துப்பௌத்த நூல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வண்ணம் கௌதமர் * ஸத்தியசதுஷ்டய ஞானத்தைப் பெற்றபின், நாகரும் தேவரும் மற்றையோருங்களித்தனர்; நன்னிமித்தங்கள் பல நிகழ்ந்தன.

அப்பாற் கௌதமர், "நான் விரும்பியதையடைந்தேன்; யானெனதென்னும் அகங்காரமமகாரங்களினின்றுந்தப்பினேன்" என்று களிப்புற்றார். † அப்பொழுது மஹாப்பிரஹ்மா அவருக்குமுன்னே தோன்றி, "கவலையால் மெலிகின்ற மனிதர்மேல் இரக்கம்வை; உலகத்தார் தமது பயனையேகருதி உழைக்கின்றனர்; பிறவுயிரோம்புதலைப் பேணிலர்; எல்லோர்க்கும் தருமோபதேசஞ்செய்து அத்தீயவழியினைமாற்று" என்றனர். அதுகேட்ட ‡ ததாகதர் மனமகிழ்ந்து அவர் கூறியவாறே உண்மையை உபதேசித்துப் பரவச்செய்து எல்லாவுயிர்களையும் நல்வழிப்படுத்துதற்கு நிச்சயித்தார்; நிச்சயித்தவர் தமக்குண்டான உண்மை ஞானத்தைத் தாம் முன்பு ஆசிரயித்திருந்த அராளராமமுனிவர் உருத்திரகர் என்பவர்களுக்கு முதலில் அறிவிக்க வேண்டுமென்று நினைத்து விசாரிக்கும்பொழுது அவர்கள் இறந்துபோய்விட்டார்களென்பதைக்கேட்டு மிகவும் வருத்தமுற்றார்.

அப்பால், முன்பு உருவேலாவனத்தில் தம்மோடு தவஞ்செய்துகொண்டிருந்த ஐந்துதாபதர்களுக்கும் தாம் பெற்றபேற்றைக் கொடுத்தற்கு நினைந்து அவர்களைத் தேடிக்கொண்டு அவ்வனத்தின் வழியே செல்பவர், அங்கே உபகனென்னும் அந்தணனொருவனைக் கண்டு அவனோடுரையாடித் தாமறிந்தவுண்மையை வெளியிட்டு, அவனை மகிழ்வித்து, அதனால் தமதுகொள்கை பிறருக்கு உபதேசிக்கத்

---

* ஸத்திய சதுஷ்டயமாவன: துக்கம், துக்கோத்பத்தி, துக்கநிவாரணம், துக்கநிவாரணமார்க்கமென்பன.

† கௌதமர் இங்ஙனம்ஞானம்பெற்றுப் புத்தத்துவம்பெற்றகாலம், ஈசான சகாப்தம், ௧௦௬-ம் வருடத்தில் விசாகநக்ஷத்திரமும் பௌர்ணமாஸியுங்கூடிய புதன்கிழமையென்பர்.

‡ ஞானோதயமானபின்பு, கௌதமருக்குத் ததாகதர், புத்தர், ஜினர் என்பவை முதலிய காரணப்பெயர்கள் வழங்குவனவாயின.

தக்கதென்பதில் ஊக்கமுற்று, மேற்கூறிய தாபதர்களெவரும் காசியிலிருப்பதாகக் கேள்வியுற்றுப்போய்க் காசியைச்சார்ந்த * மிருகதாவமென்னும் வனத்திற்புகுந்தார்; அங்கே தவம் புரிந்துகொண்டிருந்த கௌண்டிந்யகுலபுத்திரர்முதலிய ஐவரும் அவரைத் தூரத்துக் கண்டபொழுதே, "இவர் முன்பு தவத்தினின்று நீங்கினமையால், இவருக்கு நாம் யாதோருபசாரமுஞ்செய்தலாகாது" என்று தம்முட்பேசி நிச்சயித்துக்கொண்டிருந்தும் சமீபத்திற் கண்டவுடனே அவருடைய முகமலர்ச்சிமுதலியவற்ருல் தாம் பரவசமுற்றுத் திடீரென்றெழுந்து உபசாரஞ்செய்தார்கள்; ததாகதர் அதையேற்றுக்கொண்டு, "காயக்கிலேசம்செய்தற்கு வலியில்லாமல் வேண்டியவாறே நுகர்ந்தொழுகுபவன் மனத்தை எவ்வாறு அடக்குதல் கூடும்? இப்பொழுது நீர் அறிந்துகொண்டவழி யாது?" என்று வினவிய அவர்களுக்கு, "நற்காட்சிமுதலிய எட்டுஅங்கங்களையுடைய வழியைப்பற்றி ஒழுகல்வேண்டும்; அவ்வாறு ஒழுகினாலன்றிச் சனனமரணங்களை நீக்குதல் ஆகாது; துக்கம், துக்கோத்பத்தி, துக்கநிவாரணமென்பனவற்றை உள்ளவாறறிந்தபின்பே இவ்வழியைப் பற்றி ஒழுகுதல்வேண்டும்; இதுவே நான்கண்டவழி" என்று உபதேசித்தார்; கேட்ட ஐவரும் அவர்கூறியவற்றை அங்கீகரித்துச் சிஷ்யர்களாய் அவரைச்சேர்ந்தார்கள்.

இங்ஙனம் அவர்கள் தம்முட் கூடியிருக்கத்தொடங்கியதே, பௌத்தர்களாற்கூறப்படும் † மும்மணிகளுள் ஒன்றான ஸங்கத்திற்குத் தொடக்கமென்பர்.

கண்டோரை வசீகரித்தற்குரிய அழகிய பார்வையும் முகமலர்ச்சியும் கேட்டோருடைய உள்ளத்தைக் கவர்தற்கமைந்த சிறந்த இசைக்குரலும் இன்சொல்லும் புத்தருக்கிருந்தனவென்றும் அவைகளே அவருடைய பிரஸங்கங்கேட்டோர்களை விரைவில் அவருக்குச் சிஷ்யர்களாகச் செய்வதற்குச் சிறந்த கருவிகளாகவிருந்தனவென்றும் புத்தசரித்திரங்கள் கூறுகிற்கும்.

---

* மிருகதாவம் - மான்காடு.

† மும்மணிகளாவன - புத்த தர்ம ஸங்கமென்பன.

பின்பு புத்தர், தாம் அறிந்துகைக்கொண்ட தருமமாகிய சக்கரத்தை எவ்விடத்துமுருட்டலினேந்து அந்த மிருகதாவ வனத்திலேயேயிருந்துகொண்டு சாதிவேற்றுமைகருதாம லும் ஆண்பாலார் பெண்பாலாரென்று பாராமலும் இவர் பகைவர் இவர் நட்பினரென்று நினையாமலும் அங்குவந் தோர் யாவருக்கும் ஒப்பத் தமதுசித்தாந்தத்தை உபதே சித்துவந்தார்.

" இன்னார்க்கு மினியனு யிறந்தார்க்கு மின்றீம்பால்
குன்றாமற் பொழிந்திட்ட குன்றாய குணத்தினன் "

அப்பொழுது, குசீநகரத்திருந்த யசனென்னுஞ் செல்வ வானொருவன், அவர் பெருமையைக் கேள்வியுற்று விரை வில் அவரைச் சரணமடைந்து அறங்கேட்டுத் தன்னுடைய பாலிய நண்பர்களாகிய ஐம்பத்துநால்வர்களோடும் பிக்ஷு வாய்ப் பௌத்தசங்கத்தைச் சார்ந்தான்.

அவருக்கு ஞானோதயமானநாள்முதல் ஐந்துமாதத் திற்குள்ளாகவே அறுபதுபேர்கள் இல்வாழ்க்கையைத்து றந்து பிக்ஷுக்களாய்ப் பௌத்ததருமத்தையே தஞ்சமாகப் பெற்றுச் சிஷ்யர்களுக்குரிய நிலையைப் பாராட்டிக்கொண்டு சங்கத்தின் அங்கமாக விளங்கினார்கள். இதனால், தம்மு டைய தருமத்தை எல்லாரும் வருத்தமின்றியறிந்து அங்கீ கரிக்கும்படிசெய்தற்குவேண்டியபோதனைசக்தி புத்தருக்கு மிகவுமிருந்ததென்றும், அவருபதேசித்த தருமம் மிக்கவிரை விற் பரவிற்றென்றும் அறிந்துகொள்ளலாம்.

பின்பு யசனுடைய தந்தை தாய் மனைவி ஆகியமூவரும் அவரையடைந்து அறங்கேட்டு * உபாஸகரானார்கள்.

அப்பால், அவர் மேற்கூறிய அறுபதுசிஷ்யர்களையும் ஒருங்குசேர்த்து முகமலர்ச்சியோடும் அவர்களைநோக்கி, " அன்பர்களே! யான் உபதேசித்தவுண்மையை அறிவில் லாத மானிடர்களுக்கு விளங்கப்போதித்து அவர்களை அவ் வறிவின்மையினின்றும் நீக்கி நல்வழிப்படுத்துதல் உங்களு

* உபாஸகர் - பௌத்தரில் இல்லறத்தோர்.

டைய கடப்பாடாகும்; ஆதலால், நீங்கள் தனித்தனியே பல விடங்களுக்குஞ்சென்று நம்முடைய சமயக்கொள்கைகளைப் பலர்க்கும் உபதேசித்துவருக" என்று கட்டளையிட, அவர்களில் யசன்மட்டும் காசியிலிருந்தும் மற்றவர்கள் தனித்தனியே பலவிடங்களிற்சென்றும் தாமறிந்ததருமங்களை எல்லாருக்கும் அன்புடன் போதிப்பாராயினர்.

வருடந்தோறும் மழைக்காலத்தில் தமது சிஷ்யர்களை வருவித்துத் தம்முடனிருக்கச்செய்வதும் மற்றைக்காலங்களில் அவர்களைப் பலவிடங்களுக்குமனுப்பித் தருமப்பிரசங்கம்புரியச்செய்வதும் அவருக்கு வழக்கமாகவிருந்தன.

ததாகதர், மேற்கூறிய உருவேலாவனத்திலிருந்து அக்கினியை வழிபடுபவரும் அக்காலத்தில் ஆசிரியரென்று பெயர்பெற்றிருந்தவரும் வானப்பிரஸ்தருமாகிய அக்கினிகாசியபரென்பவரிடஞ் சென்று, அவரிடத்திருந்து கொடியபாம்பொன்றைத் தம்முடைய விசேட ஆற்றலாலடக்கி அவர்வழிபட்டுவந்த அக்கினியையே உதாரணமாகக்காட்டி, "புலன்களெல்லாம், பொறிகளின் வழியேசென்று காமவெகுளிமயக்கங்களை உள்ளத்திலுண்டாக்கி அஞ்ஞானமாகிய பெருந்தீயால் ஒவ்வொருவரும் எரிந்து வருந்தும்படி செய்து கொண்டுவருகின்றனவென்றும், அத்தீயையவித்து நிருவாணத்தைப்பெறுதற்கு முயல்வோர்யாவரும் புலன்களால் உள்ளம் சலியாதபடி தம்முடையபொறிகளை வெல்லவேண்டுமென்றும், இதையன்றி நிருவாணத்தையடைதற்குரியவழி வேறொன்றுமில்லையென்றும் உபதேசிக்க, அவரும் அவருடையசிஷ்யர்கள்ஐஞ்ஞூற்றுவரும் தங்கள்கொள்கைகளைத் துறந்து சங்கத்தைச்சார்ந்தார்கள்: பின்பு அந்நக்காசியபருடைய சகோதரர்களாகிய நதீகாசியபர், கயாகாசியபரென்னுமிருவரும் ததாகதரைச் சரணமடைந்து அறங்கேட்டுப் பிக்ஷுக்களானார்கள். அக்கினிகாசியபருக்குப் புத்தர் அக்கினியை உதாரணமாகக்காட்டி உபதேசித்த விஷயங்கள், ஆதித்தியபரியாய சூத்திரமென்னுநூலிற் கூறப்பட்டுள்ளன.

# சுகிர்ல்லாபம்

## அல்லது

## நட்புப்பேறு

"புத்திசாலிகளாயிருக்கிற சினேகர்கள் திரவியமில்லாதிருந்தாலும், வேறே சாதனங்களில்லாவிட்டாலுங் காகமும் எலியு மாமையு மானு நட்பினு லொன்றையொன்று காப்பாற்றினதுபோல, ஒருவருக்கொருவ ருதவுவார்கள்" என்று சோமசன்மா சொல்ல, ராஜகுமாரர்கள், "அதெப்படி?" என; அவன் சொல்லத்தொடங்கினன்.

"கோதாவரிக்கரையிலிருக்கிற வொருபெரியவன்னிமரத்தில் லகுபதனனென்னுங்காகம் வாசஞ்செய்துகொண்டிருக்கையிலொருநாள் விடியற்காலத்தி லங்கே யமனைப்போல மிகவும்பயங்கரமா யொருவேடன் வந்தான். லகுபதனனவனைப்பார்த்துப்பயப்பட் டிந்தத்துராத்மாவென்னபண்ணுவானே தெரியவில்லை; ஆகையாலிதைச்சோதிக்கவேண்டுமென் றிரைதேடுகிறயத்தனத்தைவிட்டிருக்க, இதற்குள்ளே யவ்வேடன் வலையைவிரித்துப் பலவகைப்பட்டதானியத்தைத்தெளித் தங்கே யோர்செடிமறைவிற் பதுங்கிக்கொண்டிருந்தான். அதன்பிறகு தன்பரிவாரத்தோ டந்தமரத்தில்வந்திறங்கின சித்திரக்கிரீவனென்னும் புறவரசு அங்கேயிறைத்திருக்குந் தானியத்தைப்பார்த்துத் தன்பரிவாரப்புறுக்களுடனே, "இந்த நிர்மானுஷியமான காட்டிற் றனியமெப்படி வரும்? யாராகிலும் கொண்டுவந்து போட்டிருக்கவேண்டும்; இது நமக்குத் தெரிந்தாலல்லாமலிதைப் பக்ஷிக்கலாகாது. ஒரு பிராமணன் பொற்காப்புக்காசைப்பட்டுப் புலியினலேயப்படி மரணமடைந்தானே வப்படிக்கேதோ வொரு விபரீதமாகத் தோற்றுகிறது" எனப் புறுக்களதைக்கேட்டு, "அதெப்படி மஹாராஜாவே!" எனச் சித்திரக்கிரீவன் சொல்லுகிறது:—

"நான் றென்காட்டின் மேய்ந்துகொண்டிருக்கையிற் பார்த்தேனதைக் கேளுங்கள். ஒரு கிழப்புலி பலவீனத்தாலாகாரஞ் சம்பாதிக்கக்கூடாம லோரேரி கரையினிராடிக்

கையிற் றருப்பை வைத்துக்கொண் டுட்கார்ந்திருக்கையி லொருபிராமண னந்தவழியில் வந்தான். புலி யவனைப்பா ர்த்து, "ஓ! பிராமணா! இந்தப் பொற்காப்புத் தருகிறேன்; வா" என, இதைக்கேட்டந்தப்பிராமண னப்புலியைப் பார்த்து இந்தக்காப்பு நமக்கு வலியக்கிடைக்கிறது; மரணத்துக் கிட மாகிய புலியின்கிட்டப் போகலாகாதாகையா லிந்தக் காப்பி லாசைவைக்கலாகாதென்போமானால் மரணத்துக்கு நாலண் டையும் வழியாகையா லிதைக்குறித்துப் பிரயத்தன மவசியம் பண்ணவேண்டும்' என்று தன் றுராசைக்கேற்பத் தனக் குள்ளே யாலோசித்து நிச்சயித்துக்கொண்டு புலியைப் பார் த்து, "ஐயா! புலியாரே! காப்பெங்கே யிருக்கிறது?" என, புலி கையில் வைத்துக்கொண்டு, "இதோ பார், பிராம ணோத்தமா!" எனக் காண்பித்தது. பிராமணன், "உன்னிட த்தி லெனக் கெப்படி நம்பிக்கை?" என, புலி, "நான் வைக றையின்மூழ்கி நித்தியதானம்பண்ணிக்கொண்டிருக்கிறேன். நகமும் பல்லும்போன கிழவனாயிருக்கிறேன். இப்போ தென்னிடத்தி னம்பிக்கை யில்லையா? வேட்டல், ஓதல், கொடுத்தல், தவம், சத்தியம், உறுதி, பொறுமை, ஆசை யின்மை யென்னுமிவ்வெட்டுத்தருமங்களையு நானறிந்திருக் கிறதனா லிந்த வபூர்வ வஸ்துவை யார்க்காகிலுங் கொடு க்க விச்சிக்கிறேன். இதனா லென்னிடத்தி னற்குணமிருக் கிறதென்றும் எவ்வளவானாலுந் துர்க்குண மில்லையென்று மறியவில்லையா?" என, அப்போது பிராமணன், "இது மெய் தான்; ஆனாலும் புலி மனிதனை யடித்துத் தின்னுகிறதென்று மிகவும் லோகாபவாத மிருக்கிறது" என, புலி, "நான் றரும சாஸ்திரமு மறிந்திருக்கிறேன்; தம் பிராணன் றமக்கெப்ப டித் தித்திப்போ வப்படி யெல்லார்க்கு மிருக்குமென்றறிந்து சாதுக்கள் பிராணிகளிடத்திற் றயையா யிருக்கிறார்கள். தம் மைப்போலச்சுகதுக்கங்களைப்பிறரிடத்திலும் நினைக்கிறார்கள். நீ மிகவுந் தரித்திர னாகையா லுனக்குக் கொடுக்க யத்தனிக்கி றேன். சாஸ்திரமு மிப்படியே யிருக்கிறது. எப்படியு மேழைக்கே கொடுக்கவேண்டும். செல்வமுள்ளவனுக்குக் கொடுக்கலாகாது. மருந்து நோயாளிக் கெப்படிக் குணங்

கொடுக்குமோ வப்படி நோயில்லாதவனுக் காகுமா? நீ யிந்த வேரியிலேயே மூழ்கிவந்து காப்பை வாங்கிக்கொண்டு விட்டுக்குப்போ" என்றவுடனே, பிராமணன், ஐயோ! பிராமணனுக்குப் பின்புத்தியாகையாற் புலியின்பேச்சைநம்பி ஸ்நானம்பண்ணுகிறதற் கேரியிலிறங்கினவுடனே, உளையிற் புதைந்து காலைப்பிடுங்கிக்கொண்டுவரக்கூடாமற் றிகைத்தான். புலி யதைப் பார்த்து, "பிராமணா! பயப்படாதே; நானுன்னைச் சேற்றினின்று மெடுக்கிறேன்; சற்றிரு" என்று சொல்லிக்கொண்டு மெல்லெனப்போ யவனைப் பிடித்துக்கொண்டது. அப்போது பிராமணனெண்ணமிடுகிறான். துஷ்டர்கள் வேதாத்தியயனம்பண்ணியிருந்தாலுந் தருமசாஸ்திரமறிந்திருந்தாலு மவர்கள்வார்த்தையி னம்பிக்கைவைக்கலாகாது. எவன் சுபாவ மெப்படியோ வதெப்போதும் போகாது. இப்படியிருக்கையி னம்முடைய சாதிக்கியல்பாயிருக்கிற பேராசையினாலிந்தத் துஷ்டனிடத்தில் விசுவாசம் வைத்து மோசம்போனேன்' என்றிப்படிப் பச்சாத்தாபப்பட்டுக்கொண்டிருக்கையி லந்தப்புலி கொன்று தின்றது. ஆகையால் மிகவு மாலோசனைபண்ணி யேதொன்று செய்யத்தக்கதோ வதைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் யாதொரு தீங்கு நேரிடாது" என்றிப்படிச் சித்திரக்கிரீவன் சொன்ன வார்த்தையைக்கேட் டொருபுறா கர்வத்தோடு, "இப்படி யாலோசித்தா லோரிரையு நமக்ககப்படாது. மேலும் வெட்கப்படுகிறவன், பொறாமையுள்ளவன், சந்தோஷப்படாதவன், குரோதமுள்ளவன், தீராச்சந்தேகமுள்ளவன், பிறர் பொருளாற் சீவிக்கிறவன் இவ்வாறுபேருந் துக்கத்தையே யனுபவிப்பார்கள்" என, இதைக்கேட்டுப் புறாக்களெல்லாந் தானியத்தைத் தின்னும்பொருட்டுப் போய் நிலத்திலிறங்கி வலையிலகப்பட்டன. புறாவரச னதைப்பார்த்து, "எல்லாரு மென்சொல்லைக் கேளாமற் போனார்கள். இப்போது நானொன்றியாயிருந்து பலனில்லை" என்று சொல்லி யதுவும் வலையில்வந் தகப்பட்டது. வேடன் பக்ஷிகள் வலையிற் சிக்கிக்கொண்டதைப்பார்த் ததனிடத்திற்கு வரத்தொடங்கினான். அதைப் புறாக்கள் கண்டு, சித்திரக்

கிரீவனைப்பார்த்து, "நாங்கள் நீசன் புத்தியைக் கேட்டுன்னை யவமானம் பண்ணினோம். அதன் பலன் பிராப்தியாயிற்று" என, அப்போது சித்திரக்கிரீவன், "இப்போதிதைச்சொல்லிப்பயனென்ன ? இதற்கோ ருபாய மிருக்கிறது. எல்லோரும் வலையோடுகூட வொருமிக்கப் பறந்து வேறிடத்திற்குப் போக வேண்டும் ; அப்படிச் செய்தாற்றான் பிராணனைக் காப்பாற்றலாம்" என, இதைக் கேட்டவுடனே யெல்லாப்பறவைகளும் வலையோடுகூடச் சடிதியிற் பறந்துபோயின. அதை வேடன் தூரத்திலிருந்து பார்த்தாச்சரியப்பட்டிவைகளொரேமனதாய் வலையைக் கொண்டுபோயின. ஆயினுமிவைகளி லொன்றுக்கொன்று சண்டைநேரிடும் ; அப்போ தென் கையிலகப்படுமென நினைத்துக்கொண் டவைகளின் பின்னேயோடும்போது புறாக்கள் கண்ணுக்கு மறைந்து போய்விட்டன. பிறகவன் வருத்தப்பட்டுத் திரும்பிவந்துவிட்டான். இவ்வாச்சரியமெல்லாம் பார்த்திருந்த லகுபதனனென்னுங் காக மந்தப்புறாக்களின்பின்னே போயிற்று. கபோத ராஜா தன்கூட்டத்தைப்பார்த்து, "கண்டகிநதிதீரத்திலிருக்குஞ் சித்திரவனத்தி லென் சிநேகிதனான விரணியகனென்னுமோ ரெலியரச னிருக்கிறான். அவன் பல்லினாலே நம்முடைய வலையை யறுப்பான். அங்கே நடவுங்கள்" என, இதைக்கேட் டப்படியே யெலியரசன்வளையண்டை யிறங்கின ; அப்போ தேதாவ தாபத்து நேரிடுமென்பதைக் குறித்துத் தன்வளைக்கு நூறுவழிசெய்துகொண்டுள்ளே யிருந்தவெலியரசன் புறாக்களிறங்கின சப்தத்தைக்கேட்டுப் பயந்தடங்கியிருக்கையிற் சித்திரக்கிரீவன், "சிநேகிதா ! இரணியகா ! எங்களோடே யேன் பேசவில்லை ?" என, இதைத் தன் சிநேகனுடைய தீங்குரலென்றறிந்து சந்தோஷத்தோடுகூடச் சீக்கிரமாக வளையினின்றும் வந்து, "நான் புண்ணியவானாகையாற் சித்திரக்கிரீவனென்னு மித்திரனென் விட்டுக்கு வந்தான். இவ்வுலகத்தின் மனமொத்த மித்திரனோடு சம்பாஷிக்கிறதிலும் வேறேயானந்தமேது ?" என்றுபசாரஞ் சொல்லிப் பிறகதனுடைய வஸ்தையைப் பார்த்து மிகவுந் துக்கித்து, "மித்திரா ! நீ யெல்லாரைக்

காட்டிலுஞ் சமர்த்தனுமே; உனக் கிப்படிப்பட்ட காரிய மெப்படி நேரிட்டது?" என, புறு, "எந்தக்காலத்திலெது நடக்குமோ வதுநடக்கும். விதி வலிது; அதன்முன் யாரு டைய வுபாய நடக்கும்? கடல்பெருகி மேலிட்டாலதற்குக் கரையேது?" என, இரணியகன், "இந்தப்பேச்சு மெய்யே; நூறுநாழிகை வழித்தூரத்திலிருந்து வஸ்துக்களைத் தெரிந் துகொண்டு போகிற நீ யின்றைக்கு வேடன் வலையிற் பாரா மற் சிக்கிக்கொண்டையே பார். சந்திரசூரியர்களுக்கு ராகு கேதுக்களாற் பீடைவருதலும், யானையும் பறவையும் பாம்புங் கட்டுப்படுதலும், புத்திசாலிகளுக்கு வறுமை வருதலுந் தெய்வத்தின் மகிமையேயல்லாமல் வேறல்ல" என்றுசொல்லிச் சித்திரக்கிரீவன் கட்டுண்டிருக்கிற வலைக் கயிற்றை யறுக்கத் தொடங்கிற்று. அப்போது சித்திரக் கிரீவன், "மித்திரா! முன்னே யென்பரிவாரத்தினுடைய கயிற்றை யறு; பிற கென்பாசத்தைத் துணி" எனக் கேட்டு, எலி, "என்பல்லு மிகவுமெதுவானது; அதற்குப் பலமுங் கொஞ்சம்; இத்தனைபெயருடைய பந்தனைகளெனக் கெப்படி யறுபடும்? உன்றளையையறுத்துப் பின்னென் சாமர்த்தியத்துக்குத்தக்கதாக வவர்களுடைய தளையையு மறுப்பேன்" என, சித்திரக்கிரீவன், "நல்லது; முன்னே யிவர் களுடையபாசத்தை யறு" என, இரணியகன், "தன்னைக் காப்பாற்றிக்கொண்டு தன் பரிவாரங்களைக் காப்பாற்றவேண் டும். அறம் பொருளின்பம் வீடாகிய விவைகளுக்குப் பிரா ணன் முக்கியசாதனமாகையா லதைக்காப்பாற்றினுலெல்லா வற்றையுங் காப்பாற்றினாற்போலாகிறது" என, சித்திரக்கிரீ வன், "இந்தநீதி சரிதான்; ஆயினு மிப்படிப்பட்டவேதனை யினின்றும் பாலனம்பண்ணுகிறதற்கல்லவோ வென்னையிவர் கள் ராஜாவாக நினைக்கிறார்கள்? ஆகையாலென்பிராணனி டத்திலிச்சையைவிட் டிவர்களைப் பிழைப்பி" என, அதைக் கேட் டெலி, "நீ பரமசாது; அடுத்தவர்களை யாதரிக்கிறவனா யிருக்கிறாய். எசமானனிடத்தில் விசுவாசமாயிருக்கிற சேவ கனும், சேவகனிடத்திற் பிரீதியாயிருக்கிற வெசமானனுஞ் சுகமடைவார்கள்" என்று சொல்லி, எல்லாவற்றின் பாசங்

களையுமறுத்துச் சித்திரக்கிரீவனுடைய கட்டையுஞ் சேதித்தது. பிறகொன்றையொன்று தழுவிக்கொண்டு பிரியவார்த்தைகள் சொல்லின. சித்திரக்கிரீவன் பரிவாரத்தோடுகூடத் தன்னிடத்திற்குப் போனது. லகுபதனனென்னுங்காகமிவையெல்லாம்பார்த் தாச்சரியப்பட்டிரணியகனைநோக்கி, "நீ பாக்கியவானு யிருக்கிறுயாகையா னுனுமுன்சிநேகத்தை விரும்புகிறேன்; நீ தயைசெய் தெனக்குச் சிநேகனுகவேண்டும்" என, அப்போதிரணியகன், "நீ யார்?" என, காகம், "நான் லகுபதனனென்கிற காக்கை" என, அதைக்கேட் டெலி, "உனக்குமெனக்கும் வெகு தூரம்; உலகத்திற் சமானஸ்தர்களுக்கே சிநேகமுண்டாகிறது; நானுனக்கிரை; நீ யென்னைத் தின்கிறவன். இப்படியிருக்கையிலிதெப்படியாகும்? ஆபத்துக்கே முகாந்தரமாம். நரிசிநேகத்தினு லொரு மான் வலையிலகப்பட்டதுபோ லுன்னு லெனக்குப் பொல்லாங்கு நேரிடும்" என, லகுபதன னதைக்கேட்டு, "மானெப்படி வலையிற் சிக்கிக்கொண்டது?" என, எலி சொல்லத்தொடங்கிற்று:—

"மகததேசத்திற் சண்பகவனத்தில் ஒரு மானுங் காகமுமொன்றுக்கொன்று நட்பா யிருந்தன. அப்படியிருக்கையிலந்தமான் மனதின்படி புன்முதலானவைகளை மேய்ந்து கொழுத்திருக்கிறதை யொருநரி பார்த்துத் தனக்குள்ளேயாலோசித் திவனமக் கசாத்தியனு யிருக்கிறு னுகையா லிவனை வஞ்சனையாற் கொல்லவேண்டுமென் றிப்படி நிச்சயித்ததன் சமீபத்திற்போய், "சிநேகிதா! சுகமா?" என, அதைக்கேட்டு மான், "நீ யார்?" என, நரி, 'நான் குத்திரபுத்தி யென்கிறநரி; இந்தக்காட்டில் யாருமற்றபாவியா யொருவனுகத் திரிந்து கொண்டிருந்தேன்; இன்றைக்குன்னைப்பார்த்து மிகுந்த சந்தோஷத்தை யடைந்தேன்; இப்போதுனக்கு வேலைசெய்து கொண் டுன்னிடத்திலிருக்க விச்சிக்கிறேன்" என, இதைக்கேட்டு மான், "நல்லது" என்று பொழுதுபோனவுடனே யிரண்டுஞ் சண்பகமீரத்தின்கீழே வந்தன. அம்மரத்தின்மேல் வாசம்பண்ணிக்கொண்டிருக்கிற மானின் சிநேகிதனுகிய சுபுத்திஎன்னுங்காக மிவ்விரண்டையும் பார்த்து, மானை, "ஓ! மித்திரா! உன்னண்டையிலிருக்கிறவன் யார்?" என, மான்,

"இந்தச்சம்புக மனன்னுடன்சிநேகிக்க விரும்புகிறான்" என, அப்போது காகம், "மித்திரனே! சடிதியில் வந்த பழக்கமில்லாதவனை நம்பலாகாது. ஒருவன் குலமு நடத்தையுந் தெரியாம லவனுக்கிடங்கொடுத்தா லொருபூனைக்குச் சரற்கவனென்னுங்கழு கிடங்கொடுத்திறந்தாற்போல நேரிடும்" என, அதைக்கேட்டு மான், "சரற்கவனெப்படிச் செத்தான்?" என, காகஞ் சொல்லுகிறது:—

"பாகீரதி தீரத்திற் றிரிகூடமென்னுமலையிலொருமுதிய வித்திமரத்தின்பொந்தில் வாசம்பண்ணிக்கொண்டிருக்கிற நகமுங் கண்ணுமில்லாத சரற்கவனென்னுமொரு கிழக்கழுகானது மற்றைப்பக்ஷிக டன்னிடத்திலிரக்கம்வைத்துத் தங்களாகாரத்திற் கொஞ்சங்கொஞ்ச நெருக்கிக்கொடுக்கத் தின்றுகொண்டு சீவித்திருக்கையி லொருநாணெடுஞ்செவியனென்னும்பூனை பறவைகளுடையகுஞ்சுகளைத்தின்னவேண்டி யந்த மரத்தின்கீழேவர, அதைக் குஞ்சுகள் பார்த்துப்பயந்து பெருங்கூச்சலிட்டன. கழுகு கேட்டு, "நீங்களேன் பயப்படுகிறீர்கள்? இங்கே யெவன் வந்தான்?" என, இதற்குள்ளே பூனை சரற்கவனைப் பார்த்து நான் செத்தேனெனப் பயப்பட்டுடனே மனதிற்றைரியம்பண்ணிக்கொண்டிந்தச் சத்துருவைத் தப்பிக்கொண்டோடுகிறதற்கு நமக்குச் சக்தியில்லை. ஆகையா லிவன் சமீபத்திற் போகவேண்டும். பின்ன ரெதுவுண்டாகுமோவதுவுண்டாகட்டுமென்றிப்படி நிச்சயித் தந்தக் கழுகின்கிட்டப்போய், "சமர்த்தனே! உனக்கு வந்தனம் பண்ணுகிறேன்" என, கழுகதைக்கேட்டு, "நீ யார்?" என, அப்போது பூனை, "நெடுஞ்செவியனென்னும் பூனை" என, பின்பு சரற்கவன், "நீ சீக்கிரமா யிவ்விடம் விட்டோடிப்-போ; இல்லாவிட்டாற் சாவாய்" என, பூனை, "நானென் விர்த்தாந்தத்தைச்சொல்லுகிறேனதைக் கேள்; பிறகு கொல்லத்தக்கதானாற் கொல்லு; சாதிபேதத்தினாலேயே பிராணிகளைக் கொல்லுவதாவது பூசிப்பதாவது யோக்கியமல்ல; ஆதலாலவனவ னடத்தையைப் பார்த் தெதுசெய்யத்தக்கதோவது செய்யவேண்டும்" என, கழு கிதைக்கேட்டுப் பூனையைப் பார்த்து, "நீ யேன்வந்தாய்? சொல்" என, பூனை, "நான்

கங்காதீரத்தி னித்திய ஸ்நானம்பண்ணிச் சாந்திராயணமுத லாகிய விரதங்க ளாசரித்துக்கொண்டிருக்கின்றேன். நீ மிக வுந் தருமவானுயிருக்கின்றாயென்று பக்ஷிகளா லெப்போ துங் கேள்விப்படுகிறதினாலும், வயதின்முதிர்ந்தவிருத்துவா னிடத்திற் றருமங்கேட்கவேண்டுமென்று சாஸ்திரமிருக்கிற தினாலு நானுன்னிடத்திற்கு வந்தேன். நீ தருமத்தைதவிட் டென்னைக் கொல்லத்துணிந்தாய். இப்படி யில்லறத்தாரு டையவாசார மெங்கும்பார்த்ததில்லை. சத்துருவுந் தன்வீட் டுக்குவந்தாற் சாதுக்க ளவனுக்குச் சம்மானம்பண்ணுவார் கள். மரந் தன்னைவெட்டுகிறவனுக்கும் நிழல்கொடுக்கவில் லையா? சாதுக் கடங்கள்வீட்டுக்கெவன்வந்தாலும் பூசிக்கிறார் கள். குறைச்சலொன்றும் பண்ணுகிறதில்லை. அதிதி யாரு டையவீட்டுக்குவந்துமுகம்வாடிப்போகிறானோ வவன் றன் பாவத்தை யவ்வீட்டெசமானனுக்குக்கொடுத் திவன்புண்ணி யத்தைக்கைக்கொண்டு போகிறானகையாற் சாதுக்க ளெல் லாரிடத்திலுந் தயைசெய்கிறார்கள். சந்திரன் சண்டாளன் வீட்டிலும் பிரகாசிக்கிறான்'' என, இதைக்கேட்டுக் கழுகு, "பூனை யிறைச்சிகளைத் தின்கிறது; மேலுங் கொலைசெய்கிற தென்று நினைத் திப்படி நான் சொன்னேன்'' என, அதைக் கேட்டு நெடுஞ்செவியன் பூமியைத்தொட்டுச் சிவசிவவென் றுச்சரித்துக் காதின்மேற் கையைவைத்து, "நான் றருமசாஸ் திரங்கள் கேட்டு மிகுந்தவைராக்கியமடைந்து பொல்லாத கருமங்களையெல்லாம் விட்டுவிட்டேன். அநேக சாஸ்திரங் களிற் கொலைசெய்வதுபோல வேறொருபாதகமில்லையென்று சொல்லியிருக்கின்றது. எவர்கள் மற்றொருவனைக்கொன்று தங்களுக்குச் சுகத்தைவிரும்புகிறார்களோ வவர்க ணரகத்தை யடைகிறார்கள். ஆகையாற் கொலைசெய்யாமலிருப்பதுபோல வேறொரு தருமமில்லையென்று நினைத்துக் காட்டிலிருந்து கொண்டு கரியகனிகிழங்குகளைச்சாப்பிடுகிறவர்கள் பாதக மெப்படிப் பண்ணுவார்கள்?'' என்றுசொல்லிக் கழுகுக்கு நம்பிக்கை வரப்பண்ணி யதன்வீட்டிலிருந்தது. பிறகந்த ருத்திராக்ஷப்பூனை பட்சிகளின்குஞ்சுகளை நாடோறு மங்கே கொண்டுவந்து தின்றுகொண்டிருக்கத் தலைப்பட்டது; அப்

போது குஞ்சிழந்தபறவைகளெல்லாங் கிலேசப்பட் டொன்ருய்க் கூடித் தங்கள்குஞ்சுகளைச் சோதிக்கத்தொடங்கின. பூனை யிதையறிந் தவ்விடம்விட் டோடிப்போயிற்று. அந்தப்பக்ஷிகளங்கே பார்த்துக்கொண்டே கழுகின் பொந்தண்டை வந்துபார்க்கையி லக்குஞ்சுகளுடையவெலும்புகளும் சிறகுகளும் விழுந்துகிடக்கக்கண்டு, நம்முடைய குஞ்சுகளை யிந்தத்துரோகிக் கழுகே பக்ஷித்ததென்று நிச்சயித் தந்தக்கழுகைக்கொத்திக்கொன்றன. ஆகையா லொருவனுடைய குணந்தெரியாம லவனுக் கிடங்கொடுக்க லாகாது" என, அப்போது நரி, "ஒருவன் சுபாவஞ்சிநேகிக்கிறதற்கு முன்னே தெரியுமா? நல்லோர்களுக்குச் சுபாவத்தினுலே காரியமில்லை. அவர்களுடைய சினேகங் கண்டமாத்திரத்தினுலேயே யாகிறது" என, மானதைக்கேட்டுக் காகத்தைப் பார்த்து, "எப்படி நீ யெனக்குமித்திரனே வப்படியே யிவனுமிருக்கட்டும். நீ யொன்றுக்குந் தடைசொல்லாதே" என்று சொல்லி, நரியைத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டது. பிறகு மூன்றுந் தங்கண் மார்க்கத்தின்படி வயிற்றை நிரப்பிக்கொண்டு ராத்திரிக் கந்தவிடத்தில் வந்துகொண்டிருந்தன. இப்படியிருக்கையி லொருநாணரி மானைப்பார்த்து, "மித்திரா! இந்தக்காட்டி லிளவிளவென்று நேர்த்தியான பயிரிருக்கிறதை யுனக்குக் காண்பிக்கிறேன்" என்றுசொல்லி, அதை யிட்டுக்கொண்டுபோய்க் காட்டிற்று. அன்றுமுதலாயந்தமான் போய்த் தினமானம் பயிரை மேய்ந்துகொண்டிருக்கையிலதைக் கொல்லைக்காரன்பார்த் தங்கே வலைகட்டினுன். பின்பு மா னங்கே வழக்கப்படி மேயப்போ யதிற் சிக்கிக்கொண் டிப்போதென்னை மித்திரனைத்தவிர யார் விடுவிப்பானென்று மனதிலெண்ணிக்கொண்டிருக்கையி லங்கே நரிவந்தென்னுடைய மநோரத நிறைவேறிற்று. இப்போது நானிதனெலும்பையுமாம்சத்தையு நிரம்பத்தின்னுவேனென்று வாயூற மனதி லெண்ணிக்கொண்டு சும்மாவிருந்தது. அதைக்கண்டு மான், "மித்திரா! ஏன் சும்மாவிருக்கிருய்? என்னுடையதளையைச் சீக்கிரமாயறுத்தென்னைவிடுவி; சங்கடகாலத்திற் சிநேகிதர்க ளுடையிழந்தவன்கைபோலுதவுகி

ருர்கள்'' என, சம்புகன், "ஆம்; நீ சொல்வதெல்லா மெய்யே. ஆயினு மெனக்கின்றைக்கு விரததினமாகையா லனிந்தத் தோல்வலையைத் தீண்டமாட்டேன்; நாளைக்கென்னசொன்னு லுங் கேட்பேன்; சிநேகிதனுக்காக நான் பிராணனைவிடத்தக் கவன்'' என்றுசொல்லி, அதன்கண்ணுக்குத் தப்பித்துக் கொண்டங்கே யோரிடத்தி லொளித்துக்கொண்டிருந்தது. காக மிராத்திரிக்கு மான் வரவில்லையென் றதைத்தேடும் பொருட் டிங்குமங்குந்திரிந்துகொண் டங்கேவருகையி லந்த மானி னவஸ்தையைப் பார்த்து, "சிநேகிதா! உனக்கிந்த வவஸ்தை யிப்படி யேன்வந்தது?'' என, மான், "இது வுன் வார்த்தையைக்கேளாமையால் வந்த பலம்'' என, காகம், "உன்கூட்டாளியான சம்புக னெங்கேபோனான்?'' என, மான், "என்னுடையவிறைச்சியைத்தின்கிறதற்காக விங்கே தானேயொளித்துக்கொண்டிருப்பான்'' என, அதைக்கேட் டுக் காகம், "தனக்கிதம்பண்ணுகிற மித்திரன்பேச்சைக் கேளாதவனுக்குவிபத்துச் சீக்கிரமாகவரும். இன்னுமவன் சத்துருவுக்குச் சந்தோஷம்வருவிக்கிறான்'' எனச்சொல்லிக் கொண்டிருக்கையிற் கொல்லைக்காரன் கையிலொருதடியை யெடுத்துக்கொண்டுவர, அவனைப்பார்த்துக்காகம், மானுக்கு, "மித்திரா! நீ யிப்போது மூச்சையடக்கிக்கொண்டு செத்த வனைப்போலக்கிடந்தாலவனுன்னைப்பார்த்து நீசெத்தாயென் றெண்ணிக்கொண்டு கட்டியவலையையவிழ்த்துச் சுருட்டி வேறோரிடத்தில்வைக்கப்போவா னப்போது நான் கத்துகி றே னதைக்கேட்டமாத்திரத்தின் மிகவும்விரைவாயோட்டம் பிடி''என்றுசொல்லித்தானப்படியே பொய்யாக மானின்க ண்ணைக் குத்திக்கொண்டிருந்தது. இதற்குள்ளே வந்தகொ ல்லைக்காரன் மானைப்பார்த்துச் செத்ததென்றெண்ணிக் கட் டியிருந்தவலையையவிழ்த்தோரிடத்தி லொன்றாகக்கூட்டி வைக்கப்போனான். காகமதைப்பார்த்துச் சங்கேதப்படிகத்த, மானதைக்கேட்டவுடனே யோட்டம்பிடித்தது. அதைக் கொல்லநினைத்த வந்தக்குடியானவன் றடியைவிசிறியெறிய, அது பதிவிருந்தநரிமேற்பட் டிறந்தது. ஆகையாற் புண் ணியமாவது பாவமாவது மிகுதியானா லதன்பல னுட்னே

யுண்டாகிறது" என்றுசொல்லிப் பின்னு மெலி, "இப்படி மானுக்கு நரியின்சிநேகம்போ லுன்னுறவு முபயோகமன்று" என, காகம் "உன்னைத்தின்று லெனக்குப்போதுமா? நீ பிழைத்திருந்தா லுன் சித்திரக்கிரீவனைப்போலச்சுகமடைவேனென்றுன்னட்பை விரும்புகிறேன்" என, பின்னு மிரணியகன், "நீ யெனக்குப் பகைவன். உன்னுடனே நான் சிநேகம் பண்ணுகிறதில்லை. சத்துரு தனக்கனுகூலமாயிருந்தாலுமவனோடே சிநேகிக்கலாகாது. தண்ணீர் வெந்நீராலுநெருப்பை யவிக்கும். எது தக்கதோ வதைச் செய்யவேண்டும். தண்ணீரில் வண்டியும், பூமியின்மேற் கப்பலும் நடக்குமா? இதனுற் சத்துருக்களிடத்தில் நம்பிக்கை வைக்கலாகாது" என்றிப்படிப் பலவிதமாகச்சொல்லக் காகம், "நானுன்னுடனே சிநேகிப்பேன்; இல்லாவிட்டாற் பட்டினியாக விருந் திங்கேயே பிராணனை விடுவேன். நெருப்பின் வெப்பத்தினுற் பொன்முதலானவை யுருகியொன்றுகும். யாதேனுமொருநிமித்தத்தினுலே விலங்குபறவைகண் மித்திரத்துவத்தையடைகின்றன. பயத்தினுலாகிலும், யாதோராசையினுலாகிலு மூடர்களுக்குச் சிநேகமுண்டாகிறது. சாதுக்களுடையசிநேகமோ கண்டமாத்திரத்திலுண்டாகிறது. மண்பானை சீக்கிரமாயுடைகிறது; பிறகு பொருந்துகிறதில்லை. பொன்குடஞ் சீக்கிரத்திலுடையாது; உடைந்தாலுமொன்றும். இப்படியே துர்ச்சனசற்சனர்களுடைய சிநேகமிருக்கிறது" என, இதைக்கேட்டிரணியகன், "உன் வார்த்தையா லுன் சந்தோஷமடைந்தேன்; இப்போதுனக்குமெனக்குஞ் சிநேகத்துவ மிருக்கட்டும்; இனிமே லுமிருவருமொருமனதாயிருக்கவேண்டும். உபகாரம்பண்ணுகிறவன் மித்திரனென்றும், அபகாரம்பண்ணுகிறவன் சத்துருவென்றுமறிந்து மனக்களங்கமில்லாமனடக்கவேண்டும்" என்றிப்படிப்பேசிநிச்சயித் திரணியகன் லகுபதனனுக்குச்சிறிதாகாரங்கொடுத்துத் தன்வளையிற்போயிற்று. சிநேகலாபம் பெற்ற காகமு மதனிடத்திற்செலவுபெற்றுக்கொண்டு தன்னிடத்திற்குப் போயிற்று. அதுமுதலாயிவைக ளத்தியந்த சிநேகமாயொன்றுக்கொன் றுகாரங்கொடுத்துக்கொண்டு பல

பலவார்த்தைகள்பேசிக்கொண்டிருக்கையிலொருநாள், லகு பதன னெலியைப்பார்த்து, "மித்திரா! இப்போ திங்கே யிரையகப்படாமையால் வேறோரிடத்துக்குப் போகவிச்சிக் கிறேன்" என, அதைக் கேட்டிரணியகன், "எங்கே போகி றாய்?" என, அப்போதது, "தண்டகாரணியத்திற் கர்ப்பூர கௌரமென்கிறதடாகத்திலிருக்கிற வாமையாகிய மந்தரனெ ன்பவ னெனக்குச் சிநேகிதனாயிருக்கிறான்; அவனெனக்கு விதம்விதமானமீன்களைக் கொடுத்துப் போஷிப்பான்; அதை க்குறித்து நா னவனிடத்திற்குப் போகிறேன்" எனக்கேட் டிரணியகன், "மித்திரா! அவ்விடத்திற் கென்னையுங் கொண் டுபோகவேண்டும் நான் தேசாந்தரம்போக விரும்புகிறேன்" என, அப்போது காக்கை, "நீ யப்படி விரும்புவானேன்?" என, இரணியகன், "அங்கே போனபின்பு சொல்வேன்" என, லகுபதன னிரணியகனையெடுத்துக்கொண் டந்தவிடத் துக்குப் போயிற்று. அவைகளைப்பார்த்து மந்தர னவ்விர ண்டுக்கு மாதித்தியம் பண்ணிற்று. அப்போது லகுபதனன் மந்தரனைப்பார்த்து, "இந்தவிரணியகன் மிகவும்பரோப காரி; இவன் சித்திரக்கிரீவனை யவன்கூட்டத்தோடுகூட வலையினின்றும்விடுவித்தவன்; அப்போதிவனட்புநிலைமை யைப்பார்த்து நானு மிவனுடனே நட்புக்கொண்டேன்" என, அதைக்கேட்டுக்கூர்மஞ்சந்தோஷப்பட் டிரணியகனைப்பார் த்து, "மித்திரா! நீ யிந்த மனிதசஞ்சாரமில்லாக்காட்டில் வருவானேன்?" என, அப்போ தெலி சொல்லுகிறது:—

"சம்பகாவதியென்னும்பட்டணத்திற் சூடாகர்ணனெ ன்னுமொருசந்நியாசி யுண்டுமிகுந்தசோற்றைக் கப்பரை யிற்போட் டுறியின்மேல்வைத்துவிட்டு நித்திரைபண்ணிக் கொண்டிருப்பான். பின்பந்தச்சோற்றை நான்றின்றுகொ ண்டு சுகமாவிருக்கிறநாளிலங்கே வீணாகர்ணனென்னுமொரு சந்நியாசி வந்தவனோடுகூட வநேககதாப்பிரசங்கம் பண் ணிக்கொண்டிருக்கையி லந்தச்சூடாகர்ணன் கையிலொரு தடியினாலே பூமியைத்தட்டிக்கொண்டு சோற்றைக்காப்பாற் றிக்கொண்டிருந்தான். அப்போது வீணாகர்ணன், "என் னுடைய கதையை யநாதரவுபண்ணி நடுவே வேறேயென்ன

வியாபாரத்திலிருக்கிறாய்?" என, சூடாகர்ணன், "உன் வார்த்தையை யநாதரவுபண்ணவில்லை. இவ்வெலியென் பாத்திரத்திலிருக்கிறவன்னத்தை நாடோறுந் தின்னுகிறது; அதை யோட்டுகிறேன்" என, வீணாகர்ண னப்போ துறியைப் பார்த்து, "கொஞ்சபலமுள்ளவிந்தவெலி யிவ் வளவு உயர மெப்படிக் குதிக்கிறது? இதற் கேதோ வொரு காரணமிருக்கவேண்டும்; அதுதா னெதுவாயிருக்கலாமென் றாலோசித்துப்பார்த்தால் மிகவு மிங்கே திரவியமிருக்க வேண்டும்; உலகத்திற் றிரவியமுள்ளவர்கள் பலமுள்ளவர் களாயிருக்கிறார்கள்; அசாத்தியமான காரியங்களைச் சாதிக் கிறார்கள்; ராசத்துவத்துக்கு மிது காரணமாகும்; எல்லா மிதினாலாகின்றன" என்றுசொல்ல, அந்தச் சந்நியாசி யிதைக்கேட்டு மெய்தானென்றுநம்பிப் பூமியைவெட்டி, ஐயோ! என்றிரவியத்தை யெடுத்துக்கொண்டான்; அன்று தொடங்கி நா னிளைத்துப்போனேன்; பின்பெனக் கிரையுங் கிடையாததினான் மெள்ளமெள்ள நடந்துகொண்டிருக்கையி லந்தச்சந்நியாசிபார்த்து; "பார்; இந்தவெலி யிப்போது தன் னுடைய சாதித்தன்மையை யடைந்திருக்கிறது. முன்னிரு ந்த தன்மதம் போய்விட்டது. ஆகையாற் பணமில்லாதவர் களை யெல்லோரு மற்பமாய்நினைக்கிறார்கள்" என, இதைக் கேட்டு நான், "இப்போ திங்கேயிருக்கிறது சரியன்று. இதை வேறொருவரோடுஞ் சொல்லலாகாது. பொருளிழவுங் கிரு கச்சித்திரமுந் தானமு மானமு மவமானமு மாயுளுந் தனமு மாகியவிவைகளைப் புத்திமான் வெளிப்படுத்தலாகாது; தன் விதி பிரதிகூலமாயிருக்குங்காலத்திற் பராக்கிரமமு முயற்சி யும் வீணாகின்றன. பணமில்லாதவனுக்கு வனவாசத்தைக் காட்டிலுஞ் சுகமில்லை. எந்தவிடத்தி னும் பணக்காரராயிருந் தோமோ வந்தவிடத்தி லேழையாயிருக்கிற துத்தமமன்று" என்று மறுபடி யிழந்தபணத்தையெடுத்துக்கொள்ளவா- யத்தப்பட்டேன். அப்போது சந்நியாசி யென்னைத் தடி யாலடித்தான்; அதனாலே மிகவுந்துக்கப்பட் டென்சிநேகித னோடேகூட விங்கேவந்தேன்" என, மந்தரன், "மித்திரா! நீ யிதனா லதைரியப்பட் டுறைவிடந்துறந்தோமென்று வருத்

நப்படவேண்டாம். சாதுக்க ளெங்கேபோனாலு மரியாதை பெறுகிறார்கள். சிங்கம் வேறொருகாட்டுக்குப் போனாலும் புல்லைத் தின்கிறதில்லை; யானையையே தின்னும். உற்சாக முள்ளவன், சந்தோஷமுள்ளவன், தைரியசாலி, சூரன், களங்கமில்லாதவனிவர்களிடத்திலே லட்சுமி தானேவந்தடைகிறாள். நீ பணமிழந்தாலு மெப்போதுஞ் சந்தோஷத்தோடேகூடியிருக்கிறாய்; ஆகையா லுனக்கிருக்கிற சுகம் பணத்தாசையான் மயங்குகிறவர்களுக்கில்லை. இன்னுங்கேள்; மேகச்சாயை, துஷ்டனுடையதயை, இளம்புல், பாலஸ்திரீ, யௌவனம், தனமிவைகள் வெகுநாளைக்கு நில்லா. ஆகையாலிவை யிழந்துபோனா லழுதுகொண் டாகாரத்தைக்குறித் தேங்கி யிருக்கலாகாது. நீ நல்ல விவேகியாயிருக்கிறதினாலிவையெல்லா முனக்குத் தெரிந்தேயிருக்கும். இனிச் சிநேகமாயென்னிடத்திற் சுகமாயிரு" என, இவையெல்லாங்கேட்டு, லகுபதனன், "மந்தரா! நீ சகலகுணசம்பன்னன்; மேலுஞ் சற்குணன்; சாதுக்களுக்கு வந்தவாபத்தைச் சாதுக்களே நிவர்த்திபண்ணுகிறார்களென்றறிந்து நாங்களுன்னை நாடிவந்தோம்" என்றுசொல்லி, நீண்ட பெரியமரத்தின்மேற்போயுட்கார்ந்து தன்சுபாவப்படியே யிங்குமங்கும்பார்த்துக் கொண்டிருக்கையி லேதோவொருபயமுகாந்தரத்தையறிந்தவ்விரண்டுக்கும், "நீங்க ளுங்களிடத்தி லொளித்துக்கொண்டிருங்கள்" என, மந்தரன் றண்ணீரிற் போயிற்று. எலி வளையினுழைந்தது. காகம் விருட்சத்தினுனியிலிருந்துபார்க்கையிலேதொன்றுங்காணப்படாமையாற் பின்பு அம்மூன்றுமொன்றுக்கொன்று பேசிக்கொண்டிருக்கையி லங்கவைகளின்சமீபத்திற் சித்திராங்கனென்னுமொருகலைமான்வந்து, "நான் வேடர்பயத்தா லுங்களிடத்திலிருக்கலாமென்று வந்தேன்" என, அதைக்கேட்டு மந்தர னதற்குச் சம்மானம்பண்ணி, "இது வுன் வீடு; நா னுன்சேவகனென் றெண்ணிக்கொண்டு சுகமாயிருக்கவேண்டும்" என முகமலர்ந்து மனங்கலந்த வின்சொற்சொல்ல, பிற கதுவு மிவைகளுட னட்புக்கொண்டிருந்தது. அப்படியிருக்கையிலொருநாட் சித்திராங்கனென்னுமான் புன்மேய வேறோரிடத்திற்குப்போய் மீண்டு சாய

ங்காலம்வாராமையா லாமை மேயப்போனமானின்றைக் கேன் சாயந்தரம் வரவில்லையென்று விசனப்பட, அதையறிந் தெல்லாம் விசனமடைந்தன. மறுநாள் விடியற்காலத்திற் காக்கைபறந்து நாலுபக்கத்திலும்பார்த்துக்கொண்டு போ கையிற் சித்திராங்கன்ருெல்வலையிலகப்பட்டிருக்கிறதைக் கண் டதன்கிட்டப்போய், "மித்திரா! உனக் கிந்தவவஸ் தை யெப்படி நேரிட்டது?" என, மான், "இப்போ திதைக்கேட்டுப் பிரயோசனமில்லை; நீ போ யிரணியகனைச் சீக்கிரமாயிட்டுக்கொண்டுவந்தா லவன் வேடன்வருகிறதற்கு ளென்பாசத்தையறுத் தென்னை விடுவிப்பான். வேடன் வந் தாலோருபாயமு நடவாது" என, இதைக்கேட்டவுடனே விரைவாகப்போ யவைகளுடனே நடந்தகாரியத்தைச்சொ ல்லி யிரணியகனை யிட்டுக்கொண்டுவந்தது. அந்தவிரணிய கன் மானைப்பார்த்து, "நீ சமர்த்தனுயிருக்கையில் வலையிலெ ப்படியகப்பட்டாய்?" என, மான், "வல்லமையிருந்தாலும் வருவது வரும்; இப்போதென்னைச் சீக்கிரமாய் விடுவி; எனக் குப் பழையபய மிருக்கின்றது. முன் நான் குட்டியாயிருக் கையில் வேடன் வலைகட்டி யென்கூட்டத்தை வளைத்தான். மற்றவைகள் பெரியமான்களாயிருந்தபடியாற் குதித்து வலையைத் தாண்டிப்போயின. எனக்குக் குதித்தோடச் சக்தியில்லாதிருந்த தாதலால் வேடன்பிடித் திராஜனிடத் திற்கொண்டுபோனுன். ராஜா வாங்கித் தன்பிள்ளைகையிற் கொடுக்க, அங்கே நான் வெகுநாளிருக்கையி லொருநாண் மேககர்ச்சனையைக்கேட்டு மிகவுஞ்சஞ்சலப்பட்டுக் காற்று மழையாற்பீடிக்கப்பட்டு மான்கூட்டங்க ளோடும்போ தவற்றின்பின் நா னேடுவேனுவென்று மனுஷபாஷையினு லெனக்குள்ளே பேசிக்கொண்டேன். ராஜகுமார னிதைக் கேட்டு நாற்றிசையும்பார்த் தென்னையும்பார்த்தான். பின்பு சற்றுநேரஞ் சும்மாவிருந் திது மனுஷனைப்போ லெப்படி யுச்சரித்தது. ஆகையா லிது வொருவிசித்திரப்பிராணியா யிருக்கிறதென்றுநினைத்துப் பயத்தினுற் சுரத்தில் விழுந் தான். பிறகு விடியற்காலத்திற் சோதிஷர்களை யழைப்பித் தவர்களுடனே யிதைச்சொல்ல, அவர்கள், 'எல்லாமிருகங்

களூ மனிதரைப்போற் பேசுகின்றன; ஆயினு நமக்கு முன்னே பேசுகிறதில்லை; அதுவு முன்னைப் பாராமற் பேசிற்று. இதற்காக நீ பயப்படவேண்டாம். இது யாதொரு விசித்திரப்பிராணியுமன்று; இதனு லுனக் கெவ்வளவும் பயமில்லை' என, இதைக்கேட் டிராஜகுமார னென்னை விட்டுவிட்டான். பிற கிக்காட்டில் வந்தேன்; இப்படி முன் னொருதரம் வலையிலகப்பட்டேனுகையா லென்னைச் சீக்கிர மாக விடச்சொல்லுகிறேன்" என, இதற்குள்ளே மித்திரத் துவத்தினுலே மந்தரனுமங்கேவந் திரணியகனைப்பார்த்து, "மித்திரா! இப்படித் தாமசம்பண்ணுகிறது சரியன்று. இப்போது வேடன் வந்தா னுமெல்லா மோடிப்போவோம். வலையிலகப்பட்ட சித்திராங்கனைப் பிடித்துக்கொள்வான். அதைக்குறித் தெனக்குக் கிலேசமாயிருக்கிறது. நினைப்பின் படி மனதிலிருக்கிறதையறிகிறசிநேகிதனும் மனோகரஸ்திரீ யும் பிறர்துக்கமறிகிறபிரபுவுங் கிடைக்கிறதருமை" என்றிப் படி மந்தரன் சொல்லிக்கொண்டிருக்கையில் வேடன் சடி தியி லெமனைப்போற் றூரத்தில்வருகிறதை லகுபதனன் கண் டெலியைப்பார்த்து, "மித்திரா! வேடன் வந்தான்; இப்போது பெரியசங்கடம் நேரிட்டது" என அதைக்கேட் டிரணியக னதிசீக்கிரமாய்ச் சித்திராங்கன்வலையை யறுத் தது. அறுத்தவுடனே கிட்டவந்தவேடனைப்பார்த் தெல்லா மோட்டம்பிடிக்க வப்போ தவன்விசனமடைந்து நாலண் டையும்பார்க்கையில் மந்தரன் றன்னடையின்படி நடந்து கொண்டிருந்தது. வேட னதைப்பார்த்துத் தன்வில்லிற் சேர்த்துக்கட்டிக்கொண்டு கொஞ்சஞ் சந்தோஷத்தோடே போகும்போ ததைப்பார்த்து மானு மெலியுங் காகமு மிக வுஞ்சிரமப்பட் டிப்போதென்னசெய்யலாமென்று வேடன் பின்னே போகத்தொடங்கின. அப்போதிரணியகன், "ஒரு சங்கடநிவிர்த்தியாகிறதற்குள்ளே மற்றொன்று வந்துநேரிட் டது. ஆகையாற் சீவனுக்குத் தேகத்தோடுகூட வநேகந்துக் கங்களையனுபவிக்கவேண்டியிருக்கிறது. இந்தத் துன்பஞ் சிநேகத்தினு னமக்குவந்தது. எவன் மித்திரனிடத்தில் விசு வாசம் வைக்கிறுனே வந்த விசுவாச மவனுக்குத் தாய்,

தந்தை, சகோதரன், பிள்ளை, சுற்றங்களிடத்திலிராது" என் றிப்படி வெகுவிதமாய்த் துக்கித்துப் பின்னும், "வேடன் றூரமாகப்போவதற்குமுன்னே மந்தரனைவிடத்தக்கவுபாயம் பண்ணவேண்டும்; பிறகாகமாட்டாது" என, "அப்போ தவைக ளென்னசெய்யலாஞ்சொல்" என, எலி, "சித்தி ராங்க னேரிகரையிற் செத்தவனைப்போல் கிடக்கவேண்டும்; அதன்மேற் காகமுட்கார்ந்துகொண்டு பொய்யாகக் குத்த வேண்டும்; அப்படியிருந்தா லதை வேடன்பார்த்து, மந்தர னைப் பூமியில்வைத்துவிட்டு மானண்டைபோவான்; இதற் குள்ளே நானுமையின்கட்டைச்சேதிப்பேன்; பிறகவ்வாமை தண்ணீரி லோடிப்போம்" என, இதைக்கேட்டெல்லா மவ்வாறேசெய்து மந்தரனை விடுவித்தன. பிறகந்த வேடன், 'வாய்த்தவிடும்போ யடுப்புநெருப்புமிழந்தவள்'போலவெட்கி மிகவும்வருத்தமடைந்து கைக்குவராத பெரியலாபத்தையிச்- சித்துக் கைக்குவந்த சிறியலாபத்தை யிழந்தேனே; யார்க்கு மதிகவாசை யதிகநஷ்டம்; கிடைத்தமட்டும் போதுமென்று நினைக்கிறவனே மகாபுருஷனென்றிங்ஙனமெண்ணிக்கொண்டு தன்வீட்டுக்குப்போனவுடனே யந்தக்காகமு மாமையு மானு மெலியு மிகவுஞ்சந்தோஷமடைந்து தங்களிடத்தின் முன் போல வாழ்ந்திருந்தன".

---

## கண்ணப்ப நாயனார் சரித்திரம்

பொத்தப்பிநாட்டிலே, உடுப்பூரிலே, வேடர்களுக்கு அரசனாகிய நாகனென்பவனொருவன் இருந்தான். அவன் மனைவிபெயர் தத்தை. அவ்விருவரும் நெடுங்காலம் புத்திர பாக்கியம்இல்லாமையால் அதிதுக்கங்கொண்டு, குறிஞ்சி நிலத்திற்குக்கடவுளாகிய சுப்பிரமண்ணியசுவாமியுடைய சந்- நிதானத்திலே சேவற்கோழிகளையும் மயில்களையும் விட்டு, அவரை வழிபட்டுவந்தார்கள். சுப்பிரமண்ணியசுவாமி யுடையதிருவருளினாலே தத்தையானவள் கருப்பவதியாகி, ஒருபுத்திரனைப் பெற்றாள். அப்பிள்ளையை நாகன் தன்கை யிலேஎடுத்தபொழுது திண்ணெனவாயிருந்தபடியால், அதற் குத் திண்ணனென்று பெயரிட்டான். அத்திண்ணனார்

வளர்ந்து, உரியபருவத்திலே வில்வித்தைகற்கத்தொடங்கி, அதிலே மகாசமர்த்தராயினர். நாகன் வயோதிகனனபடியால், வேட்டைமுயற்சியிலே இளைத்தவனுகி, தன்னதிகாரத்தைத் தன்புத்திரராகிய திண்ணனருக்குக் கொடுத்தான்.

அந்தத்திண்ணனர் வேட்டைக்கோலங்கொண்டு வேடர்களோடும் வனத்திலேசென்று வேட்டையாடினர். வேட்டையாடும்பொழுது, ஒருபன்றியானது வேடராலே கட்டப்பட்ட வலையறும்படி எழுந்து, மிகுந்தவிசையுடனே ஓடியது. அதைக்கண்ட திண்ணனர் அதைக்கொல்லநினைந்து, அதைத்தொடர்ந்து பிடிக்கத்தக்க விசையுடனே அதுசெல்லும்அடிவழியே சென்ருர். நாணன் காடன் என்கின்ற இரண்டு வேடர்கண்மாத்திரம் அவருக்குப்பின் ஓடினர்கள். அந்தப் பன்றி நெடுந்தூரம் ஓடிப்போய், இளைப்பினலே மலைச்சாரலிலே ஒருமரத்தின்நிழலிலே நின்றது. திண்ணனர் அதைக்கண்டு அதனைச்சமீபித்து, உடைவாளையுருவி அதனை இருதுண்டாகும்படி குத்தினர். நாணனும் காடனும் இறந்துகிடந்த அந்தப்பன்றியைக் கண்டு, திண்ணனரை வியந்து வணங்கி, "நெடுந்தூரம் நடந்துவந்தபடியால் பசி நம்மை மிகவருத்துகின்றது. நாம் இந்தப்பன்றியை நெருப்பிலேகாய்ச்சித்தின்று, தண்ணீர் குடித்துக்கொண்டு, வேட்டைக்காட்டுக்கு மெல்லப்போவோம்" என்ருர்கள். திண்ணனர் அவர்களை நோக்கி, "இவ்வனத்திலே தண்ணீர் எங்கே இருக்கின்றது ?" என்று கேட்க, நாணன், "அந்தத்தேக்க மரத்துக்கு அப்புறம்போனல், மலைப்பக்கத்திலே பொன்முகலியாறு ஓடுகின்றது" என்ருன். அதைக்கேட்ட திண்ணனர், "இந்தப்பன்றியை எடுத்துக்கொண்டு வாருங்கள் ; நாம் அங்கேதானே போவோம்" என்றுசொல்லி, அதை நோக்கி நடந்து, அரைக்காதவழிதூரத்துக்குஅப்பால் இருக்கின்ற திருக்காளத்திமலையைக்கண்டு, நாணனை நோக்கி, "நமக்கு முன்னகத் தோன்றுகின்ற மலைக்குப் போவோம்" என்று சொல்ல, நாணன், "இந்தமலையிலே குடுமித்தேவர் இருக்கிருர். நாம்போனற் கும்பிடலாம்" என்ருன்.

திண்ணனார், "இந்தமலையைக்கண்டு இதை அணுக அணுக என்மேல் ஏற்றப்பட்டபெரியபாரம் குறைகின்றதுபோலும். இனி உண்டாவது யாதோ! அறியேன்" என்றுசொல்லி, அதிதீவிரமாகிய விருப்பத்தோடும் விரைந்துசென்று, பொன்முகலியாற்றை அடைந்து, அதன்கரையிலிருக்கின்ற மரநிழலிலே, கொண்டுவந்தபன்றியை இடுவித்து, காடனைநோக்கி, "தீக்கடைகோல்செய்து நெருப்பை உண்டாக்கு; நாங்கள் இம்மலையிலே ஏறி, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு வந்துசேருவோம்" என்றுசொல்லி, நாணனோடும் அந்தப் பொன்முகலிநதியைக் கடந்து, மலைச்சாரலை அடைந்து, மலையிலே நாணன் முன்னேஏற, தாமும் அளவில்லாதபேராசையோடும் ஏறிச்சென்று, சிவலிங்கப்பெருமான் எழுந்தருளியிருத்தலைக் கண்டார். கண்டமாத்திரத்திலே, பரமசிவனுடைய திருவருட்பார்வையைப் பெற்று, இரும்பானது தரிசனவேதியினாலே உருவம்மாறிப் பொன்மயமானாற்போல முன்னுள்ளகுணங்கள்மாறிச் சிவபெருமானிடத்தில்வைத்த அன்புருவமானார். நெடுங்காலம் பிரிந்திருந்த தன்குழந்தையைக்கண்ட மாதாவைப்போலத் தாழாமல் விரைந்தோடி, தோள்கள் நெருங்கும்படி அக்கடவுளைத்தழுவி, மோந்து முத்தமிட்டார். நெடுநேரம் பெருமூச்சுவிட்டுக்கொண்டு நின்று, சரீரம்முழுதிலும் உரோமாஞ்சங்கொள்ள, இரண்டு கண்ணினின்றும் கண்ணீர் சொரிய, வெயிலிடைப்பட்ட மெழுகுபோல மனங்கசிந்துருக, "இந்தச்சுவாமி அடியேனுக்கு அகப்பட்டது என்ன ஆச்சரியம்!" என்று சொல்லி ஆனந்தங் கொண்டார். "ஐயையோ! சிங்கம் யானை புலி கரடிமுதலிய துட்டமிருகங்கள்சஞ்சரிக்கின்றகாட்டிலே நீர் யாதொரு துணையுமின்றி வேடர்போலத் தனியே இருப்பது ஏது?" என்று சொல்லித் துக்கித்து, தம்முடைய கையில்இருந்தவில்லுக் கீழேவிழுந்ததையும் அறியாதவராகிப் பரவசமடைந்தார். பின் ஒருவாறு தெளிந்து, "இவருடைய முடியிலே நீரைவார்த்துப் பச்சிலையையும் பூவையும் இட்டவர் யாரோ?" என்றார். அப்பொழுது சமீபத்திலேநின்ற நாணன்,

"நான் முற்காலத்திலே உம்முடையபிதாவுடனே வேட்டையாடிக்கொண்டு இம்மலையிலே வந்தபொழுது, ஒருபிராமணன் இவர்முடியிலே நீரைவார்த்து, இலையையும் பூவையும் சூட்டி, உணவை ஊட்டி, சிலவார்த்தைகள்பேசினதைக் கண்டிருக்கின்றேன். இன்றைக்கும் அவனே இப்படிச் செய்தான்போலும்" என்றான். அதைக்கேட்ட திண்ணனார் அந்தச் செய்கைகளே திருக்காளத்தியப்பருக்குப் பிரீதியாகியசெய்கைகளென்று கடைப்பிடித்தார். பின்பு, "ஐயோ! இவருக்கு அமுதுசெய்தற்கு இறைச்சிகொடுப்பார் ஒருவரும் இல்லை. இவர் இங்கே தனியே இருக்கின்றார். இறைச்சி கொண்டுவரும்பொருட்டு இவரைப்பிரியவோ மனமில்லை. இதற்கு யாது செய்வேன்? எப்படியும் இறைச்சி கொண்டு வரவேண்டும்" என்றுசொல்லிக்கொண்டு, சுவாமியைப் பிரிந்து சிறிதுதூரம் போவார். கன்றைவிட்டுப்பிரிகின்ற தலையீற்றுப்பசுப்போல அவரிடத்திற்குத் திரும்பிவருவார். கட்டி அணைத்துக்கொள்வார். மீளப்போவார். சிறிதுதூரம் போய் அத்தியந்தஆசையோடு சுவாமியைத்திரும்பிப் பார்த்து நிற்பார். "சுவாமீ! நீர் உண்பதற்கு மிருதுவாகிய நல்லஇறைச்சியை நானே குற்றமறத்தெரிந்து கொண்டு வருவேன்" என்பார். "நீர் யாதொருதுணையுமின்றி இங்கே தனியேயிருக்கிறபடியால் நான் உம்மைப் பிரியமாட்டேன். உமக்குப் பசிமிகுந்தபடியால் இங்கே நிற்கவுமாட்டேன். ஐயையோ! நான் யாது செய்வேன்?" என்றுசொல்லிக்கொண்டு கண்ணீர் இடைவிடாதுபொழிய நிற்பார். பின்பு ஒருபிரகாரம்போய்வரத்துணிந்து, வில்லை எடுத்துக்கொண்டு, கைபினாலே கும்பிட்டு, சுவாமிசந்நிதானத்தை அருமையாக நீங்கி, மலையினின்றும் இறங்கி, நாணன் பின்னேவர, பிறவிஷயங்களிலே உண்டாகும் ஆசை பரமாணுப்பிரமாணமாயினும் இன்றி, அன்புமயமாகி, பொன்முகலியாற்றைக்கடந்து கரைஏறி, அங்குள்ளசோலையிலே புகுந்தார்.

அதுகண்டு காடன் எதிரேபோய்க் கும்பிட்டு, "நெருப்புக் கடைந்து வைத்திருக்கின்றேன். பன்றியின் அவயவங்களெல்லாவற்றையும் உம்முடைய அடையாளப்படி

பார்த்துக்கொள்ளும். திரும்பிப்போதற்கு வெகுநேரம் சென்றுபோயிற்று. நீர் இவ்வளவுநேரமும் தாழ்த்தது என்னே?" என்றான். நாணன் அதைக்கேட்டு, "இவர் மலையிலே சுவாமியைக்கண்டு அவரைத்தழுவிக்கொண்டு மரப்பொந்தைப் பற்றிவிடாத உடும்பைப்போல அவரை நீங்கமாட்டாதவராய் நின்றார். இங்கேயும் அந்தச் சுவாமி உண்ணுதற்கு இறைச்சிகொண்டு போம்பொருட்டு வந்திருக்கிறார். எங்கள் குலத்தலைமையை விட்டுவிட்டார். அந்தச் சுவாமிவசமாய்விட்டார்" என்றான். உடனே காடன், "திண்ணரே! நீர் என்ன செய்தீர்? என்ன பைத்தியங்கொண்டீர்?" என்று சொல்ல, திண்ணனார் அவன் முகத்தைப் பாராமல், பன்றியை நெருப்பிலே வதக்கி, அதனுடைய இனியதசைகளை அம்பினாலே வெவ்வேறாகக் கிழித்து, அம்பிலேகோத்து நெருப்பிலேகாய்ச்சி, பதமாக வெந்தவுடனே, சுவைபார்க்கும்படி அவைகளைத் தம்முடைய வாயிலே இட்டுப் பல்லினாலே மெல்ல மெல்லப் பலமுறை அதுக்கிப்பார்த்து, மிக இனியனவாகிய இறைச்சிகளெல்லாவற்றையும் தேக்கிலையினாலே தைக்கப்பட்டகல்லையிலே வைத்து, இனியனவல்லாத இறைச்சிகள் எல்லாவற்றையும் புறத்திலே உமிழ்ந்தார். அதைக்கண்டநாணன் காடன் இருவரும், "இவர் மிகப் பைத்தியங்கொண்டிருக்கின்றார். பெறுதற்கரிய இறைச்சியைக்காய்ச்சிப் பல்லினால் அதுக்கி விணாக உமிழுகின்றார். மற்றையிறைச்சியைப் புறத்திலே எறிந்துவிடுகின்றார். தாம் மிகப்பசியுடையராயிருந்தும், அதனை உண்கின்றாரில்லை; எங்களுக்குத் தருகின்றாருமில்லை. இவர் தெய்வப்பைத்தியங்கொண்டிருக்கின்றார். இதனைத்தீர்க்கத்தக்கவழி ஒன்றையும் அறியோம். தேவராட்டியையும் நாகனையும் அழைத்துக்கொண்டுவந்து இதைத் தீர்க்கவேண்டும். வேட்டைக்காட்டிலே நிற்கின்ற ஏவலாளரையும்கொண்டு நாங்கள் போவோம்" என்று நினைத்துக்கொண்டு போனார்கள்.

திண்ணனார் அவ்விருவரும்போனதை அறியாதவராகி, சீக்கிரம் கல்லையிலே மாமிசத்தை வைத்துக்கொண்டு, திரு

மஞ்சனமாட்டும்பொருட்டு ஆற்றில் நீரை வாயினால் முகந்து, பூக்களைக்கொய்து தலைமயிரிலேசெருகி, ஒருகையிலே வில்லையும் அம்பையும் மற்றக்கையிலே இறைச்சி வைத்த தேக்கிலைக்கல்லையையும் எடுத்துக்கொண்டு, "ஐயோ! என்னுயிர்த்துணையாகிய சுவாமி மிகுந்தபசியினால் இளைத்தாரோ?" என்று நினைந்து இரங்கிப் பதைபதைத்து ஏங்கி, தன்குஞ்சுக்கு இரைஅருத்துதற்குத் தாழாதோடுகின்ற பறவைபோல மனோகதியும்பின்னிடஓடிப்போய்க் கடவுளை அடைந்தார். அடைந்து, அவருடைய திருமுடிமேல்இருந்த பூக்களைத் தம்முடையகாற்செருப்பால் மாற்றி, தம்முடைய வாயில்இருக்கின்ற திருமஞ்சனநீரைத் தம்முடையமனசில் உள்ள அன்பைஉமிழ்பவர்போலத் திருமுடியின்மேல் உமிழ்ந்து, தம்முடையதலையில்இருந்தபூக்களை எடுத்துத் திருமுடியின்மேலே சாத்தி, தேக்கிலையிலேபடைத்த இறைச்சியைத் திருமுன்னேவைத்து, "சுவாமீ! கொழுமையாகிய இறைச்சிகளெல்லாவற்றையும் தெரிந்து, அம்பினாலேகோத்து நெருப்பிலே பதத்தோடுகாய்ச்சிப் பல்லினால்அதுக்கி நாவினாலேசுவைபார்த்துப் படைத்தேன். இவ்விறைச்சி மிக நன்றாயிருக்கின்றது. எம்பெருமானே! இதை அமுதுசெய்தருளும்" என்று சொல்லி, உண்பித்தார். பின்பு சூரியன் அஸ்தமனமாயிற்று. திண்ணனார் அவ்விரவிலே துஷ்டமிருகங்கள் சுவாமிக்குத்துன்பஞ்செய்தல்கூடுமென்று அஞ்சி, அம்புதொடுக்கப்பட்ட வில்லைக் கையிலேபிடித்துக்கொண்டு, மறந்துங்கண்ணிமையாமல் சுவாமிக்குப்பக்கத்திலே விழித்துக்கொண்டு நின்றார். அப்படிநின்றதிண்ணனார் வைகறையிலே சுவாமிக்கு இறைச்சிகொண்டுவரும்பொருட்டு, வேட்டையாடுதற்கு மலைச்சாரலுக்குப் போனார். அது நிற்க.

அறிவு அருள் அடக்கம் தவம் சிவபத்திமுதலியவைகளெல்லாம் திரண்டு ஒருவடிவம்எடுத்தாற்போன்றவரும், நல்வினை தீவினைகளால்வரும் ஆக்கக்கேடுகளிலே சமபுத்தி பண்ணுகின்றவரும் யாவரையும்மோகிப்பிக்கவல்ல மகா சௌந்தரியமுள்ளபெண்கள் வலியவந்து தம்மைத்தழுவி

னும் பரமாணுப்பரிமாணமாயினும் சித்தந் திரியாமல் அவா களைத் தாயெனமதிக்கும் மகாமுனிவரும், திருக்காளத்தியப் பரைத் தினந்தோறும் சைவாகமவிதிப்படி அருச்சிப்பவரு மாகிய சிவகோசரியார்என்பவர், பிராமமுகூர்த்தத்திலே எழு ந்துபோய், பொன்முகலியாற்றிலே ஸ்நானம்பண்ணி, சுவா மியை அருச்சிக்கும்பொருட்டுத் திருமஞ்சனமும் பத்திர புஷ்பமும் எடுத்து, சிவநாமத்தை உச்சரித்துக்கொண்டு, சுவாமிசந்நிதானத்திலே போனார். போம்பொழுது, அங்கே வெந்தஇறைச்சியும் எலும்பும் கிடக்கக்கண்டு, நடுநடுங்கி, குதித்துப் பக்கத்திலே ஓடினார். ஓடி நின்று, “தேவாதி தேவரே! தேவரீருடைய சந்நிதானத்தைஅடைதற்கு அஞ் சாத துஷ்டராகிய வேட்டுவப்புலையர்களே இந்தஅநுசிதத் தைச் செய்தார்கள்போலும். அவர்கள் இப்படிச்செய்து போதற்குத் தேவரீர் திருவுளம் இசைந்தீரோ” என்று சொல்லிப் பதறி அழுது விழுந்து புரண்டார். பின்பு, “சுவா மிக்கு அருச்சனைசெய்யாமல் தாழ்த்தலால் பயன் யாது?” என்றுநினைந்து, அங்கேகிடந்தஇறைச்சியையும் எலும்பை யும் கல்லையையும் திருவலகினால்மாற்றி, சம்புரோக்ஷணஞ் செய்து, மீளப் பொன்முகலியாற்றிலே ஸ்நானஞ்செய்து திரும்பிவந்து, வேதமந்திரத்தினாலே சுத்திசெய்து, உருத்தி ரசமகநமகத்தினால் சுவாமிக்கு அபிஷேகம்பண்ணி, பத் திரபுஷ்பங்களால் அருச்சனைசெய்தார். செய்து, திரு முன்னே நின்று, இரண்டுகைகளையும் சிரசின்மேலேகுவி த்து, இரண்டுகண்களினின்றும் ஆனந்தபாஷ்பஞ்சொரிய, திருமேனியெங்கும் மயிர்பொடிப்ப, அக்கினியில் அகப்பட்ட மெழுகுபோல மனம் மிகஉருகி இளக, நாத்தழும்ப, கீத நடையுள்ளதாகிய சாமவேதம் பாடினார். பாடியபின், பல முறை பிரதக்ஷிணஞ்செய்து சாஷ்டாங்கமாகநமஸ்கரித்து, அருமையாகநீங்கிப்போய், தபோவனத்தை அடைந்தார். அது நிற்க.

முன்னே வேட்டையாடுதற்கு மலைச்சாரலிலேசென்ற திண்ணனார் பன்றி மான் கலை மரை கடமை என்னுமிரு கங்களைக்கொன்று, அவைகளினிறைச்சியை முன்போலப்

பக்குவப்படுத்தி, தேக்கிலேயிலேவைத்து, கோற்றேனைப்பிழி ந்து அதனோடுகலந்து, முன்போலத் திருமஞ்சனமும் புஷ்ப முங்கொண்டு, மலேயிலே ஏறி, சுவாமிசந்நிதானத்தை அடை ந்து, முன்போலப் பூசைசெய்து, இறைச்சிக்கல்லேயைத் திரு முன்னேவைத்து, "இந்தஇறைச்சி முன்கொண்டுவந்தது போலன்று. இவை பன்றி மான் கலே மரை கடமை என் கின்ற மிருகங்களின் இறைச்சி. இவைகளே அடியேனும் சுவைத்துப் பார்த்திருக்கின்றேன். தேனும் கலந்திருக்கின் றது. தித்திக்கும்" என்றுசொல்லி, உண்பித்து, அவருக் குப்பக்கத்திலே பிரியாமல் நின்றார். அப்பொழுது முத னேட்போன நாணனும் காடனும் ஆகியஇருவராலும் தன்புத் திரராகிய திண்ணனுடைய செய்கைகளே அறிந்த நாகன் ஊணும்உறக்கமுமின்றித் தேவராட்டியையுங் கொண்டு வந்து, திண்ணனைப் பற்பலதிறத்தினலே வசிக்கவும், அவர் வசமாகாமையைக் கண்டு, சிந்தைநொந்து, "இனி யாது செய்வோம்?" என்று சொல்லிக்கொண்டு, அவரை விட்டுத் திரும்பிப்போய்விட்டான்.

சிவபெருமானோடு ஒற்றுமைப்பட்டு அவ்விறைபணி யின்வழுவாதுநிற்குந்திண்ணனர் பகற்காலத்திலே மிருகங் களேக்கொன்று சுவாமிக்கு இறைச்சியைஊட்டியும், இராக் காலத்திலே நித்திரைசெய்யாமல் சுவாமிக்குஅருகேநின் றும், இப்படித் தொண்டுசெய்துவந்தார். சிவகோசரியா ரும் தினந்தோறும்வந்து, சந்நிதானத்திலே இறைச்சிகிடத் தலேக்கண்டு, இரங்கிச் சுத்திசெய்து, சைவாகமவிதிப்படி அருச்சித்துக்கொண்டு, "இந்தஅநுசிதம்நிகழாமல் அருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்து வந்தார். திருக்காளத் தியப்பர் அந்தச்சிவகோசரியாருடைய மனத்துயரத்தை நீக்கும்பொருட்டு, ஐந்தாநாள் இராத்திரியில் அவருக்குச் சொப்பனத்திலேதோன்றி, "அன்பனே! அவனே வேடு வன்என்று நீ நினேயாதே; அவனுடைய செய்கைகளேச் சொல்வோம்; கேள். அவனுடைய உருவமுழுதும் நம் மேல்வைக்கப்பட்ட அன்புருவமே. அவனுடைய அறிவு முழுதும் நம்மைஅறியும் அறிவே. அவனுடைய செய்கை

களெல்லாம் நமக்கு இதமாகியசெய்கைகளே. நம்முடைய முடியின்மேல் உன்னாலேசாத்தப்பட்டபூக்களை நீக்கும்படி அவன்வைக்கின்றசெருப்படி நம்முடைய குமாரனாகிய சுப்பிரமண்ணியனுடையகாலினும்பார்க்க நமக்கு மிகுந்த ஆனந்தத்தைத் தருகின்றது. அவன் தன்வாயினால் நம்மேல் உமிழுகின்றஜலமானது, அன்புமயமாகிய அவனுடைய தேகமென்னும் கொள்கலத்தினின்றும் ஒழுகுகின்றபடியால், கங்கைமுதலாகிய புண்ணியதீர்த்தங்களைப்பார்க்கினும் நமக்குப் பரிசுத்தமுள்ளதாய் இருக்கின்றது. அவன் தன்னுடைய தலைமயிரிலேசெருகிக்கொண்டுவந்து நமக்குச்சாத்துகின்ற புஷ்பங்கள், அவனுடைய மெய்யன்பானது விரிந்துவிழுதல்போல் விழுதலால், பிரம விஷ்ணுமுதலாகியதேவர்கள் நமக்குச்சாத்தும்புஷ்பங்களும் அவைகளுக்குச் சற்றேனும் சமானமாகாவாம். அவன் நமக்குப்படைக்கின்ற மாமிசம், பதமாக வெந்திருக்கின்றதோ என்று அன்பினால் உருகி இளகிய மனசினோடும் மென்று சுவைபார்த்துப் படைக்கப்பட்டபடியால், வேதவிதிப்படி யாகம்செய்கின்றவர்கள் தரும் அவியிலும்பார்க்க நமக்கு அதிகமதுரமாயிருக்கின்றது. அவன் நம்முடையசந்நிதானத்தில் நின்றுசொல்லும்சொற்கள் நிஷ்களங்கமாகிய அன்பினோடும் நம்மையன்றி மற்றொருவரையும் அறியாது வெளிப்படுதலால் வேதங்களும் மகாமுனிவர்கள்மகிழ்ந்துசெய்கின்ற ஸ்தோத்திரங்களும் ஆகிய எல்லாவற்றிலும்பார்க்க நமக்கு மிக இனியனவாயிருக்கின்றன. அவனுடைய அன்பினால் ஆகிய்செய்கைகளை உனக்குக் காட்டுவோம்; நீ நாளைக்கு நமக்குப்பிறபக்கத்திலே ஒளித்திருந்து பார்" என்று சொல்லி மறைந்தருளினார். சிவகோசரியார் சொப்பனாவத்தையை நீங்கிச் சாக்கிராவத்தையையடைந்து, பரமசிவன் தமக்கு அருளிச்செய்த திருவார்த்தைகளை நினைந்துநினைந்து, "அறியாமையேநிறைந்துள்ள இழிவாகிய வேடுவர்குலத்திலேபிறந்தஅவருக்கு வேதாகமசாஸ்திரங்களிலே மகாபாண்டித்தியமுடையமகாமுனிவர்கள் தேவர்களிடத்திலும் காணப்படாத உயர்வொப்பில்லாத இவ்வளவுபேரன்புவந்தது, ஐயையோ! எவ்வளவுஅருமைஅருமை?"

என்றுஆச்சரியமும், "இப்படிப்பட்ட பேரன்பர்செய்த அன்பின்செய்கைகளைப் புழுத்தநாயினும்கடையனாகியபாவியேன் அநுசிதம் என்று நினைந்தேனே! ஐயையோ! இது என்னகொடுமை?" என்று அச்சமும் அடைந்து, வைகறையிலேபோய்ப் பொன்முகலியாற்றிலே ஸ்நானம்பண்ணி மலையில் ஏறி, முன்போலச் சுவாமியை அருச்சித்து, அவருக்குப் பிற்பக்கத்திலே ஒளித்திருந்தார்.

சிவகோசரியார்வருதற்குமுன்னே வேட்டையாடுதற்குச் சென்ற திண்ணனார் வேட்டையாடி, இறைச்சியும் திருமஞ்சனமும் புஷ்பமும் முன்போல அமைத்துக்கொண்டு, அதிசீக்கிரந் திரும்பினார். திரும்பி வரும்பொழுது, பலபல துர்ச்சகுனங்களைக்கண்டு, "இந்தச்சகுனங்களெல்லாம் உதிரங் காட்டுகின்றன. ஆ! கெட்டேன்! என்கண்மணிபோன்ற சுவாமிக்கு என்னஅபாயம் சம்பவித்ததோ! அறியேனே" என்று மனங்கலங்கி, அதிசீக்கிரம் நடந்தார். அடியார்களுடைய பத்திவலையில்அகப்படுகின்ற அருட்கடலாகியபரமசிவன் திண்ணனாருடைய அன்புமுழுதையும் சிவகோசரியாருக்குக் காட்டும்பொருட்டுத் திருவுளங்கொண்டு, தம்முடைய வலக்கண்ணினின்றும் இரத்தம்சொரியப்பண்ணினார். திண்ணனார் தூரத்திலேகண்டு விரைந்தோடிவந்தார். வந்தவுடனே, இரத்தஞ்சொரிதலைக் கண்டார். காண்டலும், வாயிலுள்ள திருமஞ்சனம்சிந்த, கையில் இருந்த இறைச்சிசிதற, அம்பும் வில்லும்விழ, தலைமயிரிலே செருகப்பட்ட புஷ்பங்கள் அலைந்துசோர, ஆட்டுகின்றகயிறுஅற்றபொழுது விழ்கின்றநாடகப்பாவைபோலச் சீக்கிரம் பதைபதைத்து நிலத்திலே விழுந்தார். விழுந்தவர் எழுந்துபோய், இரத்தத்தைப் பலமுறை கையினாலே துடைக்க, அது காலுதல்தவிராமையைக் கண்டு, அதற்கு இன்னது செய்வோம்என்று அறியாதவராகி, பெருமூச்செறிந்து, திரும்பிப்போய் விழுந்தார். நெடும்பொழுது உள்ளுயிர்த்தலின்றி இறந்தவர்கள்போலக் கிடந்தார். பின் ஒருவாறு தெளிந்து, "இப்படிச்செய்தவர்கள் யாவர்?" என்று சொல்லிக்கொண்டு எழுந்தார். எங்கும் பார்த்தார். வில்லையெடுத்து அம்புகளைத் தெரிந்து

கொண்டு, " என்னுடையசுவாமிக்கு இத்தீங்குவந்தது எனக்குப்பகைவர்களாகிய வேடுவர்களாலோ? இந்தவனத்திற் சஞ்சரிக்கின்ற துஷ்டமிருகங்களாலோ? யாதென்று தெரியவில்லையே" என்று சொல்லி, மலைப்பக்கங்களிலே நெடுந்தூரமட்டும் தேடிப்போனார். வேடர்களையேனும் விலங்குகளையேனும் காணாதவராகி, திரும்பிவந்து, குறைவில்லாத துன்பத்தினாலே மனம் விழுங்கப்பட்டு, சுவாமியைக் கட்டிக்கொண்டு, இடியேறுண்ட சிங்கவேறுபோல வாய்விட்டுக் கண்ணீர் சொரிய அழுதார். "என்னுயிரினும்சிறந்தவரும் அடைந்தவர்கள் அன்பினாலே பிரியமாட்டாதவரும் ஆகிய சுவாமிக்கு எப்படி இந்தத் துன்பம் சம்பவித்ததோ! இதைத் தீர்ப்பதற்கு மருந்தொன்றை அறியேனே! ஐயையோ! இதற்கு என்னசெய்வேன்?" என்றார். "இந்த உதிரம் என்னசெய்தால் நிற்குமோ? இந்தத்தீங்கைச்செய்தவர்களைக் காணேன். வேடர்கள் அம்பினாலாகியபுண்ணைத் தீர்க்கின்ற பச்சிலை மருந்துகளை மலையடிவாரத்திலே பிடுங்கிக்கொண்டு வருவேன்" என்று சொல்லிக்கொண்டு போனார். தன்னினத்தைப்பிரிந்துவந்த இடபம்போலச் சுவாமியைப்பிரிந்துவந்ததினால் வெருட்கொண்டு, வனங்களெங்குந்திரிந்து, பலவகையாகிய பச்சிலைகளைப் பிடுங்கிக்கொண்டு, சுவாமிமேல் வைத்த மனசிலும்பார்க்க விரைந்துவந்து, அம் மருந்துகளைப் பிழிந்து அவர்கண்ணிலே வார்த்தார். அதினால் அக்கண்ணிலிரத்தம் தடைப்படாமையைக் கண்டு, ஆவிசோர்ந்து, "இனிநானிதற்கு என்ன செய்வேன்?" என்று ஆலோசித்துக்கொண்டு நின்றார். நிற்க, 'ஊனுக்கு ஊனிடல் வேண்டும்" என்னும் பழமொழி அவருடைய தியானத்திலே வந்தது. உடனே, "இனி என்னுடையகண்ணை அம்பினாலே இடந்து அப்பினால் சுவாமியுடைய கண்ணினின்றுபாயும் இரத்தம தடைப்படும்" என்று நிச்சயித்துக்கொண்டு, மனமகிழ்ச்சியோடும் திருமுன்னே இருந்து, அம்பையெடுத்துத் தம்முடையகண்ணைத்தோண்டிச் சுவாமியுடையகண்ணிலே அப்பினார். அப்பினமாத்திரத்திலே இரத்தம்தடைப்பட்டதைக் கண்டார். உடனே அடங்குதற்கரிய சந்தோஷ

மாகிய கடலிலே அமிழ்ந்து குதித்துப்பாய்ந்தார். மலை போலப்பருத்தபுயங்களிலே கைகளினாலேகொட்டி ஆரவாரித்தார்; கூத்தாடினார். "நான் செய்தசெய்கை நன்று நன்று" என்றுசொல்லி வியந்து, அத்தியந்தஆனந்தத்தினாலே உன்மத்தர்போலாயினார். இப்படிச் சந்தோஷசாகரத்திலே உலாவும்பொழுது, திருக்காளத்தியீசுரர் அந்தத்திண்ணனாருடைய பேரன்பைச் சிவகோசரியாருக்குப் பின்னுங் காட்டுதற்குத் திருவுளங்கொண்டு, தம்முடைய மற்றையிடக் கண்ணிலும் இரத்தஞ்சொரியப்பண்ணினார். அது திண்ணனாருடைய அளவில்லாத சந்தோஷசாகரத்தைஉறிஞ்சியது. அக்கினிநிரயத்துள்ளே விழுந்து நெடுங்காலம் துன்பமுற்று அதனைநீங்கிச் சுவர்க்கத்தை அடைந்து இன்பமுற்றோனொருவன் பின்னும் அந்நிரயத்திலே வீழ்ந்தாற்போல, திண்ணனார் உவகைமாறி, கரையில்லாத துன்பக்கடலிலே அழுந்தி ஏங்கி, பின்னர் ஒருவாறு தெளிந்து, "இதற்கு நான் அஞ்சேன்; மருந்து கைகண்டுகொண்டேன். இன்னும் ஒரு கண்ணிருக்கின்றதே! அதைத்தோண்டி அப்பி இந்நோயைத் தீர்ப்பேன்" என்று துணிந்து, தம்முடைய கண்ணைத் தோண்டியபொழுது சுவாமியுடைய கண் இவ்விடத்திலிருக்கின்றது என்று தெரியும்பொருட்டு, ஒரு செருப்புக்காலை அவர்கண்ணின்அருகிலே ஊன்றிக்கொண்டு, பின்னே மனசிலே பூர்த்தியாகியவிருப்பத்தோடும் தம்முடையகண்ணைத் தோண்டும்படி அம்பை வைத்தார். தயாநிதியாகிய கடவுள் அதைச் சகிக்கலாற்றாதவராகி, வேதாகமங்கள்தோன்றிய தம்முடைய அருமைத்திருவாய்மலரைத் திறந்து, "நில்லு கண்ணப்ப! நில்லுகண்ணப்ப! என்னன்புடைத்தோன்றல்! நில்லுகண்ணப்ப!" என்று அருளிச்செய்து, அவருடைய கண்ணைத்தோண்டும்கையைத் தமது வியத்திஸ்தானமாகிய இலிங்கத்திற்றோன்றிய திருக்கரத்தினாலே பிடித்துக்கொண்டார். உடனே பிரமாதிதேவர்கள்சமஸ்தரும் வேதகோஷத்தோடும் நிலம்புதையக் கற்பகப்பூமாரி பெய்தார்கள். மகாஞானியாகிய சிவகோசரியார் இந்தச்சமாசாரம் முழுதையும் கண்டு, அத்தியந்த ஆச்சரியமடைந்து, சுவாமியை வணங்

ஞர். அற்றைநாள்முதலாகப் பெரியோர்கள் சுவாமி சொல்லியபடியே அவருக்குக் கண்ணப்பர் என்னும்பெயரையே வழங்குகிருர்கள். நெடுங்காலமாக உஷ்ணமாகிய அக்கினிமத்தியில்நின்று ஐம்புலன்வழியேசெல்லாதபடி மனசை ஒடுக்கி அருந்தவஞ்செய்கின்றவர்களுக்கும்கிட்டாத பரம்பொருளாகியகடவுள், ஆறுநாளுக்குள்ளேபெருகிய அன்பு மேலீட்டினுலே, தம்முடைய திருநயனத்தில் இரத்தத்தைக் கண்டு அஞ்சித் தம்முடையகண்ணை இடந்து அத்திருநயனத்தில் அப்பும் திண்ணனுருடையகையைத் தமது அருமைத் திருக்கரத்தினுலே பிடித்துக்கொண்டு, "நிஷ்களங்கபத்தியையுடைய கண்ணப்பா! நீ நமக்கு வலப்பக்கத்திலே நில்" என்று திருவருள்புரிந்தார். இதைப்பார்க்கிலும் பெறவேண்டியபெரும்பேறு யாது?

---

## தெரிந்து வினைசெயல்

யுதிஷ்டிரர், பீஷ்மரைப்பார்த்து, "பரதர்களிற்சிறந்தவரே! வருவதை அறிவதும் அப்படியே ஸமயத்திற்குத்தக்கபடி உண்டாவதுமான புத்தியானது எல்லாவிஷயத்திலும் மிகச் சிறந்ததென்பதும் தாமஸஸ்வபாவத்தைத்தரும்புத்தியானது நாசத்தைச்செய்யுமென்பதும் உம்மால்சொல்லப்பட்டன. பரதச்ரேஷ்டரே! ஆகையால், பகைவர்களால் துன்பமடையும்வேந்தன் அவிவேகத்தையடையாமலிருக்கத்தக்க உயர்ந்தபுத்தியை உம்மிடமிருந்து கேட்கவிரும்புகிறேன். குருக்களில்மிகச்சிறந்தவரே! அறம்பொருள்களில்ஸமர்த்தரும் அறிவிற்சிறந்தவரும் எல்லாச்சாஸ்திரங்களிலும்வல்லவருமான உம்மிடம் வினவுகிறேன். நீர் அதனை எனக்கு உரைக்கத்தக்கவர். பலபகைவர்களால் சூழப்பட்டஅரசன் எவ்விதம் ஆபத்திலிருந்துவிடுபடுவனே அஃதனைத்தையுமே விதிப்படி நான் கேட்கவிரும்புகிறேன். ஸங்கடத்திலிருக்கும் அரசன் ஒருவனையே முன்துன்பப்படுத்தப்பட்ட விரோதிகளான பலபகைவர்களும் வேருடன்பெயர்க்க முயல்வார்கள். ஆகையால், நாலுபக்கத்திலுமுள்ள பெரியபலசாலிகளால்

விழுங்கக்கருதப்படும்பலமில்லாதவொருவன் ஸஹாயமின்றி எவ்விதம் இருக்கக்கூடியதாகும்? பரதஸ்ரேஷ்டரே! மித்திரனையும் சத்துருவையும் எவ்விதம் அடையவேண்டும்? சத்துருவுக்கும் மித்திரனுக்கும்நடுவில் எவ்விதம் நடக்க வேண்டும்? அரசரே! மித்திரலக்ஷணமுள்ளவனாக அறியப்பட்டவனிடத்திலும் மித்திரபாவத்தையடைந்தவிரோதியிடத்திலும் மனிதன் எவ்விதஞ்செய்யவேண்டும்? எதனைச் செய்தால் நன்மையடைவான்? எவனுடன் யுத்தத்தைச் செய்யவேண்டும்? எவனுடன் ஸந்தியைச்செய்துகொள்ள வேண்டும்? பலமுள்ளவனாயிருந்தாலும் சத்துருக்களின்நடுவிலிருப்பவன் எவ்விதமிருக்கவேண்டும்? அரசரே! இதுதான் எல்லாக்கார்யங்களையும்விட உத்தமமானகாரியம். இந்திரியங்களைஜயித்தவரும் ஸத்தியஸந்தரும் பிதாமஹருமான பீஷ்மரைவிட இதனைச்சொல்லத்தக்கவர் ஒருவருமில்லை. கேட்பவனும் மிகவருமை. ஓ! மிக்கபாக்யமுள்ளவரே! ஆதலால், இவையாவற்றையும் நீர் எனக்கு உபதேசிக்க வேண்டும்” என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினார்.

“யுதிஷ்டிர! உன்னால் கேட்கப்பட்ட இந்தக்கேள்வியானது நற்குணங்களைஉண்டுபண்ணத்தக்கது. குழந்தாய்! பாரத! ஆபத்துக்காலங்களுக்குரியரஹஸ்யத்தை முழுமையும் என்னிடமிருந்து கேள். விரோதியாயிருப்பவன் மித்ரபாவத்தையடைவான். மித்திரனும் மிகக் குற்றமுள்ளவனாவான். மனிதர்களின் ஸாமர்த்யமென்னும்உபாயத்தால் கார்யங்களின்ஸ்திதி எப்பொழுதும் ஒரேவிதமாயிருப்பதன்று. ஆகையால், நம்பவும்வேண்டும்; யுத்தஞ்செய்யவும்வேண்டும். தேசத்தையும் காலத்தையும் அறிந்துகொண்டு செய்யத்தக்கதும் செய்யத்தகாததுமாகிய இவைகளின்நிச்சயத்தையும் நன்றாகஅறிந்துகொண்டு நன்மையை விரும்பும் அறிவுள்ளமனிதர்களுடன் எப்பொழுதும் ஸந்தி செய்துகொள்ளவேண்டும். ஓ! பாரத! உயிரைக்காத்துக் கொள்ளுதற்காகப் பகைவர்களுடனும் ஸந்திசெய்துகொள்ள வேண்டும். “அறிவில்லாதஎவன் பகைவர்களானமனிதர்களுடன்கூட எப்பொழுதும் ஸந்தியைச்செய்யாதவனாயிருக்கிற

ஞே அவன் ஒருகார்யத்தையும் பயன்களையும் அடையமாட்டான். எவன் கார்யத்தின்உபாயத்தைத்தெரிந்துகொண்டு பகைவனுடனும் ஸந்தியைச் செய்துகொள்ளுகிருேனே அவன் மிகப்பெரியபயனை அடைகிருன். இவ்விஷயத்திலும் ஓர் ஆலமரத்திலுள்ளபூனைக்கும்எலிக்கும்நடந்த ஸம்பாஷணையான பழையஇவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிருர்கள்.

ஒருபெரியகாட்டில் மிகப்பெரியதோர்ஆலமரமிருந்தது. அந்தமரமானது கொடிக்கூட்டங்களால்படர்ந்துசுற்றப்பட்டதும் பலவிதப்பறவைக்கூட்டங்களுடன்கூடியதும் கவைகளுள்ளதும் மேகம்போன்றதும் குளிர்ந்தநிழலுள்ளதும் அழகானதும் துஷ்டமிருகங்களுடன்கூடியதும் நான்குபுறத்திலும்படர்ந்துவளர்ந்ததுமாயிருந்தது. மிக்கஅறிவுள்ள பலிதமென்னும் ஓர்எலியானது அந்தஆலமரத்தின் அடியைஅடைந்து நூறுதுவாரமுள்ளவளையைச்செய்துகொண்டு வஸித்துக்கொண்டிருந்தது. அப்பொழுது, எல்லாப்பிராணிகளையும்கொல்லுவதான லோமசமென்னும்ஒருபூனையும் அந்தமரத்தின்கிளையையடைந்து ஸுகமாகவஸித்துவந்தது. அரண்யத்தில்குடிகொண்ட ஒருசண்டாளன், ஒவ்வொருநாளும் ஸூர்யன்அஸ்தமித்தபின் அவ்விடத்திற்குவந்து மிருகமுதலியவற்றைப்பிடித்தற்குரியபொறியைவைத்துவந்தான். அவன் நரம்புகளால்செய்யப்பட்ட சுருக்குக்கயிறுகளை அவ்விடத்தில் வைக்குமுறைப்படி வைத்துவிட்டு வீடுசென்று ஸுகமாக உறங்குவான்; இரவுவிடிந்ததும் வருவான். அதில் ஒவ்வொருநாளும் இரவில் பலவிதமிருகங்கள் கட்டுப்பட்டிருக்கும். ஒருஸமயம் அப்பூனையானது அந்தஎந்திரத்திற்சென்று உறுதியாகக்கட்டப்பட்டது. அதிகபலமுள்ளதும் சத்துருவும் எப்பொழுதுந்தன்னைக்கொல்லவருவதுமான அந்தப்பூனைகட்டுப்பட்டவுடன், அந்தஸமயத்தை அறிந்துகொண்டு பலிதமென்னும்எலியானது அச்சமசிறிதுமின்றி உலாவத்தொடங்கிற்று. அந்த வனத்திற்சென்று பயமின்றி ஸஞ்சரிப்பதும் ஆகாரத்தைத்தேடுவதுமான அந்தஎலியானது சடிதியில் எந்திரத்திற்குள்ளிருக்கும்மாம்ஸத்தைக்கண்டது. அஃது அந்த எந்திரத்திலேறி அதனுள்கட்டப்பட்ட

தன்விரோதியான அந்தப்பூனைக்குமேலே உயரத்திலிருந்து மனத்தில் களிப்புடன் எந்திரத்தினுள்ளிருக்கும்இறைச்சியைத் தின்னத்தொடங்கிற்று. மாம்ஸத்திற்சென்ற அந்த எலியானது ஒருஸமயத்தில்பார்க்கையில் நாணற்பூப்போன்றதும் பூமியிலுள்ளவளையில்படுத்திருப்பதும் சிவந்தகண்ணுள்ளதும் சாபல்யமுள்ளதும் ஹரிகமென்றுபெயருள்ளதும் பயங்கரமும் சத்ருவுமான ஒருகீரிப்பிள்ளை வருவதைக் கண்டது. அந்தக்கீரிப்பிள்ளையானது அந்தஎலியின்வாடையைக்கண்டு வேகத்துடன் வந்தது. அந்தக்கீரிப்பிள்ளையானது ஆகாரத்திற்காக வாயைநக்கிக்கொண்டும் முகத்தை உயரத்தூக்கிக்கொண்டும் பூமியில் நின்றது. கிளையிலிருப்பதும் பொந்தில்குடிகொண்டதும் வளைந்தமூக்குள்ளதும் அருகில்செல்லமுடியாததும் சந்திரகனென்றுபெயருள்ளதுமானகோட்டானாகிய வேறொருசத்துருவையும் எலிகண்டது. அவ்விதம் கீரிப்பிள்ளையும் கோட்டானுமாகிய இவைகளின் பார்வையைஅடைந்ததும் பெரியபயங்கொண்டதுமான அந்த எலிக்கு, மிக்ககஷ்டமான இவ்வாபத்தில் மரணங்கிட்டி நான்குபுறத்திலும் பயமுண்டாயிருக்கும்பொழுது, ‘புத்தியுள்ளவன் எவ்விதம்செய்யவேண்டும்’ என்னும்ஆலோசனை உண்டாயிற்று. அப்படி நாற்புறத்திலும் தகையப்பட்டதும் எல்லாவிடத்திலும்பயத்தால்ஒடுங்கினதுமான அந்தஎலி அச்சத்தால் நடுக்கமுற்றுப் பெரிய ஆலோசனையைச் செய்யத்தொடங்கிற்று.

‘உயிரானது துன்பங்களால் அனேகமாக நாசமடையத்தக்கதும் ஸந்தேஹிக்கக்கூடியதுமானது. இதோ நான்குபுறத்திலும் அவ்வித ஸந்தேஹமிருக்கிறது. ஆகையால், ஆபத்துண்டாயிற்று. வேகமாகப் பூமியிற்சென்றால் கீரிப்பிள்ளை என்னைப்பிடிக்கும்; இங்கிருந்தால் கோட்டானும், கயிறுகளறுபட்டால் பூனையும், என்னைப்பிடிக்கும். அறிவிற்சிறந்த என்னைப்போன்றவன் அவிவேகத்தையடைவது நியாயமேயன்று. மூச்சு அடங்குகிறவரையில் ஜீவிக்கும் விஷயத்தில் முயற்சியைச்செய்வேன். புத்தியுள்ளவனும் நீதிசாஸ்திரங்களில் ஸமர்த்தனுமான அறிவுள்ளவன் குரூர

மும் பெரிதுமான ஆபத்தையடைந்தும் முழுகமாட்டானன்றோ ? இப்பொழுது இந்த ஆபத்தில் பூனையைவிட வேறுகதியைக்காணேன். சத்துருவான இந்தப்பூனையானது ஸங்கடத்திலிருக்கிறது. இதற்கும் என்னால் செய்யவேண்டியது பெரிதாயிருக்கிறது. மூன்றுபகைவர்களால் கொல்ல விரும்பப்படும்நான் இப்பொழுது எவ்விதம் உயிரைரக்ஷிக்கவிரும்புவேன் ? உயிருக்குவேண்டி இந்தப்பூனையையே மித்திரனாக அடுக்கிறேன். இந்தச்சத்துருக்கூட்டத்தை அறிவைமுன்னிட்டு எவ்விதம்வஞ்சிக்கத்தகுமோ அவ்விதம் நீதிசாஸ்திரத்தை ஆதாரமாகக்கொண்டு இந்தப்பூனைக்கு ஹிதத்தைச்சொல்லுவேன். எனக்கு அதிக விரோதியான இந்தப்பூனையானது மிகவும் துன்பத்தை அடைந்திருக்கிறது. அறிவில்லாதவனுடன்சேர்ந்து அவனுக்குவேண்டிய பொருளை அறிவிக்கமுடியுமானால் ஒருஸமயம் துன்பத்தை அடைந்திருப்பதால் அவன் நம்முடன் ஸந்தியைச்செய்து கொள்ளுவான். ஸங்கடகாலத்தில், உயிரைவிரும்பும்பலசாலியானவன் மிகத்தாழ்ந்தசத்துருவையும் அடுக்கலாமென்று ஆசார்யர்கள் கூறுகிறார்கள். சத்துருவாயிருந்தாலும் அறிவுள்ளவன் மிகச்சிறந்தவனாவான். மித்திரனாயினும் பண்டிதனல்லாதவன் சிறந்தவனல்லன். பகையான பூனையிடமன்றோ உயிர் நிலைபெற்றிருக்கிறது. ஆகையால், தன்னைக் காப்பதற்குரியகாரணத்தை இதற்கு உபதேசிப்பேன். சத்துருவாயிருந்தாலும் இந்தப்பூனை இப்பொழுது என்னுடைய சேர்க்கையால் அறிவுள்ளதாகும்' என்று இவ்விதம் எலியானது சத்துருவின்நடையைப்பற்றி ஆலோசித்தது. பிறகு கார்யங்களின் வழியின் உண்மையை அறிந்ததும் ஸந்தியையும் விக்ரஹத்தையும் ஸமயத்தையும் அறிந்ததுமான எலியானது பூனையைநோக்கி இனிமையாகப் பின்வரும்வசனத்தைச் சொல்லத்தொடங்கிற்று.

' பூனையே! ஸ்நேஹத்தால் உன்னைநோக்கிச் சொல்லுகிறேன். நீ உயிரோடிருக்கிறாயா ? நீ ஜீவித்திருப்பதைத்தான் நான் விரும்புகிறேன். க்ஷேமமென்பது நம்மிருவர்களுக்கும் பொதுவன்றோ ? அழகுள்ளவனே! உனக்குப் பயம் வேண்

டாம்; முன்போல் ஜீவித்திருப்பாய்; நான் உன்னை ஆபத்திலி ருந்து விடுவிக்கிறேன். உன்னிமித்தம் உயிரையும் இழப் பேன். இவ்விஷயத்தில் ஓர் உபாயமிருக்கிறது. அஃது என க்கு நல்லதென்று தோன்றுகிறது. நீ விடுதலை அடையக்கூடி யதும் நானும்க்ஷேமத்தை அடையக்கூடியதுமான ஓர்உபாய மானது எனக்காகவும் உனக்காகவும் என்புத்தியில்விசாரித் து என்னால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. க்ஷேமமென் பது நம்மிருவர்களுக்கும் பொதுவன்றோ? இதோ கெட்ட எண்ணத்துடனிருக்கும் கீரிப்பிள்ளையும் கோட்டானும் பயப் படுத்தத்தொடங்கவில்லை. பூனையே! ஆகையால், இப்பொ ழுது உனக்கு க்ஷேமம். இதோ மரத்தின்கிளையின் நுனியி லிருப்பதும் பாபியுமான கோட்டான் கத்திக்கொண்டு சஞ்ச லமானகண்ணுடன் என்னைப்பார்க்கிறது. அதைக்கண்டு நான் மிகவும் நடுக்கமடைகிறேன். ஸ்நேஹமானது ஸாது க்களுக்கு ஏழுசொற்களாலுண்டாகிறது. ஆகையால், அவ் விதம் பண்டிதனானநீ எனக்கு ஸ்நேஹிதனாகிறாய். உனக்கு ஸஹாயஞ்செய்கிறேன். உன் உயிருக்குப்பயமில்லை. பூனையே! நானில்லாமல் நீ கயிற்றைஅறுக்கச் சக்தியுள்ளவனல்லன். என்னை நீ துன்பப்படுத்தாமலிருந்தால் உன்னுடைய கயிறு களை நான் அறுத்துவிடுகிறேன். நீ மரத்தின் நுனியை அடைந்தவன். நானோ மரத்தின் அடியை அடைந்தவன். நாம் இருவரும் இந்தமரத்தில் வெகுகாலமாக வஸிக்கிறோ மென்பது உனக்கும் தெரிந்ததே. ஒருவன் மற்றொருவனி டத்தில் நம்பிக்கையுள்ளவனும் அந்தமற்றொருவன் அந்த ஒருவனிடத்தில் நம்பிக்கையில்லாதவனுமாயிருந்தால், அந்த இருவர்களையும் அறிவுடையோர்கள் கொண்டாடுகிறார்களில் லை. அவர்கள் எப்பொழுதும் பயந்தமனமுள்ளவர்களாயிருப் பார்கள். ஆகையால், நம்மிருவர்களுக்கும் அன்பு வளரட் டும். எப்பொழுதும் ஸ்நேஹமிருக்கட்டும். இவ்வுலகில் காலந்தவறிச்செய்யப்படும்காரியத்தைப் பண்டிதர்கள் கொ ண்டாடுகிறதில்லை. அந்தவிஷயத்தில் காரியத்திற்குத்தக்க உண்மையான இந்தயுக்தியைப்பார். நீ உயிருடனிருப்பதை நான் விரும்புகிறேன். நான் உயிருடனிருப்பதை நீ விரும்

புகிறுய். ஒருவன் கட்டையைக்கொண்டு மிக்க ஆழமான பெரிய நதியைக்கடக்கிறுன். அவன் அக்கட்டையைக்கடக்கச்செய்கிறுன். கட்டையும் அவனைக் கடக்கும்படி செய்கிறது. நம்மிருவர்களுடைய காரியங்களின் சேர்க்கையும் அவ்விதம் மிகப்பெரிதாயிருக்கிறது. நான் உன்னைத் துன்பத்திலிருந்து விடுவிப்பேன். நீயும் என்னைவிடுவிப்பாய்' என்றுசொல்லிற்று. இவ்விதம் பலிதமென்னும் எலியானது இரண்டுபேர்களுக்கும் ஹிதமுள்ளதும் யுக்தியுள்ளதும் அங்கீகரிக்கத் தக்கதுமான அவ்விஷயத்தைச் சொல்லிவிட்டு ஸமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது.

பிறகு, சத்துருவான அந்தஎலியின் நன்மொழியைக் கேட்டு ஸாமர்த்தியமுள்ள பூனையானது அங்கீகரிக்கத்தக்க பொருளுள்ளதும் யுக்தியுள்ளதுமான வசனத்தைச் சொல்லத்தொடங்கிற்று. புத்தியுள்ளதும் பேசுந்திறமையுள்ளதுமான அந்தப் பூனையானது தன்னுடைய கஷ்டதசையைக் கண்டு அந்த எலியின்வசனத்தை அனுசரித்துக்கொண்டு நன்மொழியால் அதனை மரியாதைசெய்தது. பிறகு, கூர்மையான நுனிப்பற்களுள்ளதும் வைடூர்யமணிபோன்றகண்களுள்ளதுமான லோமசமென்னும் அந்தப் பூனையானது எலியை மெல்ல நிமிர்ந்துபார்த்துச் சொல்லுகின்றது. 'அழகுள்ளவனே! ஸந்தோஷப்படுகிறேன். என்னை ஜீவிக்கச் செய்ய விரும்பும் உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். அறிவாயாகில் க்ஷேமத்தைச் செய்யவேண்டும். சிந்தித்துக்கொண்டிருக்கவேண்டாம். நானே மிகவும் துன்பமுள்ளவன். நீ என்னைவிடத் துன்பமுள்ளவன். துன்பமுள்ள இருவர்களும் ஸந்திசெய்துகொள்ளவேண்டும்; தாமதிக்கவேண்டாம். ஸமயத்திற்குத் தக்கது எதுவோ அதைச்செய். நம்மிருவர்களின் காரியமும் ஸித்திக்கட்டும். நான் கஷ்டத்திலிருந்து விடுபட்டேனுகில் உன்னுடைய உபகாரம் பயனற்றதாகாது. உன்னிடத்தில் கௌரவத்தை வைத்தவனுகிறேன்; பக்தனுகிறேன்; சிஷ்யனுகிறேன்; உனக்கு ஹிதத்தைச்செய்கிறவனுகிறேன்; அப்படியே உன்கட்டளையிலிருக்கிறவனுமாகிறேன்; உன்னைச் சரணமடைந்தேன்'

என்றுசொல்லிற்று. இவ்விதஞ்சொல்லியதைக்கேட்டு, காரியங்களை அறிந்ததான பலிதமானது தன்வசமாக வந்த பூனையைநோக்கி நல்லபொருளுள்ளதும் ஹிதமுள்ளதுமான இவ்வசனத்தைச் சொல்லத்தொடங்கிற்று.

'நீ சொல்லுகிறது உத்தமமானது. இஃது உன்போன்றவனிடம் ஆச்சரியமன்று. எனதுநன்மைக்காக ஏற்படுத்தப்பட்டவழியை என்னிடமிருந்து கேள். நான் உன்னிடம் வந்து சேருகிறேன். கீரிப்பிள்ளையிடமிருந்து எனக்குப் பெரியபயமிருக்கிறது. என்னை நீ ரக்ஷிக்கவேண்டும்; கொல்லக்கூடாது. உன்னைரக்ஷிப்பதில் நான் சக்தியுள்ளவனுயிருக்கிறேன். கோட்டானிடமிருந்தும் நீ என்னைக்காக்கவேண்டும். அல்பமான அது என்னைத்தின்னவிரும்புகிறது. நண்பனே! உன்னுடைய கயிறுகளை நான் அறுத்துவிடுகிறேன். உண்மையாக உனக்கு உறுதிமொழிசொல்லுகிறேன்' என்று சொல்லிற்று. யுக்தியுள்ளதும் பொருத்தமுள்ளதும் நல்ல பொருளுள்ளதுமான அந்தஎலியின் வசனத்தைக்கேட்டு லோமசமானது ஸந்தோஷத்துடன் நிமிர்ந்துபார்த்துப் பலிதத்தை நல்வரவுவினவிப் பூஜித்தது. தைரியமுள்ள அந்தப் பூனையானது மித்திரத்தன்மையிலிருக்கும் பலிதமென்னும் அந்தஎலியை நன்குபூஜித்தபின் ஆலோசித்துக்கொண்டு பிரீதியுடன் வேகமாகவே சொல்லத்தொடங்கிற்று. 'நண்பனே! வேகமாக வா. உனக்கு க்ஷேமம். நீ என்னுடைய உயிருக்குச் சமமானநண்பன். அறிவிற்சிறந்தவனே! உன்னுடைய அனுக்ரஹத்தாலன்றோ பிரியமான என்உயிரை அடையப்போகிறேன். இப்பொழுது இவ்விதம் அடைந்த என்னால் உனக்கு என்ன என்ன செய்யக்கூடுமோ அதை அதை நீ கட்டளையிடு; நான் செய்கிறேன். நம்மிருவர்களுக்கும் ஸித்தி உண்டாகட்டும். இந்தஸங்கேதஹத்திலிருந்து விடுபட்டநான் மித்திரக்கூட்டத்துடனும் பந்துக்களுடனும்கூடி உனக்குப்பிரியமும் நன்மையுமான காரியங்களையெல்லாஞ் செய்கிறேன். அழகுள்ளவனே! இந்தத்துன்பத்திலிருந்து விடுபட்டு நானும் உனக்கு ப்ரீதியை உண்டுபண்ணுவேன். ப்ரதியுபகாரஞ்செய்யவும் சக்தியுள்ளவனுவேன். பலவிதம்

ப்ரதியுபகாரஞ் செய்கிறவனும் முதலில் உபகாரஞ்செய்தவ னுக்கு ஸரியாவானென்று தோன்றவில்லை. இவர்களில் முத லில்உபகரிப்பவனே ஒருவன் காரணமின்றியே உபகரிக் கிறான். மற்றொருவன் உபகாரம் பெற்றபின்னன்றோ செய் கிறான்' என்று சொல்லிற்று. இவ்விதம், பூனை தேறுதல் சொல்லியதைக்கேட்டு, அறிவுள்ளதான அந்தஎலியானது, மிகவும் நேயமுள்ளதாய் அதனிடம் ப்ரவேசித்து அதனை நன்கு அங்கீகரித்துக்கொண்டது. அவ்விதம் அந்தப்பூனை க்குத் தன்னுடையகாரியத்தை அறிவித்துவிட்டு எலியானது நட்புள்ளதாகித் தாய்தந்தையினிடத்தில்போலப் பூனையின் வயிற்றில் உறங்கத்தொடங்கிற்று. பிறகு, அந்தப்பூனையின் அங்கங்களில் படுத்திருக்கும் எலியைக்கண்டு அந்தக்கீரிப்பிள் ளையும் கோட்டானும் ஆசையற்றுத் திரும்பின. அவ்வித மே அந்த எலிக்கும் பூனைக்கும் உண்டான மிகுந்தநட்பைக் கண்டு அந்தக்கீரிப்பிள்ளையும் கோட்டானும் அதிகபயமுள்ள வைகளும் மிகஉற்சாகக்குறைவடைந்தவைகளும் பெரிய ஆச் சரியத்தை அடைந்தவைகளுமாயின. பலமுள்ளவைகளும் புத்தியுள்ளவைகளும் நல்லநடையுள்ளவைகளும் ஸமீபத்தி லிருப்பவைகளுமான அவ்விரண்டும் அந்தநீதியின்காரணத் தால் வலிந்து பயத்தையுண்டுபண்ணச் சக்தியற்றவைகளா யின. அரசனே! அந்தப்பூனையின் அங்கங்களில் சயனஞ் செய்ததும் தேசகாலங்களை அறிந்ததுமான பலிதமென்னும் அந்த எலியானது காலத்தை விரும்பிக்கொண்டு மெள்ள மெள்ளக் கயிறுகளை அறுக்கத்தொடங்கிற்று. பிறகு கயி றுகளின்கட்டால் துன்பமடைந்த பூனையானது, வேகமில் லாமல் கயிறுகளைஅறுக்கும்எலியைக்கண்டு அப்பொழுது வேகமுள்ளதாயிற்று. பிறகு, பூனையானது, கயிறுகளைஅறு ப்பதில் வேகமில்லாத அந்த எலியை அப்பொழுது ஏவ ஆரம்பித்தது. 'அழகுள்ளவனே! ஏன் அதிகவேகமில்லா தவனாயிருக்கிறாய்? காரியத்தைச்செய்துகொண்ட நீ அவம திக்கத் தொடங்குகிறாயோ? பகைவர்களைக் கொல்லுகிறவ னே! அந்தச் சண்டாளன் வருவதற்குமுன் கயிறுகளை அறு' என்றுசொல்லிற்று. இவ்விதம் பரபரப்புள்ள அந்தப்பூனை

சொல்லியதைக்கேட்டு, புத்தியுள்ள பலிதமானது நற்பயிற்சியில்லாத புத்தியையுடைய பூனையை நோக்கி உண்மையும் தனக்குஹிதமுமான வசனத்தைச் சொல்லத்தொடங்கிற்று.

' அழகுள்ளவனே! நீபேசாமலிரு; நீ அவஸரப்படவேண்டாம்; உனக்குப் பரபரப்புவேண்டாம்; இந்தவிஷயத்தில் ஸமயத்தையறிந்தவர்கள் நாங்களே. ஸமயந்தவறுது; அகாலத்தில்செய்யப்படும்காரியமானது செய்கிறவனுக்குப் பயனைக் கொடுக்கத்தக்கதாகாது. அதுவே ஸமயத்தில்செய்யப்பட்டால் மிக்கபயனைக் கொடுக்கத்தக்கதாகும்; அகாலத்தில்விடுவிக்கப்பட்ட உன்னிடமிருந்தே எனக்குப் பயமுண்டாகும்; ஆகையால், ஸமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிரு. நண்பனே! எதற்காக அவஸரப்படுகிறுய்? எப்பொழுது ஆயுதபாணியாகச் சண்டாளன்வருவதைக்காண்கிறேனே அப்பொழுது பொதுவான பயமுண்டானதும் உன்னுடைய கயிறுகளை அறுத்துவிடுகிறேன். நீ அந்தஸமயத்தில் விடுவிக்கப்பட்டு மரத்திலேயே ஏறிக்கொள்ளுவாய். உனக்கு உயிரைக்காத்தல்தவிர வேறுஒன்றுஞ்செய்யத்தக்கதிராது. அப்பொழுது வேடனிடம்பயந்து நடுங்கி நீசென்றவுடன் நான் வளையில்புகுந்துகொள்வேன். நீ கிளையை அடைவாய்' என்று சொல்லிற்று. இவ்விதம் எலியினுல் தனக்கு ஹிதமானவசனத்தைச் சொல்லப்பட்டதும் வசனத்தின் உண்மையையறிந்ததும் உயிரைவிரும்புவதும் பெரிய புத்தியுள்ளதுமான லோமசமென்னும்பூனையானது பிறகு தன்காரியத்தில்வேகமுள்ளதாகி மிகவும் பிரார்த்தனையைச்செய்து தாமதஞ்செய்யும்எலியைநோக்கிச் சொல்லத்தொடங்கிற்று. ' ஸாதுக்கள் மித்திரர்களின்காரியங்களை இவ்விதஞ்செய்யமாட்டார்கள்; அன்புடன்செய்வார்கள். நான் எவ்விதம் வேகத்துடன் உன்னைத் துன்பத்திலிருந்து விடுவித்தேனே அவ்விதமன்றோ நீ வேகத்துடன் எனக்கு இதைச் செய்ய வேண்டும். அறிவுள்ளவர்களிற் சிறந்தவனே! நம்மிருவர்களுக்கும் க்ஷேமமுண்டாகும்படியான முயற்சியைச்செய். அப்படியில்லாமல் நீ முன்னுள்ளவைரத்தை நினைத்துக்கொண்டு நேரம்போக்க விரும்புவாயாகில் நிச்சயமாக என்

உயிர் அழிந்துபோம். கெட்டநடையுள்ளவனே! நீ பார்த்துக்கொள். அறியாமையால் என்னால் முந்திச் சிறிது தீங்கு செய்யப்பட்டிருந்தாலும் அதனை நீ மனத்தில்வைத்துக் கொள்ளக்கூடாது. க்ஷமிக்கும்படி உன்னைக் கேட்டுக் கொள்ளுகிறேன். எனக்கு அனுக்ரஹஞ்செய்' என்று சொல்லிற்று. இவ்விதம் சொல்லுவதும் அதிக அறிவுள்ளதுமான அந்தப் பூனையைநோக்கிச் சாஸ்திரங்களை அறிந்ததும் புத்தியில் மிகச்சிறந்ததுமான எலியானது அப்பொழுது மிகச்சிறந்த இவ்வசனத்தைச்சொல்லிற்று.

'பூனையே! ஸ்வகாரியத்தைப் பெரிதாகக்கொண்ட உன் வசனத்தை நான் கேட்டேன். என் காரியத்தைப் பெரிதாகக்கொண்ட என்னையும் நீ அறிகிறாய். எந்த ஸ்நேஹிதனைப் பயத்துடன் ஸாதிக்கவேண்டுமோ, எந்த ஸ்நேஹிதனிடத்தில் பயமிருக்கிறதோ அவனிடமிருந்து பாம்பின் வாயிலிருந்து கையை ரக்ஷித்துக்கொள்வதுபோலத் தன்னுடைய ரட்சையைச் செய்துகொள்ளவேண்டும். பலமுள்ளவனிடம் ஸந்தியைச்செய்துகொண்டு எவன் தன்னை ரட்சித்துக்கொள்ளவில்லையோ அவனுக்கு அந்த ஸந்தியானது புஜிக்கப்பட்ட அபத்யம்போலத் துன்பத்திற்குக் காரணமாகும். ஒருவன் ஒருவனுக்கு மித்திரனேயல்லன். ஒருவன் ஒருவனுக்குச் சத்துருவேயல்லன். காரியத்திற்கு வேண்டியன்றோ மித்திரர்களாகவும் அப்படியே சத்துருக்களாகவும் ஆக்கப்படுகிறார்கள். யானைகளால் பெரிய யானைகள் கட்டுப்படுதல்போலக் காரியங்களால் காரியங்கள் கட்டுப்படுகின்றன. காரியம் செய்தபின் செய்தவனைப்பார்க்கிறவன் ஒருவனுமில்லை. ஆகையால், எல்லாக்காரியங்களையும் மிச்சமுள்ளனவாகவே செய்துவைக்கவேண்டும். அந்தச் சமயத்தில் அந்தச் சண்டாளனிடமிருந்து பயந்து கஷ்டப்பட்டு ஓடுவதைப் பெரிதாகக்கொண்ட நீ என்னைப்பிடிக்கச் சக்தியுள்ளவனாயிருக்கமாட்டாய். பலகயிறுகள் அறுத்தாகிவிட்டன. ஒருகயிறு மிச்சமிருக்கிறது. அதையும் வேகமாக நான் அறுத்துவிடுகிறேன். லோமச! ஸுகமாயிரு' என்று கூறியது.

கஷ்டமுள்ள அந்தப்பூனையும் எலியும் இவ்விதம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அந்த இரவு முடிவடைந்தது. லோமசமென்னும் பூனைக்கும் பயம் உண்டாயிற்று. பிறகு, விடியற்காலையில் பயங்கரனும் கருஞ்சிவப்பானநிறமுள்ளவனும் பெரிதானஇடையின்பின்புறமுள்ளவனும் விகாரமானவனும் குரூரனும் நாய்க்கூட்டங்களால்சூழப்பட்டவனும் முளைபோன்றகாதுள்ளவனும் பெரியமுகமுள்ளவனும் மண்வெட்டியுள்ளவனும் பயங்கரமாகக்காணப்படுகிறவனும் ஆயுதபாணியுமான பரிகனென்னும்சண்டாளன் காணப்பட்டான். யமதூதனைப்போன்ற அந்தச்சண்டாளனைக்கண்டு பயந்ததும் நடுங்கினபுத்தியுள்ளதுமான பூனையானது பலிதத்தைநோக்கி, 'இப்பொழுது என்ன செய்வாய்?' என்று கேட்டது. அவ்விதமே கொடியவனும் பயங்கரனுமான அந்தச் சண்டாளனைக்கண்டு மிகவும் நடுக்கமடைந்தனவான கீரிப்பிள்ளையும் கோட்டானும் க்ஷணத்தில் ஆசையற்றதன்மையை அடைந்தன. பலமுள்ளவைகளும் புத்தியுள்ளவைகளும் சேர்க்கையைஅடைந்தவைகளுமான கோட்டானும் கீரிப்பிள்ளையும், காரியத்திற்குவேண்டி ஸந்திசெய்துகொண்ட அந்தப்பூனையையும் எலியையுங்கண்டு அவைகளின் அந்தநல்லநீதியால் வலிமைசெய்து பயத்தையுண்டுபண்ணச்சத்தியற்றவைகளாகி வேகமாகத் தம்தம் இருப்பிடஞ்சென்றன. பிறகு அந்தஎலியானது பூனையினுடைய அந்தக்கயிற்றையும் அறுத்தது. பிறகு விடுபட்டபூனையானது அந்த மரத்தையே போய் அடைந்தது. அந்தப்பரபரப்பிலிருந்தும் கோரனான பகைவனிடமிருந்தும் விடுபட்டதான அந்தப்பலிதமானது வளையை அடைந்தது. அந்தலோமசம் கிளையைஅடையவே,சண்டாளனானவன் எல்லாவிதத்தாலும் பார்த்து ஆசையற்றவனாக யந்திரத்தையும் எடுத்துக்கொண்டு க்ஷணப்பொழுதில் அவ்விடத்திலிருந்து விலகினான். பரதர்களிற்சிறந்தவனே! அந்தச் சண்டாளன் தன்வீடுசென்றான்.

பிறகு, அந்தப் பயத்திலிருந்து விடுபட்ட லோமசமானது அடைய அரிதான உயிரையடைந்து மரத்தின் நுனியி

லிருந்துகொண்டு வளையிலிருக்கும் பலிதத்தைநோக்கிச் சொல்லத்தொடங்கிற்று. 'ஒருவிதஸங்கேதத்தையும் செய்துகொள்ளாமல் வேகமாக நீ ஓடிவிட்டாய். நன்றியறிந்தவனும் க்ஷேமத்தைச்செய்தவனுமான நீ என்னைப்பற்றிச்சங்கைப்படாமலிருக்கிருயா? என்னுடைய நம்பிக்கையையும் அடைந்து என்உயிரையும்கொடுத்து ஸ்நேஹிதனுக்குரிய போகத்தையடையுங்காலத்தில் ஏன் என்னிடம் வராமலிருக்கிருய்? எவன் முதலில் ஸ்நேஹிதர்களை உண்டுபண்ணிக்கொண்டு பிறகு ஸ்நேஹத்தைக் கொண்டாடாமலிருக்கிருனே கெட்டபுத்தியுள்ள அவன் கடுமையான துன்பங்களில் மித்திரர்களை அடையமாட்டான். ஸ்நேஹமுள்ள தோழனே! உன்னுடையதிறமையினுல் நான் காப்பாற்றப்பட்டேன். அவ்விதமான நீ நட்புத்தன்மையைஅடைந்த என்னுடன் நெருங்கிப்பழகத்தக்கவன். என்னுடையநண்பர்களும் என்னுடையஉறவினர்களும் பிரியரானஆசாரியரைச் சிஷ்யர்கள் பூஜிப்பதுபோல உன்னைப் பூஜிப்பார்கள். நானும் உன்னையும் உன் மித்திரக்கூட்டங்களையும் பந்துவர்க்கங்களையும் பூஜிக்கிறேன். உயிரைக்கொடுத்தவனை நன்றியறிந்த எவன் பூஜியாமலிருப்பான்? நீ என்னுடைய சரீரம் வீடு பொருள்கள் யாவற்றிற்கும் எஜமானனுயிருக்கவேண்டும். நீ எனக்குக்கட்டளையிடுகிறவனுயிரு. அறிவிற்சிறந்தவனே! நீ எனக்கு அமாத்தியனுயிரு. தகப்பன் மகனைக் கட்டளையிடுதல்போல நீ என்னைக் கட்டளையிடு. உனக்கு என்னிடமிருந்து பயம்வேண்டாம். என் உயிரின்மேல் சபதஞ்செய்கிறேன். நீ புத்தியால் சுக்ராசாரியரே; நாங்கள் பலத்தால் அதிகாரமுள்ளவர்கள். மந்த்ரபலத்துடன்கூடிய நீ எனக்கு ஜயத்தையே கொடுப்பாய்' என்று சொல்லிற்று.

இவ்விதம் பூனையானது மிகவும் நன்மையான மொழிகளைக்கூற, அந்தஎலியானது உண்மையை அறிந்துகொண்டு அழகுள்ளதும் தனக்கு நன்மையுமான வசனத்தைச் சொல்லத்தொடங்கிற்று. 'லோமச! நீ சொல்லியது அனைத்தையும் நான் கேட்டேன். எனக்குத் தோன்றுகிறதைச் சொல்லுகிறேன்; அதனைக் கேள். மித்திரர்களையும் அறிந்து

கொள்ளவேண்டும்; சத்துருக்களையும் அறிந்துகொள்ள வேண்டும். இது மிக்க ஸூக்ஷ்மமென்று இவ்வுலகில் அறிஞர்கள் அங்கீகரித்ததாகக் காணப்படுகிறது. ஸ்நேஹிதர்கள் சத்துருக்களைப்போலவும் சத்துருக்கள் ஸ்நேஹிதர்களைப்போலவும் இருப்பார்கள். அவர்கள் ஆசைக்கும் லோபத்துக்கும் வசப்பட்டு நன்மொழிகூறப்பட்டாலும் உண்மையை அறிகிருர்களில்லை. எவர்களுக்கு நற்குணமுள்ளவர்களே மித்திரர்களாயும் கோபமுள்ளவர்களே சத்துருக்களாயுமிருக்கிருர்களோ அவர்களும் ஆசைலோபங்களுக்கு வசப்பட்டால் நன்மொழிகூறப்பட்டாலும் உண்மையை அறிகிருர்களில்லை. பிறப்பில் சத்துருவென்பவனுமில்லை; மித்திரனென்பவனுமில்லை; காரியத்திற்குவேண்டி மித்திரர்களாயும் சத்துருக்களாயும் ஆகிருர்கள். ஒரு மனிதனுடைய உயிர் வாழ்க்கையில் காரியஸித்தியையும் மரணத்தில் துன்பத்தையும் எவன் காண்கிருனே அவன் அதுமாருதிருக்கும்வரையில் அம்மனிதனுக்கு மித்ரனுவான். நட்பென்பது நிலைத்ததாயிருப்பதில்லை. பகையென்பதும் நிலைத்ததன்று. கார்யத்தின் சேர்க்கையால் நண்பர்களாகவும் அவ்விதமே பகைவர்களாகவும் ஆகிருர்கள். வேருன ஒருஸமயத்தில் மித்திரனும் சத்துருத்தன்மையை அடைவான்; சத்துருவும் மித்திரத்தன்மையை அடைவான். தன்னுடைய காரியமன்ருே மிகவும் பலமுள்ளது? எவன் காரியத்திற்குரிய யுக்தியை அறியாமல் மித்திரர்களிடம் நம்பிக்கையேயுள்ளவனும் சத்துருக்களிடம் நம்பிக்கையேயில்லாதவனுமாயிருக்கிருனே அவனுடைய உயிர் நிலையுள்ளதன்று. எவன் காரியத்தை அறிந்துகொள்ளாமல் மித்திரனிடத்திலேயோ சத்துருவினிடத்திலேயோ பிரியத்தில் மனத்தைச் செலுத்துகிருனே அவனுடைய புத்தியும் நிலையுள்ளதன்று. நம்பிக்கையில்லாதவனிடம் நம்பிக்கைகூடாது. நம்பிக்கையுள்ளவனிடத்திலும் அதிக நம்பிக்கை கூடாது. நம்பிக்கையினலுண்டாகும் பயமானது வேர்களையும் அறுக்கும். தந்தையும் தாயும் மகனும் மாமனும் மருமகனும் ஸம்பந்திகளும் பந்துக்களும் கார்யத்தின் சேர்க்கையாலுண்டாகிருர்கள். தாயுந்

தந்தையும், பதிதனுயிருந்தால் பிரியனுன புத்திரனையுந் தள்ளிவிடுகிருர்கள். உலகம் தன்னை ரக்ஷித்துக்கொள்ளுகிறது. தன்கார்யத்திற்குள்ள ஸாரத்தைப்பார். அறிவுள்ளவனே! விடுதல்பெற்றபின் ஸுகத்திற்குக்காரணமான காரியத்தைச் செய்ய ஒருவன் தேடுவதென்பது பொதுவான கடமையாகும். ஸந்தேஹமில்லை. ஆனுல், இதேஇடத்தில் ஆலமரத்திலிருந்து இறங்கிய நீ சபலத்தனத்தால் கொல்லத்தக்க யந்திரத்தில் புகுந்த உன்னை முதலில் அறிந்துகொள்ளவில்லை. சபலனுயிருப்பவன் தனக்கே உபயோகப்படமாட்டான். பிறர்களுக்கு எங்ஙனம் உபயோகப்படுவான்? ஆகையால், சபலன் எல்லாக்காரியங்களையுங்கெடுப்பான்; ஸந்தேஹமில்லை. இப்பொழுது, 'எனக்கு உன்னிடத்தில் பிரியம்' என்று நீ இனிமையாகச்சொல்வது பொய். காரணமனைத்தையும் விரிவாக என்னிடமிருந்து கேள். ஒரு மனிதன் ஒரு காரணத்தால் பிரியமாயிருக்கும்தன்மையை அடைகிருன்; ஒருகாரணத்தால் பகையுள்ளவனுகிருன். இவ்வுலகத்திலுள்ள பிராணியானது தன் காரியத்தையே விரும்பும். ஒருவனும் ஒருவனுக்கும் பிரியனல்லன். ஒரு வயிற்றிற்பிறந்த பிராதாக்களானுலும். தம்பதிகளானுலும், எவருக்கும் ஒருவருக்கொருவர் ஸ்நேஹத்தையும் காரணமில்லாத ப்ரீதியையும் இவ்வுலகில் நான் அறிகிலேன். ஆனுல், உடன்பிறந்தார்களும் மனைவியும் ஒருகாரணத்தில் கோபமுள்ளவர்களானுலும் பிறகு அவர்கள் ஸ்வபாவத்தில் ப்ரீதியுள்ளவர்களாயிருப்பார்கள். அவிவேகியான மற்றமனிதன் அவ்விதமிருக்கமாட்டான். கொடுப்பதால் ஒருவன் பிரியனுவான். பிரியமானவசனத்தால் ஒருவன் பிரியனுவான். மந்திரத்தாலும் ஹோமத்தாலும் ஜபத்தாலும் மற்றொருவன் பிரியனுவான். உலகமானது காரியத்திற்கு வேண்டி நட்புள்ளதாகிறது. நம்மிருவர்களுக்கும் ஒரு காரணநிமித்தம் நட்புண்டாகி அக்காரணத்திற்காக அஃது இருந்தது. அந்தக்காரணமானது முடிவடைந்ததும் அந்தநட்பும் இல்லாமற் போயிற்று. எந்தக்காரணத்தால் உனக்கு என்னிடத்தில் அன்பிருக்கிறதோ அந்தக்காரணமானது புஜிக்கவேண்டுமென்ற

காரியத்தைத்தவிர வேறுளது என்று நினைக்கிறேன். அந்த விஷயத்திலும் நாங்கள் அறிவுள்ளவர்கள்தாம். காலமானது காரணத்தை வேறுபடச் செய்யும். தனக்குரிய பயனானது அக்காரணத்தைத்தொடர்ந்து நிற்கும். அறிவிற்சிறந்தவன் தன்காரியத்தை அறிவான். உலகம் அறிவிற்சிறந்தவனை அனுஸரித்திருக்கும். ஆதலால், நீ இவ்விதம்பேசவேண்டாம். எவனும் தன் காரியத்தில் ஸமர்த்தனாயிருப்பன். ஸாமர்த்தியமுள்ளவனுக்கு இந்தஸமயமானது உன்னிடத்தில் நட்புச்செய்யத்தக்கதன்று. ஆகையால், நட்பிலும் பகையிலும் நல்லதேர்ச்சியுள்ள நான் என் காரியத்திலிருந்து அசையமாட்டேன். மேகங்களின் உருவங்கள்போலக் காரியங்கள் ஒவ்வொருஸமயத்திலும் வேறுபடுகின்றன. இப்பொழுதுதான் சத்துருவாயிருந்த நீயன்றோ திரும்பவும் இப்பொழுதே எனக்கு ஸ்நேஹிதனாகித் திரும்பவும் இப்பொழுதே சத்துருவாகிறாய்? காரியங்களின் மாறுபாட்டைப் பார். முந்தி எவ்வளவுவரையில் காரணமிருந்ததோ அவ்வளவுவரையில் நம்மிருவர்களுக்கும் ஸ்நேஹமுண்டாயிருந்தது. காலத்துடன்கூடின அந்தக்காரணத்துடன்கூடவே அந்தஸ்நேஹம் போய்விட்டது. நீ எனக்கு இயற்கையில் சத்துருவன்றோ? காரியத்திற்குவேண்டி மித்திரத்தன்மையை அடைந்தாய். அந்தக்காரியம் முடிந்தபின் சத்துருத்தன்மையை அடைந்தஸ்வபாவம் வந்துவிட்டது. இவ்விதம்இயற்றப்பட்ட சாஸ்திரங்களை உண்மையாக அறிந்தநான் எப்படி உனக்குவேண்டிக் கயிற்றினுட்புகுவேன்? அதனை எனக்குச் சொல்லு. உன்னுடைய பராக்ரமத்தால் நான் விடுவிக்கப்பட்டேன். அப்படியே என்னுடையபராக்ரமத்தால் நீ விடுவிக்கப்பட்டாய். ஒருவருக்கொருவர் உபகாரம்முடிவுபெற்றதும் திரும்பவும் சேர்க்கையில்லை. அழகுள்ளவனே! நீ இப்பொழுது காரியத்தைச் செய்துகொண்டவனாகிறாய். அப்படியே எங்கள்காரியமும் நிறைவேறிற்று. இப்பொழுது உனக்கு உணவாதலைவிட என்னால்செய்யத்தக்கது வேறொன்றுமில்லை. நான் அன்னம்; நீ புஜிப்பவன். நான்பலங்குறைந்தவன்; நீ பலமுள்ளவன். பிரிந்தபின் பலமானது ஸமமாக

இல்லாமலிருக்கும்பொழுது நம்மிருவர்களுக்கும் ஸந்தியென்பது கிடையாது. நான் உன்னுடையபுத்தியை அறிகிறேன். விடுவிக்கப்பெற்றபிறகு எளிய உபாயத்துடன் நிச்சயமாகப் போஜனத்தைத்தேடுகிறாய். ஸந்தேஹமில்லை. விடுவிக்கப்பட்டவுடன் பசியால்தொடரப்பட்ட நீ ஆகாரத்தில்விருப்பமுள்ளவனென்றே நன்றாகவெளியாகிறது. நீ திசாஸ்திரத்தாலுண்டான புத்தியைவைத்துக்கொண்டு என்னிடத்தில் காலைஆகாரத்தை விரும்புகிறாய். உனக்குப் போஜனசமயமாகவுமிருக்கிறது. உன்னைப்பசியுள்ளவனென்றும் அறிகிறேன். அவ்விதமான நீ என்னைப் பிரியப்படுத்தித் திரும்பவும் போஜனமாகச்செய்யவிரும்புகிறாய். அன்றியும், நண்பனே ! பிள்ளைபெண்டிர்களுக்குவேண்டி என்னிடத்தில் வார்த்தையைச் சொல்வதும் எனக்குப் பணிவிடைசெய்ய முயற்சிப்பதும் எனக்குத்தகுதியல்ல. உன்னுடன்கூடஇருக்கும் என்னைக்கண்டு உன்னுடைய மித்திரர்களும் மனைவியும் பிள்ளைகளும் நீ அன்புள்ளவனாயிருக்கும்பொழுதே என்னைப்பிடித்து ஏன்தின்னமாட்டார்கள் ? காரணத்தாலுண்டானசேர்க்கையானது முடிவுபெற்றபடியால் நான் உன்னுடன்சேரமாட்டேன். நான்செய்த உபகாரத்தைநினைப்பாயாகில் அங்கிருந்துகொண்டே எனக்கு க்ஷேமத்தைச் சிந்தித்துக்கொண்டிரு. புஜிக்கப்படத்தக்க வஸ்துவாயிருக்கும் எந்த அறிவுள்ளவன் துன்பப்பட்டவனும் பசியுள்ளவனும் ஆகாரத்தைத்தேடுகிறவனுமான சத்துருவினிடத்திற் செல்லுவான்? உனக்குக்ஷேமமுண்டாகட்டும் : நான் போகிறேன் ; தூரத்திலிருந்தாலும்கூட உன்னிடத்திலிருந்து பயமடைகிறேன். நான் உன்னுடன்சேரமாட்டேன். லோமச ! நீ நிவ்ருத்தியடை. பலமுள்ளவர்களினருகிலிருப்பது ஒரு ஸமயத்திலும் கொண்டாடப்படுகிறதில்லை. செய்தஉபகாரத்தைநீ அறிவாயாகில் ஸ்நேஹத்தை அனுஸரித்துக்கொண்டிரு. மிக்கஅடக்கமுள்ளவனும் நல்லறிவுள்ளவனுமான பலசாலியிடமிருந்தே எப்பொழுதும் பயப்படவேண்டும். ஏதாவதொருபொருளால் உனக்குக் காரியமிருக்குமானால்சொல்லு. உனக்கு நான் என்னசெய்யவேண்டும்? எல்லா இஷ்டத்தை

யுங் கொடுக்கிறேன். எவ்விதத்திலும் ஆத்மாவைக்கொடுக்க மாட்டேன். ஆத்மாவுக்குவேண்டி ஸந்ததியும் ராஜ்யமும் ரத்தினமும் பொருள்களும் இழக்கத்தக்கவைகளாகும். புத்தியுள்ளவன் எல்லாப்பொருளேயும் விட்டாவது ஆத்மாவை ரக்ஷித்துக்கொள்ளவேண்டும்; ஐசுவரியத்துக்கும் தனத்துக்கும் ரத்தினங்களுக்கும் விரோதமானநிலேயிலும் இருக்கலாம். உயிரோடிருப்பவர்களுக்குத் திரும்பவும் அவைகள்வருவதுகாணப்படுகிறதென்று எங்களுக்குக்கேள்வி. பொருள்களேயும் ரத்தினங்களேயும்போல ஆத்மாவைக்கொடுப்பது விரும்பத்தக்கதன்று. தாரங்களாலும் தனங்களாலும் எப்பொழுதும் ஆத்மாவைரக்ஷித்துக்கொள்ளவேண்டும். ஆத்மரக்ஷையைமுக்கியமாகக்கொண்டவர்களும் காரியங்களே நன்ருகப் பரீக்ஷித்துச்செய்கிறவர்களுமான மனிதர்களுக்குத் தம்குற்றத்தாலுண்டாகுந்துன்பங்கள் உண்டாகமாட்டா. நன்ருக அறியப்படாதவனும் பிரீதியில்லாதவனுமான சத்துருவானவன் எப்பொழுதும் பிரியத்தைச்செய்கிறவனுயிருந்தாலும் பலமில்லாதமனிதன் அவனேப்பற்றி எல்லாவிடத்திலும் ஸந்தேஹப்படவேண்டும். நற்குலத்திற்பிறந்தவர்களும் நல்ல மித்திரர்களும் தர்மமுள்ளவர்களும் மஹாத்மாக்களுமாயிருப்பவர்களின் புத்தியானது சாஸ்திரத்தின்பொருளில் நிச்சயமுண்டானதாகி வேற்றுமைஅடையாமலிருக்கும்' என்று சொல்லிற்று. இவ்விதம் அந்தப் பூனேயானது பலிதத்தால் வெளிப்படையாகவே பரிஹஸிக்கப்பட்டு லஜ்ஜையுள்ளதாகி அதனே நோக்கி ஒரு வசனத்தைச் சொல்லத்தொடங்கிற்று.

'ஸத்யமாக நான் சபதஞ்செய்கிறேன்; என்னே மித்திரத்ரோஹியென்று நீ நிந்திக்கிருய். நீ என்னுடைய நன்மைக்காக முயற்சிசெய்தவன். உன்னுடைய புத்தியை நான் சிறந்ததென்றறிகிறேன். என்னுடைய இயற்கையிலுள்ள காரியத்தைக்கொண்டு நீ வேறு எண்ணத்துடன் பேசுகிருய். ஸாதுவே! இந்தவிஷயத்தில் நீ என்னே வேறுவிதமாகக் கருதுவது நியாயமன்று. உயிரைக்கொடுத்ததனுலுண்டான நட்பானது உன்னிடமிருந்து என்னிடம்வந்திருக்கிறது. தர்மமறிந்தவனும் நற்குணங்களேயறிந்தவனும் மிக்கநன்றியறிவுள்

ளவனுமாயிருக்கிறேன். மித்திரர்களிடம் அன்புள்ளவனுமாயிருக்கிறேன். விசேஷமாக உன்னிடத்தில் பக்தியுள்ளவனுமாயிருக்கிறேன். ஸாதுவே! இவ்விதமிருக்கும்பொழுது என்னை நீ நிந்தித்துப்பேசுவது நியாயமன்று. நீ இவ்விதம் பேசுவாயாகில் பந்துக்களுடன்கூட உயிரையும் விட்டுவிடுவேன். நல்லமனமுள்ள என்போன்றவர்களிடம் அறிஞர்கள் அன்பையே பார்க்கிறார்கள். தர்மத்தின் உண்மையை அறிந்தவனே! என்னிடத்தில் தர்மந்தவறுதலை ஸந்தேஹிப்பது நியாயமன்று' என்று சொல்லிற்று. பூனையால் இவ்விதம் ஸ்தோத்திரம்செய்யப்பட்டதாயிருந்தாலும், அந்தஎலியானது பூனையைநோக்கி மனத்திலுள்ள ஆழ்ந்தகருத்தமைந்த இவ்வசனத்தைக் கூறுவதாயிற்று.

'நீ ஸாது. நான் காரியத்தைச் செய்துகொண்டவனாயிருக்கிறேன். நண்பனாயிருப்பவனையும் நான் நம்பவில்லை. ஸ்தோத்திரங்களாலோ பொருள்களாலோ திருப்பவும் நீ என்னை அடையமுடியாது. நண்பனே! அறிவிற் சிறந்தவர்கள் காரணமின்றிச் சத்துருவின்வசத்தை அடையமாட்டார்கள். இந்தவிஷயத்திலும் சுக்ராசாரியராலியற்றப்பட்ட இரண்டு காதைகளைக்கேள். அவற்றின் பொருளாவது:—சத்துருவும் சேர்ந்துசெய்யத்தக்ககாரியத்தில் அதிகபலமுள்ளவனுடன் ஸந்தியைச்செய்துகொண்டு தன் புத்தியால் மிக்கஜாக்ரதையுடன் ஸஞ்சரிக்கவேண்டும்; காரியத்தைச் செய்துகொண்டபின் நம்பக்கூடாது; நம்பிக்கையில்லாதவனையும் நம்பக்கூடாது; நம்பிக்கையுள்ளவனிடத்திலும் அதிக நம்பிக்கை கூடாது; எப்பொழுதும் பிறர்களுக்கு நம்பிக்கையுண்டாகும்படி செய்யவேண்டும்; பிறர்களைத் தான் நம்பக்கூடாது - என்பது. ஆகையால், எல்லாஸமயங்களிலும் தன்னுடைய உயிரை ரக்ஷித்துக்கொள்ளவேண்டும். உயிரோடிருப்பவர்களுக்குத் திரவியங்கள் ஸந்ததிமுதலியயாவும் உண்டாகும். நீதிசாஸ்திரங்களின் சுருக்கமானஸாரம் நம்பிக்கையில்லாமையென்று சொல்லப்படுகிறது. ஆகையால், மனிதர்களிடம் நம்பிக்கையில்லாமலிருப்பது தனக்குப் பூர்ணமானஹிதமாகும். பலங்குறைந்தவர்களாயிருந்தாலும் நம்

பிக்கையில்லாமலிருப்பவர்கள் சத்துருக்களால் கட்டப்பட மாட்டார்கள். பலசாலிகளாயிருந்தாலும் பகைவர்களிடம் நம்பிக்கையுடனிருப்பவர்கள் பகைவர்களால் கட்டப்படுகிறு ர்கள். பூனையே! உன்போன்றவர்களிடமிருந்து எப்பொழு தும் நான் ஆத்மாவை ரக்ஷித்துக்கொள்ளவேண்டும். நீயும், பிறப்பில் பாபியான சண்டாளனிடமிருந்து உன்னை ரக்ஷித் துக்கொள்' என்றுசொல்லிற்று. அந்தஎலி இவ்விதம் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே அந்தப்பூனையானது பயத்தால் நடுக்கமுற்றுக் கதையைவிட்டுவிட்டு உடனே மிக வேகமாகச் சென்றது. பிறகு சாஸ்திரங்களின் உண்மைப் பொருளை அறிந்ததும் அறிவிற்சிறந்ததுமான எலியானது தன்புத்திக்குள்ள ஸாமர்த்தியத்தைத் தெரிவித்துவிட்டு வேறுவளையை அடைந்தது. இவ்விதம் நல்லஅறிவுள்ள தும் பலமில்லாததுமான பலிதமென்னும்ஓர்எலி தன்புத் தியால் அதிகபலமுள்ள பலசத்துருக்களை வஞ்சித்தது. ஆகையால், பண்டிதனுயிருப்பவன், சத்துருவாயிருந்தாலும் ஸாமர்த்தியமுள்ளவனோடு ஸந்தியைச் செய்துகொள்ளவே ண்டும். எலியும் பூனையும் ஒன்றோடொன்று சேர்ந்து விடுபட்டன. மஹாராஜனே! இவ்விதம் க்ஷத்திரியதர்ம த்தின்வழியானது விரிவாக என்னுல் எடுத்துச்சொல்லப் பட்டது. சுருக்கத்தையும் என்னிடமிருந்துகேள்.

ஒன்றுக்கொன்று வைரமுள்ளவைகளாயிருப்பவைகள், உத்தமமான பிரியத்தைச் செய்துகொண்டன. அவைகளு க்கு ஒன்றையொன்று வஞ்சிக்கவேண்டுமென்ற புத்தி நன் ருக இருந்தது. அவைகளில் அறிவிற்சிறந்தது நல்ல புத்திபலத்தை அடைந்து மற்றதை வஞ்சிக்கும். அறி விற்சிறந்தவனும் அஜாக்ரதையாக இருந்தால் புத்தியுள்ள வர்களால் வஞ்சிக்கப்படுவான். ஆகையால், பயமில்லாத வன்போலப் பயமுள்ளவனும் நம்பிக்கையுள்ளவன்போல நம்பிக்கையில்லாதவனுமாயிருக்கவேண்டும். அஜாக்ரதை யில்லாதவன் வழியைவிட்டுச் சலிக்கமாட்டான்; சலித்தா லும் நாசமடையமாட்டான். அரசனே! சத்துருவுடனும் ஸமயத்தில் ஸந்தியையும் மித்திரனுடனும் ஸமயத்தில் யுத்

தத்தையும் செய்யவேண்டுமென்றே எப்பொழுதும் உண்மையயறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். மஹாராஜனே! இதனை அறிந்து சாஸ்திரத்தின் பொருளையும் தெரிந்துகொண்டு முயற்சியுள்ளவனும் அஜாக்ரதையில்லாதவனுமாய்ப் பயம்வருவதற்குமுந்தியே பயமுள்ளவன்போல நடக்கவேண்டும். ஸந்தியையும் அவ்விதமே சண்டையையும் பயத்துடனே செய்யவேண்டும். பயத்தால் அஜாக்ரதையில்லாததும் முயற்சியுள்ளதுமான புத்தியுண்டாகும். அரசனே! பயம்வருவதற்குமுந்தியே பயத்துடனிருப்பவனுக்கு அந்தப்பயமுண்டாகாது. நம்பிக்கையால் பயமில்லாமலிருப்பவனுக்கு மிகப்பெரிய பயமுண்டாகும். மிகவும் பயமுள்ளவனென்றெண்ணி ஒருவனிடத்தில் எவ்விதத்திலும் ஆலோசனையைச் செய்யக்கூடாது. அறியாமையை முன்னிட்டு அறிந்துகொண்டவன் மூலத்தின் அறிவையும் அடைவான். ஆகையால், பயமில்லாதவன்போலப் பயமுள்ளவனும் நம்பிக்கையுள்ளவன்போல நம்பிக்கையில்லாதவனுமாய்க் காரியங்களின் பெருமையைத் தெரிந்துகொண்டு ஒன்றையும் பற்றுதலுடன்செய்யாமலிருக்கவேண்டும். யுதிஷ்டிர! இவ்விதம் என்னால் சொல்லப்பட்ட இந்தஇதிஹாஸத்தைக்கேட்டு நீ மித்திரர்களின் நடுவில் விதிப்படி நடந்துகொள். சிறந்தபுத்தியையும் சத்துருமித்திரர்களுக்குரிய வேற்றுமையையும் ஸந்திக்கும் யுத்தத்துக்கும் தக்க காலங்களையும் ஆபத்துஸமயத்தில் விடுபடத்தக்க உபாயத்தையும் தெரிந்துகொண்டு சத்துருவுடன் சேர்ந்து செய்யத்தக்க காரியத்தில் அதிக பலமுள்ள அவனுடன் ஸந்தியைச் செய்துகொண்டு புத்தியுடன் நடக்கவேண்டும். காரியத்தைச் செய்துகொண்டபின் நம்பாமலுமிருக்கவேண்டும். அரசனே! அறம் பொருள் இன்பமென்ற மூவகைப்பயனுக்கும் விரோதமில்லாத இந்தநீதியைக்கேட்டு இதனுடன் விசேஷமாக ப்ரஜைகளை ரக்ஷித்துக்கொண்டு நீ உயர்ந்திருக்கவேண்டும். பாண்டவ! பெரியோர்களுடன்கூடவே உனக்குக் கூட்டுறவு இருக்கவேண்டும். பாரத! பெரியோர்களிடமிருந்தே இவ்வுலகிலும் ஸ்வர்க்கத்திலுமுள்ள பெரியச்ரேயஸ் உண்டா

கிறது. ப்ரபுவே! தர்மத்தை அறிந்தவர்களும் எப்பொழுதும் நன்றியறிவுள்ளவர்களுமான பெரியோர்களைப் பூஜிப்பதால் மிக்க க்ஷேமமுண்டாகிறது. அரசனே! இவர்களைப் பூஜைசெய். அரசனே! ராஜ்யத்தையும் பெரிய க்ஷேமத்தையும் மிக்ககீர்த்தியையும் குலத்திற்குவேண்டிய ஸந்ததியையும் நியாயமாகவும் கிரமமாகவும் அடைவாய். ஓ! பாரத! விசேஷமான அறிவைக்கொடுப்பதும் சத்துரு மித்திரன் இவ்விருவர்களுக்குமுள்ள ஸந்திவிக்ரஹங்களைப்பற்றியதுமான நீதியானது நன்ருகச் சொல்லப்பட்டது. அரசனே! அரசனுயிருப்பவன் எப்பொழுதும் இவ்விதம் பார்த்துக்கொண்டு சத்துருக்கூட்டத்தில் நடந்துகொள்ளவேண்டும்" என்று சொன்னுர்.

"ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்
கருதி யிடத்தாற் செயின்"
"அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
இடுக்க ணிடுக்கட் படும்"
"நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை யொட்டிக் கொளல்"

---

### பண்டைக்காலத்து உரைநடை

## திருக்குறள் உரைப்பாயிரம்

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும், அந்தமிலின்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்கு உரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்டபொருள் நான்கு; அவை-அறம், பொருள், இன்பம், வீடு என்பன: அவற்றுள், வீடென்பது-சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத் தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது, இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன, ஏனை மூன்றுமேயாம். அவற்றுள், அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம்; அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும். அவற்றுள், ஒழுக்கமாவது—அந்தணர்முதலியவருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம்முதலியநிலைகளில் நின்று அவற்றிற்கு ஓதிய அறங்க

ளின் வழுவாது ஒழுகுதல்; வழக்காவது—ஒருபொருளைத் தனித்தனியே எனது எனது என்றிருப்பார் அதுகாரணமாகத் தம்முள் மாறுபட்டு அப்பொருள்மேற் சொல்வது: அது கடன்கோடல் முதற் பதினெட்டுப்பதத்ததாம்; தண்டமாவது-அவ்வொழுக்கநெறியினும் வழக்குநெறியினும் வழீஇனாரை அந்நெறிநிறுத்தற்பொருட்டு ஒப்பநாடி அதற்குத்தக ஒறுத்தல். இவற்றுள், வழக்குந் தண்டமும் உலகநெறிநிறுத்தற்பயத்தவாய வல்லது ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதிபயத்தற்சிறப்பிலவாகலானும், அவைதாம் நூலானேயன்றி உணர்வுமிகுதியானுந் தேய்வியற்கையானும் அறியப்படுதலானும், அவற்றை ஒழித்து, ஈண்டு, தெய்வப்புலமைத் திருவள்ளுவரால், சிறப்புடைய ஒழுக்கமே அறம் என எடுத்துக்கொள்ளப்பட்டது. அதுதான், நால்வகைநிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகளொழித்து, எல்லார்க்கும் ஒத்தலின் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி, இல்லறம், துறவறம் என இருவகைநிலையாற் கூறப்பட்டது; அவற்றுள்,இல்லறமாவது - இல்வாழ்க்கைநிலைக்குச்சொல்லுகின்ற நெறிக்கண் நின்று அதற்குத்துணையாகிய கற்புடைமனைவியோடுஞ் செய்யப்படுவது. பரிமேலழகர்

---

## அதங்கோட்டாசிரியர் தொல்காப்பியம் கேட்டது

பாண்டியன் மாகீர்த்தி இருபத்துநாலாயிரம்யாண்டு வீற்றிருந்தானாதலின் அவனும் அவன்அவையிலுள்ளோரும் அறிவுமிக்கிருத்தலின் அவர்கள்கேட்டிருப்ப அதங்கோட்டாசிரியர்கூறிய கடாவிற்கெல்லாங் குற்றந்தீர விடைகூறுதலின், "அரில் தப" என்றார்.

அகத்தியனார் அதங்கோட்டாசிரியரை நோக்கி, 'நீ தொல்காப்பியன்செய்தநூலைக் கேளற்க' என்று கூறுதலானும், தொல்காப்பியனாரும் பல்காலுஞ்சென்று, 'யான் செய்தநூலை நீர் கேட்டல்வேண்டும்' என்று கூறுதலானும், 'இவ்விருவரும் வெகுளாமல் இந்நூற்குக் குற்றங்கூறிவிடு

வல்' எனக்கருதி அவர்கூறிய கடாவிற்கெல்லாம் விடைகூறு தலின், "அரில்தபத்தெரிந்து" என்றார்.

அவர் கேளன்மினென்றற்குக் காரணமென்னையெனின் தேவரெல்லாருங்கூடி, 'யாஞ்சேரவிருத்தலின் மேருத் தாழ்ந்து தென்றிசை உயர்ந்தது; இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்குரியர்' என்று அவரைவேண்டிக்கொள்ள, அவருந் தென்றிசைக்கட் போதுகின்றவர் கங்கையாருழைச்சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு, பின்னர் யமதக்கினியாருழைச்சென்று அவர்மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு, புலத்தியனாருழைச்சென்று அவருடன்பிறந்த குமரியார் உலோபாமுத்திரையாரை அவர்கொடுப்ப நீரேற்று இரீஇப் பெயர்ந்து, துவராபதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல்வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்குடிவேளிருள்ளிட்டாரையும் அருவாளரையுங் கொண்டுபோந்து, காடுகெடுத்து நாடாக்கிப் பொதியிலின் கணிருந்து, இராவணனைக் கந்தருவத்தாற்பிணித்து, இராக்கதரை ஆண்டுஇயங்காமை விலக்கித் திரணதூமாக்கினியாராகியதொல்காப்பியனாரைநோக்கி, 'நீசென்று குமரியாரைக் கொண்டுவருக' எனக்கூற, அவரும், 'எம்பெருமாட்டியை எங்ஙனங் கொண்டுவருவல்' என்றார்க்கு, 'முன்னாகப்பின்னாக நாற்கோல் நீளம் அகலநின்று கொண்டுவருக' என, அவரும் அங்ஙனம் கொண்டுவருவழி, வையைநீர்கடுகிக் குமரியாரை ஈர்த்துக்கொண்டுபோகத் தொல்காப்பியனார் கட்டளையிறந்து சென்று ஓர் வெதிர்ங்கோலைமுறித்து நீட்ட, அதுபற்றியேறினார்; அது குற்றமென்று அகத்தியனார் குமரியாரையுந் தொல்காப்பியனாரையும், 'சுவர்க்கம்புகாப்பிர்' எனச் சபித்தார்; யாங்கள் ஒருகுற்றமுஞ்செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையான், 'எம்பெருமானுஞ் சுவர்க்கம்புகாப்பிர்' என அவர் அகத்தியனாரைச் சபித்தார். அதனான் அவர் வெகுண்டாராதலின், 'அவன் செய்த நூலைக்கேளற்க' என்றாரென்க

**நச்சினார்க்கினியர்**

## இறையனாரகப்பொருளுரை வரலாறு

அக்காலத்துப்பாண்டியனாடு பன்னிருயாண்டு வற்கடஞ்சென்றது. செல்லவே, பசிகடுகுதலும் அரசன் சிட்டரையெல்லாங்கூவி, "வம்மின், யான் உங்களைப் புறந்தரகில்லேன்; என்தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயினஞான்று என்னையுள்ளி வம்மின்" என்றான். என, அரசனைவிடுத்து எல்லாரும் போயினபின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்தபின்னர், நாடுமலிய மழைபெய்தது. பெய்தபின், அரசன், "இனி நாடுநாடாயிற்றாகலின் நூல்வல்லாரைக்கொணர்க" என்று எல்லாப்பக்கமும் போக்க, எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும்வல்லாரைத் தலைப்பட்டுக்கொணர்ந்து, "பொருளதிகாரம்வல்லாரை எங்குந்தலைபட்டிலேம்" என்று வந்தார். வர, அரசனும் புடைபடக்கவன்று, "என்னை? எழுத்துஞ் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின்பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமேயெனின், இவைபெற்றும் பெற்றிலேம்" எனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயின் அழனிறக்கடவுள் சிந்திப்பான்: "என்னைபாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று; அதுதானும் ஞானத்திடையதாகலான் யாம் அதனைத் தீர்க்கற்பாலம்" என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து, மூன்று செப்பிதழகத் தெழுதிப் பீடத்தின்கீழிட்டான்.

இட்ட பிற்றைஞான்று, தேவர்குலம்வழிபடுவான் தேவர் கோட்டத்தை எங்குந்துடைத்து, நீர் தெளித்துப் பூவிட்டுப் பீடத்தின்கீழ் என்றுமலகிடான் அன்று தெய்வத்தவக்குறிப்பினான், "அலகிடுவன்" என்று உள்ளங்குளிர அலகிட்டான்; இட்டாற்கு அலகினோடும்இதழ்போந்தன. போதரக் கொண்டு போந்து நோக்கினாற்கு வாய்ப்புடைத்தாயிற்றோர்பொருளதிகாரமாய்க்காட்டிற்று. காட்டப் பிராமணன்சிந்திப்பான். "அரசன் பொருளதிகாரம் இன்மையிற் கவல்கின்றானென்பதுகேட்டுச் செல்லாநின்றதுணர்ந்து நம்பெரு

மான் அருளிச்செய்தானாகும்" என்று, தன் அகம் புகுதாதே கோயிற்றலைக்கடைச்சென்றுநின்று கடைகாப்பார்க்குணர்த்தக் கடைகாப்பார் அரசற்குணர்த்த, அரசன், "புகுதுக" என்றுபிராமணனைக்கூவச் சென்றுபுக்குக்காட்ட, ஏற்றுக்கொண்டு நோக்கி, "பொருளதிகாரம்! இது நம் பெருமான் நமதிடுக்கண்கண்டு அருளிச்செய்தானாகற்பாலது" என்று, அத்திசைநோக்கித் தொழுதுகொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, "நம்பெருமான் நமது இடுக்கண்கண்டு அருளிச்செய்த பொருளதிகாரம்; இதனைக் கொண்டுபோய்ப் பொருள்காண்மின்" என, அவர்கள் அதனைக்கொண்டுபோந்து கனமாப்பலகைஏறியிருந்தாராய்வுழி, எல்லாருந் தாந்தாம் உரைத்த உரையே நல்லதென்று சில நாளெல்லாஞ்சென்றன. செல்ல, "நாம் இங்ஙனம் எத்துணையுரைப்பினும் ஒருதலைப்படாது; நாம் அரசனுழைச் சென்று நமக்கோர் காரணிகனைத்தரல்வேண்டுமென்று, கொண்டுபோந்து, அவனாற் பொருளெனப்பட்டது பொருளாய், அன்றெனப்பட்டது அன்றாய் ஒழியக்காண்டும்" என, எல்லாரும் ஒருப்பட்டு அரசனுழைச் சென்றார். அரசனும் எதிர்சென்று, "என்னை, நூலுக்குப்பொருள் கண்டீரோ?" என, "அது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்" என, "போமின், நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று; நுமக்கு நிகராவார் ஒருவர் இம்மையினின்றே" என்று அரசன் சொல்லப் போந்து கனமாப்பலகையின் ஏறியிருந்து, "அரசனும்இதுசொல்லினன்; காரணிகனைப் பெறுமாறு என்னைகொல்"என்று சிந்திப்புழி, "சூத்திரஞ்செய்தான் ஆலவாயில் அவிர்சடைக்கடவுளன்றே! அவனையே காரணிகனைத் தரல்வேண்டுமென்று சென்று வரங்கிடத்தும்" என்று வரங்கிடப்ப, இடையாமத்து, "இவ்வூர் உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திர சன்மனென்பான், பைங்கண்ணன், புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத்தான், ஒரு மூங்கைப்பிள்ளை உளன்; அவனை அன்னனென்றிகழாது கொண்டுபோந்து ஆசனமேலிரீஇக் கீழிருந்து

சூத்திரப்பொருளுரைத்தாற் கண்ணீர் வார்ந்து மெய்ம் மயிர்சிலிர்க்கும் மெய்யாயினவுரை கேட்டவிடத்து; மெய் யல்லா உரைகேட்டவிடத்து வாளா இருக்கும்; அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தினால் தோன்றினான்" என மூக்காலிசைத்தகுரல் எல்லார்க்கும்உடன்பாடாயிற்றாக, எழுந்திருந்து தேவர்குலத்தை வலங்கொண்டு போந்து உப் பூரிகுடிகிழாருழைச் சங்கமெல்லாஞ்சென்று, இவ்வார்த்தை யெல்லாஞ் சொல்லி, ஐயனுவான் உருத்திரசன்மனைத் தரல் வேண்டுமென்றுவேண்டிக் கொடுபோந்து, வெளியது உடீஇ, வெண்பூச்சூட்டி, வெண்சாந்தணிந்து, கனமாப்பலகையேற் றிக் கீழிருந்து சூத்திரப்பொருளுரைப்ப, எல்லாரும் முறையே உரைக்கக்கேட்டு வாளா இருந்து, மதுரை மரு தனிளநாகனார் உரைத்தவிடத்து ஓரோவிடத்துக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர்நிறுத்திப், பின்னர்க் கணக்காயனார் மக னார் நக்கீரர் உரைத்தவிடத்துப் பதந்தொறுங்கண்ணீர்வார் ந்து மெய்ம்மயிர்சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடு த்து, "மெய்யுரை பெற்றாம் இந்நூற்கு" என்றார்.

அதனால், "உப்பூரிகுடிகிழார்மகனுவான் உருத்திரசன் மனுவான் செய்தது இந்நூற்குரை" என்பாருமுளர்; அவர் செய்திலர்; மெய்யுரைகேட்டாரென்க. மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரைகண்டு, குமார சுவாமியாற் கேட்கப்பட்டதென்க. இனி உரை நடந்துவந்தவாறு சொல்லுதும்.

மதுரைக்கணக்காயனார்மகனார் நக்கீரனார் தம்மகனார் கீரங்கொற்றனார்க் குரைத்தார்; அவர் தேனூர்கிழார்க்கு உரைத்தார்; அவர் படியங்கொற்றனார்க்கு உரைத்தார்; அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்கு உரைத்தார்; அவர் மணலூராசியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்க்கு உரைத்தார்; அவர் செல்லூராசிரியர் ஆண்டைப்பெருங்கு மாரனார்க்கு உரைத்தார்; அவர் திருக்குன்றத்தாசிரியர்க்கு உரைத்தார்; அவர் மாதளவனார் இளநாகனார்க்கு உரைத் தார்; அவர் முசிறியாசிரியர் நீலகண்டனார்க்கு உரைத்தார். இங்ஙனம் வருகின்றது உரை.

## நூல் இன்னதென்பது

இனி நூலென்ற சொற்குப் பொருளுரைக்கப்படும்: நூல் போறலின் நூலென்ப; பாவைபோல்வாளைப் பாவை யென்றதுபோல. நூல்போறலென்பது:—நுண்ணிய பல வாய பஞ்சின் நுனிகளாற் கைவன்மகடூஉத் தனது செயற் கைநலந்தோன்ற ஓரிழைப்படுத்தலாம் உலகத்து நூனூ ற்றலென்பது; அவ்வாறே சுகிர்ந்து பரந்த சொற்பரவை களாற் பெரும்புலவன் தனது உணர்வுமாட்சியிற் பிண்டம் படலம் ஓத்துச் சூத்திரமென்னும் யாப்பு நடைபடக் கோத்தலாயிற்று நூல்செய்தலாவது; அவ்வகை நூற்கப்படு தலின் நூலெனப்பட்டது. இனி ஒருசாரார் நூல்போலச் செப்பஞ்செய்தலின் நூலென்ப. இனித் தந்திரம்என்னும் வடமொழிப் பொருளை நூலென வழங்குதல் தமிழ்வழக் கெனக் கொள்க. இது நூலென்ற சொற்குப்பொருள்.

நக்கீரர்.

(உரைநடைத்திரட்டு முற்றிற்று.)

———(o)———

S. Murthy & Co., at the "KAPALEE" Press Madras.